
# மக்கள் நெஞ்சில் எம்.ஜி.ஆர். 11



புலவர் என்.வி.கலைமணி, எம்.ஏ.

வள்ளலார் நூலகம்

# மக்கள் நெஞ்சில் எம்.ஜி.ஆர்.

**(A LUCUBRATION ABOUT M.G.R.)**

புலவர். என்.வி. கலைமணி, எம்.ஏ.,

**வள்ளலார் நூலகம்**
34, பார்த்தசாரதி நகர், 2வது தெரு,
ஆதம்பாக்கம், சென்னை - 600 088

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மக்கள் நெஞ்சில் எம்.ஜி.ஆர். |
| ஆசிரியர் | : | புலவர் என்.வி. கலைமணி, எம்.ஏ., |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பாளர் | : | புலவர் என்.வி. கலைமணி, எம்.ஏ. |
| பொருள் | : | கட்டுரையியல் |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| முதற்பதிப்பு | : | 25, டிசம்பர், 2002 |
| நூலின் அளவு | : | 1/8 கிரவுன் |
| நூல் வெளியீடு | : | வள்ளலார் நூலகம்,<br>சென்னை-600 088.<br>தொலைபேசி : 22554084 |
| ஓவியம் | : | ஓவியர் |
| எழுத்து | : | 12 புள்ளி |
| பக்கங்கள் | : | 152 |
| பைண்டிங் | : | கார்டு போர்டு |
| விலை | : | ரூ.35/ |
| ஒளி அச்சு<br>மற்றும்<br>அச்சிட்டோர் | : | லேசர் இம்ப்ரெஷன்<br>செனாய் நகர்,<br>சென்னை-600 030.<br>தொலைபேசி : 2646 0021 |

# பதிப்புரை

மக்கள் நெஞ்சில் எம்.ஜி.ஆர். என்ற இந்த நூலை வள்ளலார் நூலகத்தின் வெளியீடாக வருவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றோம்!

கோட்டையிலே ஒரு 'குறிஞ்சி' மலர்க் காலம் கொலு வீற்றிருந்த புரட்சித் தலைவர், தமிழக மக்கள் மனதிலே முதலமைச்சர் என்ற கொடியைப் பறக்க விட்டு பவனி வந்தவர் என்பதை தமிழ்நாடு அறியும்!

கலையுலக மன்னாதி மன்னனாக விளங்கிய அவர், தான் நடித்த படங்களை எல்லாம் தமிழக மக்களுக்குரிய மாமல்ல புரத்து அறிவுரை ஓவியங்களாக, நீதி நெறிச் சிற்பங்களாக, வாழ்வியல் தத்துவக் கல்வெட்டுகளாக விட்டு விட்டு மறைந்தார்! அவை படங்களல்ல மக்களுக்கான பாடங்கள்!

அத்தகைய ஓர் அரிய மனிதரைப் பற்றிய நூல் இது. புலவர் என். கலைமணி அவர்கள் எழுதியுள்ள ஒரு புதுமை நோக்கு! ஒரு முறை படித்து பாருங்கள்!

அற்புதமான அணிந்துரைகளை அழகுபட எழுதி அளித்துள்ள திரையுலக காவியக் கவிஞர் திரு. வாலி, சைவ சித்தாந்த கவிமணி திரு. மு.பெ. சத்தியவேல் முருகன் பி.இ., மும்மொழிப் புலவரும், தத்துவக் கவிஞருமான திரு. முருகுவண்ணன், கவிதைச் சித்தர் திரு. கவிஞர் மணிமொழி ஆகியோருக்கும் எமது நன்றியை நவில்கின்றோம்.

வா. அறிஞர் அண்ணா

# எமது எண்ணம்

"மக்கள் நெஞ்சில் எம்.ஜி.ஆர்."' தமிழ் மண்ணிலே இருந்து, கேரளத்தில், பெரும்பான்மையினராக வாழும் பாலக்காடு எனும் எழிலூரிலே - குடிபெயர்ந்தமைந்தவர் - செந்தமிழ் வேளிர் பரம்பரையர்.

தமிழ் பூமியிலே வளர்ந்தார்! புரட்சி நடிகராக மாறினார்! மலர்ந்து மணம் தந்தார் - புரட்சித் தலைவராக!

முத்தான முதலமைச்சராக குறிஞ்சி மலர் போல் பூத்து, தமிழக பூந்தோட்டத்திற்குப் புகழ் மணம் ஏற்றினார்! அழகுக்கழகான மக்களாட்சியை ஏழைகள் வாழ்த்திட நடாத்தினார்!

வாரி வழங்கும் தடக்கையாக வாழ்ந்து, தனக்கென ஒன்றுமில்லாமல், 'காதறுந்த ஊசியும் வாராது காண் கடை வழிக்கே' என்ற, பட்டினத்தாராக அவர் வாழ்ந்தார்.

மாவீரன் அலெக்சாண்டர், பாரையே உலுக்கி எடுத்துப் பாராண்டவன், ஆனாலும், அவனுக்கும் ஓர் ஆசை!

தான், பெரும் பயணம் போகும்போது, சவப்பெட்டியிலே இரண்டு துளைகளை வைத்து, அவன் கைகளை அந்தத் துளைக்களுக்குள்ளே விட்டு வெளியே தெரியும்படி, தனது இரு கைகளையும் ஆட்டிக் கொண்டே மரண ஊர்வலம் நடத்துமாறு ஆணையிட்டார்!

ஏன் தெரியுமா? அவனியையே ஆட்டிப் படைத்த மாவீரன் அலெக்சாண்டர். இறுதியிலே - வெறும் கையோடு தான் திறந்தபடியே போகிறான். பிறந்தபோது ஏதும் கொண்டு வரவில்லை; இறந்தபோதும் ஏதும் எடுத்துச் செல்லவில்லை என்பதை, பொது மக்கள் அறிந்து பாடம் பெற வேண்டும் என்று நினைத்தார்!

பொன்னார் மேனியன் பொன்மனச் செம்மலும், ஒரு செப்புக் காசையும் தனக்கென சேமித்துக் வைத்துக் கொள்ளாமல், தன் பெயராலே எந்த நினைவுச் சின்னத் தையும் நாட்டாமல், மாவீரன் அலெக்சாண்டரைப் போலவே - வெறுங் கைகளோடே மரணப் பயணமானார்!

தமிழ் மண்ணிலே வாழ்வாங்கு வாழ்ந்து, வானுறையும் தெய்வமாகிவிட்ட மனிதமானார்! அவருக்குரிய மனிதால யமே இந்த நூல்!

மக்களின் தெய்வமாகிவிட்ட எம்.ஜி.ஆரைப் பற்றிய THESIS அல்ல. இஃது, ஒரு LUCUBRATION ஆகும்.

லூக்யுப்ரேஷன் என்றால், ஒருவரை அல்லது ஒன்றினைப் பற்றி, இதுவரைக் கண்டு, கேட்டு, ஆய்ந்து, அறிந்த, சம்பவங்களைத் - தேர்ந்தெடுத்து, தெளிந்து, அஃது இயம்பும் கருத்தை - விளக்கும் தொகுப்பின் தொகையை, இன்றுவரை வெளிவந்த அதன் சம்பந்தப்பட்ட நூற்களோடு ஒப்பிட்டுப் படித்துத் தேர்ந்து, பகுத்தும் வகுத்தும் ஆழ்ந்து, அகன்ற ஆய்விலக்கியமே இந்த நுண்பணி!

மக்கள் திலகத்தைப் பற்றி ஏராளமான சம்பவங்கள் அனேகமனேகமாக இருப்பினும்; நூல் பெருகி விரியுமே என்ற அச்சத்தால், வாசகர்களுக்கு சுருக்கமாக எழுதப்பட்ட நூல் இது!

படித்துப் பாருங்கள்! உண்மைகள்தாம் இவை என்று, அவரவர் நெஞ்சு உணருமானல், மனம் விரும்பி ஏற்குமா னால், பயன் பெறுங்கள்!

இல்லையென்றால், எவன் இதயம் காழ்ப்பெனும் பாவம் செய்யாத மனமோ - அவன் கரங்கள், என் மீது கற்களை எறியலாம் - வசைகளாகவோ - அவமரியாதை களாகவோ!

எதையும் சுமக்கத் தயார்!! ஏனென்றால், எதையும் தாங்கும் இதயப் பயிற்சியை அளித்த ஏந்தல் - என் அண்ணா அவர்களிடம் ஞானப் பிச்சை ஏந்தியவன் நான்!

சங்க காலம் முதல் இந்த இருபதாம் நூற்றாண்டு வரை, ஏழையாகப் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, உழைப்பால் உயர்ந்து, திரண்ட செல்வம் ஏந்தி, மக்களுக்காக சகல துறைகளிலும் அதை வாரி வழங்கும், ஒப்பாரும் மிக்காரு மற்ற முதலமைச்சராக வாழ்ந்த ஒரு சாதராண மனிதனை, தமிழ் இலக்கியங்களிலே மட்டுமல்ல - உலக இலக்கியங் களிலேகூட இருந்தால், உதாரணத்திற்கு காட்டுங்கள்!

மனிதம் மணக்கும் மனிதாலயமான எம்.ஜி.ஆர். மக்கள் நெஞ்சிலே அன்றும், இன்றும், என்றும் மனிதாபிமான அறமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்.

அன்னைத் தமிழின் ஞானப் பால் அருந்தியதால் ஏற்பட்ட எனது அன்பை, பண்பை அவருக்குக் காணிக்கை யாக்கிக் களிக்கின்றேன்...!

அன்பன்
என்.வி. கலைமணி

## உள்ளே உள்ளவை

பக்கம்

பதிப்புரை ........................................................................ 3

எனது எண்ணம் .................................................................. 4

அந்த நாள் ஞாபகம் ............................................................ 8
காவியக் கவிஞர் வாலி

பொன்மனச்செம்மல் புகழ்பாடும் நன்னூல் ..................... 10
கவிதைச் சித்தர் மணிமொழி

ஞாலம் கமிழும் நூற்பூ ....................................................... 12
மும்மொழிப் புலவர் முருகுவண்ணன்

சித்தாந்த தத்துவக் கவிமணி செந்தமிழ் வேள்விச் சதுரர்........ 15
மு.பெ. சத்தியவேல்முருகன், பி.இ.

எண்ணக்கோயில் ................................................................ 18

கொடியேற்றம் காண்போமா!............................................. 38

அரசியல் அரங்கம் ............................................................. 54

கவின்மிகு கலையரங்கம் ................................................... 77

பொதுமக்கள் அரங்கம் ...................................................... 97



காவியக் கவிஞர் வாலியின்

# "அந்த நாள் ஞாபகம்"

## பாராட்டுரை

'மக்கள் நெஞ்சில் எம்.ஜி.ஆர்.' - இந்த தலைப்பே எனக்கு மிகவும் பிடித்தமானதாக இருக்கிறது. தலைப்பில் உள்ள எம்.ஜி.ஆரின் இருப்பிடம், மெய்யாலுமே மக்கள் நெஞ்சம் தான் என்பதற்காக.

நூலாசிரியர் புலவர் திரு. என். வி. கலைமணி, எழுத்துத் துறையில் பன்னெடுங்காலம் அனல் பறக்க எழுதியவர். தமிழ் சுடும் என்பதை, வரிக்கு வரி அவர் ஏற்றிய வெப்பத்தால் வியர்த்துப் போன பல உள்ளங்கள் அறிய காரணமாயிருந்தவர்.

இந்த நூலைப் படித்த பிறகுதான் திரு. கலைமணி, எழுத்தில் அனலாகவும், இதயத்தில் புனலாகவும் இருப்பதை நான் அறியலானேன்.

இந்த நூலுக்கு என் மதிப்புரையை பெற, அவர் விரும்பியதன் நோக்கம் - ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகள் திரு. எம்,ஜி.ஆரோடு நான் தொழில் ரீதியாக நிரம்ப சம்பந்தப் பட்டிருந்தேன், என்பதாக இருக்கலாம்; அது உண்மையும் கூட.

ஆயினும், நான் பழகிப் பார்த்த அளவில், என் வணக்கத்திற்குரிய பொன்மனச் செம்மல், அரிதாரத்திற்கு அப்பாற்பட்ட அவதாரமாகவே காட்சியளித்தார். அவர் கை 'உடுக்கை இழந்தவன் கை' என்பதை, நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் உடனிருந்து பார்த்தவன்.

இந்த நூலில், எனதருமை அண்ணன் திரு. எம்.ஜி.ஆர். அவர்களது அனைத்து சிறப்புகளும், அழகு தமிழில், உவமானம் - உவமேயங்களோடு, பக்கத்திற்கு பக்கம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

புலவர் கலைமணியின் நடை, இந்த நூலுக்கு மேலும் வலிவும் பொலிவும் சேர்க்கிறது.

இது என் போன்றோரால் சிபாரிசு செய்யப்பட வேண்டிய நூல் அல்ல. இயல்பாகவே, எழுத்து கனமும் கருத்து கனமும் இந்த நூலுக்கு அமைந்திருக்கிறது.

எனவே, பூக்கடைக்கு விளம்பரம் தேவையில்லை.

இருப்பினும், ஒரு சம்பிரதாயம் கருதி இந்தப் பாராட்டு எழுதப் புகுந்தேன்.

வாசித்துக் கொண்டிருக்கும் போது, பல இடங்களில் என் கண்கள் பனித்தன.

அண்ணன் திரு. எம்.ஜி.ஆரோடு பழகிய ஆனந்த மயமான நாட்களை, மனம் மீண்டும் மீண்டும் நினைவிற்குக் கொண்டு வந்து அசைபோடலாயிற்று.

வித்தியாசமான ஒரு மனிதரைப் பற்றி - வித்தியாசமான முறையில் எழுதப் பெற்ற - வித்தியாசமான நூல் இது.


ஏற்கனவேயே, எல்லோராலும் அறியப்பட்ட திரு. எம்.ஜி.ஆரை, இந்த நூல் இன்னும் கொஞ்சம் விரிவாகவே அடையாளம் காட்டுகிறது.

என்னை வாழ்வித்த வள்ளலைப் பற்றிய நூல் என்பதால், என்னுள் தனி மகிழ்ச்சி தளிர்விட்ட போதிலும்...

வாசிக்கும் அனைவருக்கும், அத்தகு மகிழ்ச்சியை இந்நூல் தோற்றுவிக்கும் என்பதில் அய்யமில்லை.

**வாலி**
*16.9.2001*

12, முதல் தெரு, கற்பகம் அவின்யு,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை - 600 028.



# பொன்மனச் செம்மல் புகழ்பாடும் நன்னூல் இந்நூல்!

## அணிந்துரை

வாழையடி வாழையென வந்த வள்ளல்!
வரலாற்று ஏடுகளில் வாழும் அண்ணல்!
ஏழையரின் நெஞ்செல்லாம் நிறைந்தி ருக்கும்
எம்.ஜி.ஆர். புகழ்பாடும் இந்நன் னூலோ
தாழைமணத் தமிழ்பேசும்; தென்றல் வந்து
தாலாட்டுப் பாடவரும்; எழுத்தெல் லாமே
ஆழிமுத்துப் போலொளிரும்; சிந்த வைக்கும்
அமுதூட்டும் கருத்துக்கள் புதைந்தி ருக்கும்!

வல்லிருட்டைத் துடைத்துமுழு மதியம் வானில்
வந்துலவும் காலம்நிலாக் கால மாகும்!
மெல்லினத்துக் கொடிசெடிகள் பூச்சி ரிப்பால்
மேதினிக்கே எழில்கூட்டும் வேனிற் காலம்!
செல்வத்தின் செல்வாக்கின் செழுமை யாலே
சோழர்களின் காலம்பொற் கால மாகும்!
சொல்லினத்தை அலங்கரித்த காஞ்சித் தேவன்
தேரோட்டக் காலம்நம் கால மாகும்!

மலைமணியாய் விளங்குவது இமயம்! எங்கள்
மறைமலையோ தமிழ்மலையாய் விளங்கு கின்றார்!
குலமணியாம் அண்ணாவின் வழிந டந்து
குன்றெடுத்த புகழணைத்துத் திரைவா னத்தின்
கலைமணியாய் விளங்கியவர் எம்.ஜி.ஆரே!
கருணைமனத் தேவனவன் புகழைப் பாடும்

கலைமணியால் வடித்துவைத்த இந்நன் நூலை
காலத்தாய் மணிமுடியில் ஏந்து கின்றாள்!

கலைஞர்களில் மணியென்றால் எம்.ஜி.ஆரே!
கனிந்தபுத்தர், ஏசு, லிங்கன் காந்தி யென்னும்
தலைசிறந்த மனிதர்களில் ஒருவ ரெங்கள்
தலைமுறைத் தலையெடுக்கச் செய்த அண்ணா
தலைமைக்குத் தலைவணங்கி வாகை சூடித்
தாரணியில் புகழெடுத்த பொன்ம னத்தார்
நிலவுபுகழ் நிலமீதில் நிலைக்கச் செய்யும்
நேர்த்திமிகு நன்னூலே இந்நூ லாகும்!

'போர்வாளில்' 'திராவிட'னில் கருத்து வண்ணப்
பொன்வேய்ந்தார்; 'மாலைமணி', 'முரசொ லிக்கும்
சீரெழுத்துச் செம்மல்களில் ஒருவ ராகி
செம்மாந்த அண்ணாவின் கொள்கை தன்னை
பாரறியச் செய்துவந்தார்; சுட்டெ ரிக்கும்
எரியீட்டி', 'பகையடிக்கோர்' 'சவுக்க டி'யாய்
வீறுடைய எழுத்துக்கள் படைத்த வர்தான்
வியன்நடையை விரிக்கின்றார்! இந்த நூலில்!

ஏழைகளின் நெஞ்சத்தில் கொலுவி ருக்கும்
ஏந்தலெங்கள் எம்.ஜி.ஆர். மகிமை யிங்கே
வாழுகின்ற மன்பதையின் இதயத் துள்ளும்
வாழ வைக்கும் வரலாற்றுப் புனித நூலை
ஏழிசைப்பண் தமிழெடுத்துப் புலமை வல்ல
ஏந்தலென்றென் என்.வி.கலை மணியார் தந்தார்!
வாழிஇவர் தண்டமிழின் தண்மை போலே
வரலாற்றில் வாழியென வாழ்த்து கின்றேன்

- கவிஞர் மணிமொழி

கவிதைச் சித்தர் மணிமொழி
17/9, பீட்டர் சாலை அரசு அலுவலர் குடியிருப்பு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.



# ஞாலம் கமிழும் நூற்பூ

## அணிந்துரை

அருளாட்சி எனும் மக்கள்
ஆட்சிஅமை பெரும்பான்மை
அரணா யுள்ளோன்;
பொருளாட்சி அற்ற பிறப்(பு)
உற்றதனால் பொழுதெல்லாம்
புறமெய் தேய்ந்த
உருவாட்சி யுடன் எவர்க்கும்
நற்பணிசெய் துயிர்வாழும்
உயர்ந்தோன்; என்றும்
திருவாட்சி உலகெங்கும்
சேர்க்கும்பே ருழைப்பின் சீர்
சிறந்தோன் ஏழை!

ஏழையரின் நிலையுணர்ந்தோர்;
எடுத்துரைப்போர்; இரங்கி அவர்க்(கு)
இசைந்தன் பாக
வாழவென்று வழங்கி மகிழ்
அறிவு-கலைத் துறைமாந்தர்
மற்றும் இங்கே,
வாழையடி வாழையென
வந்தவள்ளல் எனநெஞ்சில்
வைத்துப் போற்றும்

ஏழையரின் நெஞ்சினிலே
இருப்பவருள் ஒருவர் - இந்நாள்
எம்.ஜி.ஆர்தான்!

தனைப்போற்றத் தன்மக்கள்
போதாஎன் றயலவரைத்
தன்பால் ஈர்த்து,
தனைப்புவிக்குள் தனிமுதலாய்ப்
போற்ற, அருங் காலமெண்ணி
தனித்தொண் டாற்ற
தனைநிகர்வே றிலையெனவாழ்
தமிழ் அன்னை விரும்புபவள்போன்ம்
இயற்கை உந்த
முனைந்துவந்தோர் முத்தமிழ்க்கும்
மக்களுக்கும் மொய்புகழ்சேர்
பணிகள் செய்தார்!

புகழ்மொய்த்த கலையுலகப்
பூமான்; பொன் மனச்செம்மல்
எம்.ஜி.ஆரோ...
அகம் யார்க்கும் தமிழாக
தழைக்கவைத்த வேனில் அண்ணா
தடத்தார் ஆனார்;
இகழ்வார்க்கும் பணம் - பதவி
ஈந்துவந்தார்; மக்கள்மனம்
இனிக்க ஆண்டார்!
மகிழ்வுற்றால் ஏழைமக்கள்
மகிழ்ந்தார்! அம் மாமனிதர்
எம்.ஜி.ஆரே!

மாமனிதர் எம்.ஜி.ஆர்.
ஏழைநெஞ்சில் வாழ்கின்ற
வகையைத் தேர்ந்தார்;
பூமியிலே புகழ்பூத்த
மாந்தருடன் உளபொருத்தம்
ஒப்பிட் டாய்ந்தார்;

பாப்புலவர் கலைமணியார்
பழுத்த ஞானத்
தாமரைப்பூந் தாதுகமழ்
தமிழ்இசைச் சொல் வணமெலாம்சேர்த்(து)
இந்நூல் தந்தார்!

நூலிதனைக் குறித்து சொல
வேண்டுமெனில் ஒருநூறு
நூலாம் இந்நூல்!
காலமெலாம் ஏழைநெஞ்சில்
வாழ்கின்ற எம்.ஜி.ஆர்.
வாழ்வைக் காட்டும்
கோலமிடும் எழுத்துநிற
மாலையிது, வள்ளலார்
கொடியில் பூத்து
ஞாலமெலாம் கமழ்நூற்பூ!
ஞானக்கைத் தலம்சேர்க்க
பயனாம்; நன்றாம்!

நன்றெண்ணி, பேசி, நல்ல
தொண்டாற்றி, நாள் - கிழமை
ஏட்டில்; நாட்டில்
நன்றிவிளை அரசியலில்
நற்பணியும் ஆற்றி, நல்ல
நூல்கள் தந்தார்;
இன்றினிக்க மக்கள்
நெஞ்சில் எம்.ஜி.ஆர்.
எனும்நூல் தந்தார்!
பொன்றாமெய்ப் பொருளுடனே
புகழ் வாழ்வும் மணக்க, திரு
அருளால் வாழி!

கவிஞர் முருகுவண்ணன்

9, பட்டேல் சாலை, பெரம்பூர்,
சென்னை - 11. போன் : 25512992



*சித்தாந்த தத்துவக் கவிமணி*
*செந்தமிழ் வேள்விச் சதுரர்*

**மு.பெ. சத்தியவேல் முருகன், B.E.,**

## அணிந்துரை

வள்ளுவர் வீடு, வள்ளுவர் யாருடனோ உரையாடி கொண்டிருக்கிறார்.

‘அப்பா! பார்ப்பதற்கு?’ - ‘கண்’
‘கேட்பதற்கு?’ - ‘செவி’
‘நுகர்வதற்கு?’ - ‘நாசி’
‘சுவைப்பதற்கு?’ - ‘நா’
‘உணர்வதற்கு?’ - ‘உடம்பு’

‘இதுவரை நம் உடலிலுள்ள பொறிகள் ஐந்தினுடைய பயன்களை சரியாகச் சொன்னாய். உடம்பில் மிக இன்றியமையாத உறுப்பு தலை. தலை எதற்கு?

‘............’

‘என்ன விழிக்கிறாய்? சொல்கிறேன் கேள். பொறி புலன்களோடு உடலை அளித்து உதவிய இறைவனை, நன்றியுடன் எண்ணிக் கும்பிடுவதற்குத்தான் தலை. பார்வையில்லாதவன் குருடன்; காது கேளாதவன் செவிடன்; காலில்லாதவன் முடவன்; அதுபோல, இறைவனைக் கும்பிடாதவன் - தலை இல்லாதவன்.

‘கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை’

உடலில் ஒவ்வொரு பொறிக்கும், உறுப்பிற்கும், உறுப்பில் தலைக்கும் பயனை வள்ளுவர் கூறியதுபோல, கையின் பயன் கொடுப்பது. உலகில் பலர். கையின் பயன் வாங்குவது என்று, மதி மயங்கி வாழ்கின்றார்கள். உலகில் மிக

இழிந்தது வாங்குவதற்காக நீட்டப்படும் கை. 'ஈயென இரத்தல் இழிந்தன்று' என்று புறநானூறு கூறுகின்றது.

ஆனால், கையிருந்தும் கையின் பயனை அறியாத கோடிக் கணக்கான மூடவர்களிடையே, மக்கள் திலகம் ஒருவரே கையராக - பெருந்தகையராக, அனைத்துயிர் உள்ளங்களிலும் அமர்ந்திருக்கிறார் என்பது, கிழக்கில் உதிப்பது சூரியன் என்ற கூற்றைப் போல - மாற்ற முடியாத, மறுக்க இயலாத உண்மை.

எல்லோருக்கும் இதயம் கையளவாக உடம்பினுள் இருக்கையில், பொன்மனச் செம்மல் மட்டும் உடம்பே இதயமாகப் பிறந்து விட்டவர். இவரைப் பற்றி ஒரு நூல் என்ன, ஓராயிரம் நூற்கள் எழுதலாம்.

ஒரு புலவனின் பேனா எப்போது துள்ளி ஓடும்? ஒரு கொடை வள்ளலின் குணங்களைப் புகழ்ந்து கூற அமரும்போது, அவனது பேனா அனாயாசமாகத் துள்ளிச் சுழலும். இதனை உண்மை என்கிறது எனது ஆருயிர் நண்பர் புலவர் என்.வி. கலைமணி எழுதியுள்ள 'மக்கள் நெஞ்சில் எம்.ஜி.ஆர்.' என்ற நூல்.

'என்றும் இழியாதென் பாட்டு' என்று ஔவை மார் தட்டியதுபோல, என்றும் அழியாத எண்ணக் கோவிலை எழுப்பி, அதில் உள்ளுரை தெய்வமாக எம்.ஜி.ஆரை அமர்த்தியுள்ளார் ஆசிரியர். கோவில் என்றால் கொடியேற்றம் உண்டே! கொள்ளை கொள்ளும் தமிழில் கொடியேற்றம் செய்து விட்டு, கோவிலுக்குள்ளே சுற்றிக் காட்டுகிறார் புலவர். கோவிலுக்குள்ளே அர்த்த மண்டபம், மகா மண்டபம், நிருத்த மண்டபம், கருவரைக் கோயில் போன்றவை இருக்குமல்லவா? இதோ புலவர் அரசாங்கம் அரங்கமாகச் சுட்டிக்காட்டி நம்மை அழைத்துச் செல்கின்றார்.

இந்தக் கோயிலில் நுழைந்தவுடன் நம்மை வரவேற்பது அரசியல் அரங்கம். அதனை ஒட்டிக் கருத்தைக் கவரும் கவின்மிகு கலையரங்கம். அடே! காட்சிக் கெளியராக வாழ்ந்த வரைக் காண இதோ வந்து விட்டோமே கருவறைக்குள். இதோ!

பொது மக்கள் அரங்கம் என்ற கருவறை! இதில்தான் எம்.ஜி.ஆர். எண்ணக் கோவிலின் எழில்மிகு தெய்வமாக வீற்றிருக்கின்றார்!

இந்தக் கோவிலைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரும் நமக்கு. ஒன்று மட்டுமே உள்ளத்தில் நிலைத்து விடுகிறது. அது எண்ணக் கோவிலைப் புலவர் நமக்கு அறிமுகப்படுத்தும்போது கூறியது : 'மனிதம் மணக்கும் மனிதாலயம் இது!''

இந்த எண்ணக் கோவிலைப் புலவர் ஏற்றமிகு சொற்களால் எண்ணி எண்ணி எடுத்து, அழகு தமிழில் குழைத்து, கவிதைப் பூச்சு பூசி, கவின்மிகு ஆலயமாகக் கட்டி முடித்திருக்கின்றார். பொன்மனச் செம்மலுக்குப் புலவர் செம்மல் புத்தகக் கோயிலைப் புதுக்கி இருக்கின்றார்! நூல் முழுவதும் புலவரின் தத்துவச் செறிவும், தன்னேரிலாதத் தமிழும் தனிமணம் வீசுகின்றன.

*பாமரர்களின் நீதிப் புத்தகமாகத் தம் படங்களை வகுத்தும் வாழ்ந்தும் காட்டியவர்க்கு, சாமரம் வீசியிருக்கிறார் சதுரத் தமிழால்! வாழ்க புலவர்! வாழ்க எம்.ஜி.ஆர். வளர் புகழ்!*

*சாற்றுகவி*

கலைமணியாம் மக்கள் திலகமவர் வாழ்த்திக்
கலைமணியார் சொற்கோவில் கட்டி - நிலமதனில்
செந்தமிழ்க்கும் சோராப் பெருங்கொடைக்கும் செய்தனரே
அந்தமிலா அன்புப் பணி

இங்ஙனம்
**மு.பெ. சத்தியவேல் முருகன், பி.இ.,**
20.10.2001

சேக்கிழார் செந்நெறிக்குடில்,
மனை எண் : 1,, 11வது தெரு விரிவு,
புதுக் குடியிருப்பு, ஆதம்பாக்கம், சென்னை - 88



# எண்ணக் கோவில்!

மக்கள் நெஞ்சில் கோட்டமாக நிலைபெற்று விட்ட எம்.ஜி. ஆர். சதுக்கத்திலே இருந்து - எழுதுகின்றேன்.

காலமாகி விட்ட மக்கள் திலகம் கல்லறையிலே இருந்து, இந்தக் கண்ணீர்க் காவியத்தைத் தீட்டுகின்றேன்.

வங்கக் கடலலைகள் எம்பி எம்பி, எழுந்து விழுந்து, மடிந்து புரண்டு உருண்டு, திவலைகளைத் தெறிக்கின்றன!

நானும் எனது கண்ணீர்த் துளிகளை உகுத்து, சிந்திச் சிதறிக் கிறுக்குகின்றேன்!

தமிழக மக்களின் இதய நாயக னாக நடமாடிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் கடந்த கால நினைவுகளை, என் சித்தெண்ண வாசலிலே நடமாட விடுகின்றேன்.

அதனால், இந்த படைப்பிலக்கியத்தைச் சிறு ஓவியமாக வரைந்து, தமிழர்தம் இதய மலராசனங்களிலே பொன்மனச் செம்மலைக் கொடைக் கோமானாகக் கொலுவேற்றிக் கொண்டிருப்பவர்களுக்காகப் படைக்கின்றேன்.

என் எதிரே கடல்!

என்னைத் தாங்கியிருப்பது தாமரைக் கோட்டத்து மண்!

எனக்கு மேல பரந்த வானம்! எனக்குத் துணை, பரங்கிமலைப் பாரியின் பாசம்!

நான் தன்னந் தனியன்!

மனிதனைவிட உயரமானது ஒன்றுண்டு!

ஒளியால் அதனைக் கணக்கிட முடியாது; ஒலியாலும் கேட்க இயலாது!

உணர முடியுமா அதனை? முயற்சிக்கவில்லை.

உணர்ந்தவர்கள் யாராவது உண்டா? இன்றுவரை அவர்களைச் சந்திக்கவில்லை!

அண்டத்தில் அடங்கியதா அது? அந்த முடிவை இப்போது என்னால் கூற முடியவில்லை!

மனிதாபிமான உயர்ச்சிக்கு - வள்ளண்மைக்கு நடிகரும் நாடாளலாம் என்பதற்கு - இந்தக் கூம்பியத் தாமரைக் கோட்டக் கல்லறையே சான்று!

வாழ்க்கை ஒரு சிறிய இடம்! அதில் விளையாடுகின்ற மா மன்னர்களும், ஏழை மக்களும் இடம் போதாதக் காரணத்தால், இத்தகைய கல்லறைகளுக்குள்ளே நுழைந்து விடுகிறார்கள்!

அத்தகைய கல்லறை மேலே நான்! மிகச் சிறிய ஓரிடத்திலே! சிக்கனமான ஒரு பகுதியிலே!

கல்லறை என்பது வாழ்க்கையின் வடிவம்! கடைசி நாளின் சின்னம்! காண வருவோருக்கு அது ஒரு காவியத் தாஜ்மகால்!

யார், யார், எப்படியெப்படி வாழ்ந்தார்கள் என்பதின் எதிரொலியே அது!

மழைத் துளியைச் சிப்பி தனது வயிற்றுக்குள் ஏற்றுக் கொள்வதைப் போல - மனிதாபிமானத்தைத் தனது இதயத்துள் ஏற்று நடந்த ஒருவர், கல்லறைக் கோட்டத்துள் புகுந்தால், அங்கே 'மனிதம்' மணக்கும்! அது மனிதாலயமாகவும் மாறும்!

உலகம் உவந்து ஏற்றிப் போற்றிடும் தேவாலயமாகவும் அது மதிக்கப்படும் - உணரப்படும்! மனிதனும் தெய்வமாகலாமே!

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"**

- என்ற வள்ளுவப் பெம்மானின் வாழ்வியல் தத்துவம் பொய்யாகுமா?

அதற்கான காட்சியே, இந்த எம்.ஜி.ஆரின் தாமரைக் கோட்டம்! அந்தச் சின்னம் இப்போது கூம்பியத் தாமரையாகக் காட்சி தருகின்றது!

எதிர்காலத்தில் என்று அது மலருமோ.... அன்றும் அது எழிலார்ந்த தோற்றத்தைப் பொலிந்து கொண்டிருக்கும் அல்லவா?

நான் எழுதுவதை நீங்கள் படித்துக் கொண்டிருக் கின்றபோது, நாடு கடத்தப்பட்ட ஒருவனின் நலிங்கிய உள்ளம், இந்த எழுத்துக்களில் இருக்குமோ என்று எதிர்பார்க்காதீர்கள்!

வாழ்க்கைத் திட்டுக்கள் மண்ணிலே உண்டு! சாக்கடல், மக்கட் கடலிலேயும் உண்டு.

கல்லறை உயர்ச்சி தேவையா?

'இந்து', மதத்தினர், அதை ஈஸ்வரன் 'அருள்' என்பர்!

'இஸ்லாமியர்', அல்லாஹ் 'பிச்சை' என்பர்!

'கிறித்தவர்', கர்த்தர் 'கருணை' என்பர்.

'பௌத்தர்', அதைக் கௌதமனின் 'ஓட்டில் ஒட்டாத புளியம்பழமான மாண்புறு எண் வழிகள்' என்பர்!

சமணர், அதை மகா வீரரின் மூம் மணிகள் என்பர்!

ஆனால், நான் அதை மனிதாபிமான மிகுந்த ஒரு நடிகரின் வாழ்க்கையிலே எதிரொலித்த, புகழ்ச் சிகரத்தின் உயரம் என்பேன்!

'மக்கள் நெஞ்சில் எம்.ஜி.ஆர்.' என்ற இந்த எனது சிந்தனை ஓவிய மாளிகைக்குள் நுழையும் ஒவ்வொருவரும், மன சுத்தமாக வர வேண்டும்!

ஏனென்றால், இது ஒரு மனிதாபிமானியின் அடையாளம்!

ஏழை மக்களைப் பூஜித்தவரின் கோயில்! ஆம்! ஏழ்மையைப் போற்றியவருக்காக உருவாக்கப்பட்ட ஞானக் கோயில்!

மதிய உணவுக்காக அலைந்து கொண்டிருந்த இலட்சக் கணக்கான மனிதப் பிஞ்சுகளின் மானிடக் கோயிலல்ல!....... 'கோ'வில்!

அரசியலில், தான் ஏற்றுக்கொண்ட ஒரு தமிழ்ப் பண் பாட்டுத் தலைவரின் நன்றியை மறவாத நாடாண்ட நாயகன்; அடக்கம் செய்யப்பட்ட பண்பாட்டு ஆலயம்!

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை;
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

- என்ற வாழ்க்கைச் சாசனத்தை நமக்கு வரையறுத்த வள்ளுவர் கோட்டத்தின் வாரிசு அது!

இத்தாலிய நகரத்தின் கி.பி. பதினாராம் நூற்றாண்டின் புகழ்பெற்ற சிற்பக் கலைச் சிந்தனையாளர் லொரான் சோ கிபர்டி (Lorenxo Ghiberti) என்பவர்; ஃபிளாரன்ஸ் நகர இயேசு தேவலாயத்தின் கதவுகளிலே செதுக்கிய, சிற்ப வேலைப்பாடு களைக் கண்ட ஓவியக் கலை மேதை மைக்கேல் ஆஞ்சலோ, 'இந்தக் கதவுகள் சொர்க்கத்தின் வாயிலிலே வைப்பதற்குத் தகுதி பெற்றவை' என்று, வியந்து போற்றிய அற்புதக் கதவுகளால் ஆனவை அல்ல!

இந்த எனது எண்ணக் கோவிலின் கதவுகள், பாசுரங்களால் திறக்கப்படுபவை அல்ல! பாசுரம் பாடுகின்ற அருளாளர்கள் அல்லது, தேவார நால்வர்கள் பார்தனிலே இன்று எவருமிலர்! அவர்கள் தோன்றுகின்ற காலமும் அல்ல இது. அதனால், இதயத் தூய்மை என்ற ஒன்று இருந்தாலே போதும். நுழையலாம் உள்ளே!

நாங்கள் எவ்வாறு மன சுத்தமாக உமது எண்ணக் கோட்டத்துள் நுழைவது என்று, திருப்பிக் கேட்காதீர்கள், என்னை!

மனசாட்சியும் - மனிதாபிமானமும் உள்ள எந்த மனிதனும், சுத்தமாகின்றான்!

அவை அற்றவன் அற்பனாகின்றான்! உற்றவன் மனிதனும் தெய்வமாகலாம் என்ற வள்ளுவம் ஆகின்றான்!

மக்கள் சந்தைக்கு நடுவே விலை போகக் கூடிய சரக்குகள் எவ்வளவோ உள்ளன!

அற்பங்கள், இன்று அரசியல் அங்காடிகளில் விலைபோக வில்லையா?

சட்டத்தை மீறுகின்ற சண்டாளர்கள், இன்று பஞ்ச கல்யாணி குதிரைமீது சவாரி செய்ய வில்லையா?

அந்த பஞ்சமாப் பாதகர்கள் பின்னாலே வரும் பரிவாரங்கள், இயற்கையால் படைக்கப்பட்ட ஆன்மாக்களாக இருக்கு மென்று நம்புகிறீர்களா?

'மூளை முளைத்த மிருகங்களே! அனைத்தையும் திறமையாகச் செய்கின்றோம்' என்ற வேதாந்தம், உங்களுடைய கைகளிலே உள்ளது என்ற நம்பிக்கையா?

அந்த ஆத்துமங்களின் வாழ்த்தொலிகள் அனைத்தும், அற்பத்தின் செவிகளுக்கே விருந்தாக அமைவன அல்லவா?

மக்கள் திலகம், பேசும் நிலையிலிருந்த போதும் சரி, சரளமான சொற்களை அச்சடிக்கா நாவோடிருந்த நேரத்திலும்

சரி, அவருடைய பரிவாரங்கள் அற்பத்தின் வாழ்த்தொலிகளைப் பெற்றிட, பயிற்றுவிக்கப்படவில்லை.

தன்னால் இயன்றவரை, தனது ஆட்சித் தேரை இழுக்கும் பரிகளை, அடக்கி ஆளவே அவற்றின் கடிவாளங்களை இழுத்துப் பிடித்தார்!

அவருடைய ஆட்சியின் லகானில் கைநழுவிக் கட்டுடைந்து போன சில காட்டுப் பரிகள், இன்று நடுவீதியிலே கணைத்து அலைவதை நாம் காண்கிறோமே - அதன் தத்துவம்தான் என்ன?

இருண்டுபோன தனது இல்லத்தை ஒளிமயமாக்கிட, கடன் பெற்று எண்ணெய் வாங்கி கொளுத்துக்கின்ற ஓர் ஏழையைப் போல, அந்த வெள்ளி நிலா, 'அதோ தனது தலையைக்' காட்டுகின்றது.

ஒருவன் தனது இதயத்திலே - உண்மை, நேர்மை, நாணயம் இருக்கின்றனவா என்று தேடிப் பார்ப்பதற்காக, எத்தனை நூற்களை, அந்த மனிதன் படிக்கின்றான் தெரியுமா?

சமணம் சமைத்ததைப் பின்பற்றுகின்றான்!

பௌத்தம் போதித்ததைப் பேசுகின்றான்!

இயேசு வழியே இனியது என்கின்றான்!

இஸ்லாமே இத்தனைக்கும் சிறந்தது என்று வாதாடுகின்றான்!

சைவ, வைணவங்களை நூலிழைகூடத் தவறாமல் படிக்கின்றான்! ஓதுகின்றான்! பஜனை செய்கின்றான் - பாவம்.

இறுதியில், ஒன்று துறவியாகின்றான்! அல்லது சமையப் புலவனாகின்றான்! இல்வாழ்வை விட்டு ஒதுங்கியே நிற்கின்றான்!

எதற்காக, எந்தெந்தப் புத்தகங்களை அவன் ஏந்தினானோ! அவை அவன் கைகளிலே கிடைப்பதில்லை!

ஆனால், அண்டத்துக்கே ஆதார விளக்கங்களை அறைகின்றான்! ஆனந்தப் பூர்த்திக்கே வழிகாட்டுகின்றான்!

தலை நீட்டிய அந்த வெண்ணிலாகூட, இப்போது இங்கும் அங்குமாக - புரட்சித் தலைவரின் கல்லறை அருகே, அதோ அலைவதைப் பாருங்கள்!

இந்த அவனியில் எதையோ தேடிடத் தன்னைக் கொளுத்திக் கொண்டதாகத்தான் தெரிகிறது - அலைகிறது அந்த அம்புலி!

ஆனால், அந்த நிலவினால்கூட, இதுவரையில் அந்தக் கல்லறையின் மனிதாபிமான மகாத்மியத்தைப் புரிந்து கொள்ளக்கூடத் திராணி இல்லை போலும்!

உண்மை, நேர்மை, நாணயங்களை, கண்ணியம் கடமை - கட்டுப்பாட்டோடு தேடுகின்ற எந்த மனிதனும், எதையோ தேடி அலைகின்ற தண்நிலவும்கூட, இடம் மாறி இருக்கின்றனவே தவிர, தகுதியில் ஒன்றுதான்!

விண்மீன்களை மிகமிகத் தாராளமாக வாரி இறைக்கின்ற காரணத்தால், வானத்தை வள்ளல் என்று எந்த மடையனும் விளம்ப மாட்டான்!

ஏனென்றால், மண்ணிலே - தீய வழிகளிலே சம்பாதிப்பவர்கள்கூட, இப்படித்தான் எதையெதையோ வாரி இறைக்கின்றார்கள் - பெரும்பான்மையோர்!

அந்த மீன்கள், வானப் பொய்கைக்கா சொந்தம்? இந்த இடத்திலே ஆராய்ச்சித் தேவையில்லை! அதனால் அறிவியல் அசிங்கமாகும் - அவமானப்படும்.

அறவிலை பகர்வோர் அவனியிலே இருக்கின்றார்கள்! அதனைப்போல, வானமும் காட்சித் தருகின்றதோ.....!

ஏ, வானே....! அந்த நிலா உன்னை என்ன செய்தது?

இருண்ட உனது முகத்தைத் தெளிவாக்கி தெரிய வைத்ததே, அதற்கா இந்தப் பரிசு?

எந்த வாளால் அதை இப்படி வெட்டிச் சித்ரவதை செய்தாய்? நாளும் அறுவை செய்கின்றாய்? ஒரு கால வட்டத்திற்கு?

பாவம்....! நாளுக்கு நாள் அதைப் பிறையாக்கி மகிழ்கின்றாயே! செய்ந்நன்றியா இது?

துப்பாக்கியால் தன்னைச் சிதைத்தவனையும், 'அண்ணே! என்ன காரியம் செய்தீங்க...!' என்ற அதிர்ச்சிக் கலக்கத்தோடு அன்புச் சொற்களைக் கொட்டியக் கண்ணியனைக் காண வந்தாயா?

தமிழகத்தின் பண்பாட்டுத் தலைமகனைத் தலைவனாக ஏற்றுக் கொண்டதால், தனது கட்சிக்கு அவர் பெயரையே, சூட்டினார்.

அக் கட்சியின் கொடியிலே அந்த அறிஞர் திலகத்தையே சின்னமாகப் பொறித்தார்!

சாகும் வரை தான் பேசும் ஒவ்வொரு கூட்டத்தின் முடிவிலும், "அண்ணா நாமம் வாழ்க" என முழங்கி, நன்றிக்கு வித்தாக நடமாடிய, அந்த மனிதாபிமானியைத் தேடி அங்குமிங்கும் அலைகின்றாயா, தண்ணிலவே!

ஏ, வானே! வளர வைத்தும், தேய வைத்தும் நீ மகிழ்கின்ற அந்தப் பிறையின் முகத்தில், நன்றிக்கு நனி நல்ல ஒழுக்கமான அண்ணா என்ற ஒளியை ஏற்று, உலகுக்குள் தவழ்கின்ற, அந்த நிலவிலே வள்ளுவத்தைக் கண்டு, கசிந்து, உள்ளம் உருகி, மகிழ்ச்சிக் கண்ணீர் உகுக்கின்றேன்! வேறு என்ன செய்ய, வானமே!

அந்த ஆறுதலைப் பெற்றதனாலே, இந்த எனது எண்ணக் கோயிலைக் கட்டி முடித்திடத் தாமரைக் கோட்டத்து மண்ணிலே, அமர்ந்து, எனது சிந்தனைச் சிற்பங்களைச் செதுக்குகின்றேன்.

எனது சிற்பச் செதுக்கல்களில், இயேசு காலத்துக் கிறித்தவ பாணியான கூரிய வளைவுகள், இரா.

கிரேக்க - ரோமானிய நகரங்களில் காணப்பட்ட வட்ட வடிவுகளாலும் ஆனதாக அமையா!

இத்தாலி நாட்டில் வாழ்ந்த ஓவிய, சிற்ப நுண்கலை வித்தகர்களான, பிரமாண்டே, ரபேல், பல்லாடியோ, மைக்கேல் ஆஞ்சலோ போன்ற சிறந்த கட்டிடக் கலை ஞானிகளாலும் அது நிர்மாணிக்கப்பட்டது அன்று!

பிரான்ஸ் நாட்டு சிற்பப்பிரிய வேந்தன், முதலாம் பிரான்சிஸ் என்பவரால், அழகு நகரான பாரிசில் நிறுவப்பட்ட லோவ்ரி (LOURE) அரண்மனை போன்று அமைந்த கோட்டமுமல்ல!

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கல்லறை மண்டபச் சுவர்களிலே, இத்தாலி நாட்டு லியானர்டோ-டா-வின்சி வரைந்த கல்லறை ஓவியமான 'இறுதி சாப்பாடு' வரையப்பட்டிருக்குமா? என்னக் கேட்காதீர்கள்!

ஓவியக் கலை மாமன்னரான மைக்கேல் ஆஞ்சலோ, சிற்பக் கலை சித்தர் அவர் என்பதை நிரூபிக்க, புனித டேவிட் என்ற ஞானியின் திருவுருவத்தை சிலையாக வடித்துப் புகழ் பெற்றாரே, அதே போன்று, மக்கள் திலகத்தின் சிலையைச் செதுக்கி நிறுத்தப்பட்டதும் அன்று!

வாட்டிகன் சிட்டியின் வனப்பு மிகும் மாளிகையின் உள்ளே அமைந்துள்ள சிஸ்டைன் ஆலயத்தின் மேற்கூரையில், உலகின் தோற்றம் முதல் பிரளயம் வரையுள்ள விவிலியக் கதையை, மைக்கேல் ஆஞ்சலோ ஓவியங்களாகத் தீட்டியுள்ள மாதிரி, எம்.ஜி.ஆர். வாழ்க்கை வரலாறு எழுதப்பட்டிருக்குமா? என்ற கேள்வியை எழுப்பாதீர்கள்!

இன்றைய இந்திய தேசியத்தின் நாயகன், மாமன்னன் அசோகன், தான் செதுக்கியக் கற்றூண் பாறைகளிலே, தர்ம நெறிகளை கல்வெட்டுக்களாகச் செதுக்கி வைத்தானே!- அதுபோல, மக்கள் திலகத்தின் மாண்புறு நெறிகள் ஏதாவது செதுக்கப்பட்டுள்ளனவா? நான் ஊமையாக நிற்கின்றேன்!

உலும்பினி நந்தவனத்திலே பிறந்த கௌதமருடைய கொள்கைகளை விவாதித்திட, இரண்டாம் அசோகன் என்று வரலாற்றால் புகழப்படும் பேரரசன் கனிஷ்கன், அங்கே ஓர்

ஆய்வரங்கம் அமைத்தாற்போல், பொன்மனச் செம்மலின் கொடைமடைப் பெருமைகளைக் கொடி கட்டிப் பறக்கச் செய்திட, எம்.ஜி.ஆர். கோட்டத்தினுள்ளே ஓர் ஆய்வு மன்றம் அமைத்திருக்கின்றாயா?

வரலாற்றாசிரியர்களால் ''பௌத்தத்தின் மார்ட்டின் லூதர்'' என்று அழைக்கப்படும் காஞ்சிபுரம் நாகார்ச்சுனர், சித்தார்த்தரின் சித்தாந்தங்களிலே காலத்திற்கு ஏற்றப் புதுமை களைப் புகுத்தப்பட வேண்டுமென்று, தனது நாவன்மையை அன்று நாட்டினாரே, அதைப்போல ஏழை மக்களுக்கு எவ்வாறு, எப்படி உதவி புரிய வேண்டுமென்பதற்காக, உனது எம்.ஜி.ஆர். தோட்டத்திலே இராம கிருஷ்ண பரமஹம்சரின் மிஷனைப் போல ஓர் எம்.ஜி.ஆர். மிஷின் அமைந்திட இன்று வழி செய்திருக்கின்றாயா?

கனிஷ்கர் காலத்தில், இந்தியாவிற்கு வரவழைக்கப்பட்ட கிரேக்க - ரோமானியச் சிற்பக் கலைஞர்களைக் கொண்டு, இந்தியத் தத்துவத்தில் கிரேக்கத் தோற்றங்களால் வடிக்கப்பட்ட காந்தாரக் கலை அழகு சிலைகளோ, சிற்பங்களோ, உனது மக்கள் திலகம் கோட்டத்திலே மன ஆறுதலுக்காகவாவது செதுக்கப்பட்டு உள்ளனவா?

சிற்பம், ஓவியம், இசை, இலக்கியம் இவற்றில், சித்ரகாரப் புலியாக விளங்கிய முதலாம் மகேந்திரவர்மன் காலத்துக் குகைக் கோயிலாகவா, அந்தக் கோட்டத்தை உருவாக்கியிருக்கிறாய்?

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். பெயரால் அமைந்துள்ள உனது எண்ணக் கோட்டம், பல்லவ மா மன்னனான விசித்திர சித்தன் அமைத்த சித்தன்ன வாசல், தாமரைக் குளம் ஓவியங்களில், ஒன்றாவது அமைக்கப்பட்டதுதானா?

நீ அமைத்துள்ள பொன்மனச் செம்மலின் சிந்தனைக் கோட்டத்திலே, பல்லவச் சக்கரவர்த்தி நரசிம்மவர்மன் நிர்மாணித்த எழில்மிகு மாமல்லபுரத்துக் கடற்கரை பாறைக் கோயில் போல, ஏதாவது சிறுசிறு அழகாலயங்கள் நிறுவப் பட்டுள்ளனவா?

பேரரசர் ஹர்ஷர் காலத்தில், காஞ்சிபுரத்து தர்ம பாலரிடம், சீனத்துப் பயணி யுவான்சுவாங் தத்துவப் பாடங்கள் கேட்ட நாலாந்த பல்கலைக் கழகத்துக் கட்டிடத்தைப் போல, உலகம் வியந்த அந்தக் கல்விக் கோட்டத்திற்கு நிகராக உனது மனக்கோயில் காட்சி தருமா?

சோழர் வரலாற்றில் பொற்காலம் படைத்த மாமன்னன் இராசராச சோழன், அவன் அடையாளமாகத் தஞ்சைப் பெருவுடையார் கோயிலை வானளாவ எழுப்பிச் சாதனைப் படைத்ததால், இன்றும் சரித்திரத்தால் புகழப்படுகிறானே, அந்தக் கோயிலின் சாயலைப் போலவா உனது எம்.ஜி.ஆர். சுவடுக் கோவிலைச் சாதித்திருக்கிறாய்?

வடநாட்டு மன்னர்களை வாகை சூடி, அவர்கள் தலைகளிலே கங்கை நீரைக் குடம் குடமாகச் சுமக்க வைத்து, தனது வடநாட்டு வெற்றியின் நினைவாக, கங்கைக் கொண்ட சோழீச்சுரம் என்ற அற்புதக் கோயிலை அமைத்தானே மதுராந்தகச் சோழன், அத்தகைய வீர வரலாற்றுச் சின்னமாக விளங்குமா உனது எம்.ஜி.ஆர். கோட்டம்?

காவா நாவினாரம் கனக விசயர் என்ற வடநாட்டு மன்னர்கள் தலைகளிலே, இமயக் கற்களைச் சுமந்துவரச் செய்து கண்ணகிதேவிக்குக் கற்பாலயம் கண்டானே, சேரன் செங்குட்டுவன் என்ற புறநானூற்று வீரன், அதற்கு நிகரான மறக் கோட்டமா உனது கோட்டம்?

தில்லை மாநகரிலே தோற்றமளிக்கும் தில்லையம் பலத்திற்கும், திருவரங்கக் கோபுரத்திற்கும் பொன்வேய்ந்தானே, பொன்வேய்ந்த பெருமாள் என்ற பொன்றாப் பெயர் பெற்ற சடையவர்மன் சுந்தர பாண்டின் - அதுபோல, எம்.ஜி.ஆர். கோட்டத்திற்குப் பொன் வேய்ந்தா - அழகும் பொலிவும் ஏற்படுத்தியிருக்கிறாய்?

விசய நகரப் பேரரசரான கிருஷ்ணதேவராயரைப் போன்றோ, மதுரை நாயக்க மன்னர்களைப் போலவோ, தமிழர் சமையப் பண்பாட்டுக் காவலர்களாக விளங்கிட, ஆயிரங்கால் மண்டபங்களோ, வசந்த மண்டபங்களோ, திருமணக் கூடங்

களோ கட்டி, எதிர்கால மக்கள் தங்கி, வியந்து, விழாவெடுத்துப் புகழுமாறு எம்.ஜி.ஆர். காவியத்துள் எழில் மண்டபங்கள் ஏதாவது அமைத்துள்ளாயா?

மொகலாயர் காலத்துக் கட்டிடத்திற்குரிய சான்றுகளைப் போல, தாஜ்மகால், ஜும்மா மசூதி, குதுப்மினார் இன்ன பிற அழகு ததும்பும் நினைவுச் சின்னங்களை நிறுவி, பார்த்தால் பிரமிப்பும், நினைத்தால் வியப்பும் எழவா, எம்.ஜி.ஆர். சிந்தனைச் சின்னத்தைச் செதுக்கி இருக்கின்றாய்?

இல்லையென்றால், இன்றைய எல்.ஐ.சி. கட்டிடத்தைப் பார்க்கும் மக்கள், கழுத்தைப் பின்புறம் சாய்த்து, கண் களிரண்டையும், வானத்தை நோக்கி, காண்கின்றார்களே, அந்த உயர நோக்கையா உனது எம்.ஜி.ஆர். புத்தகக் கோயில் பெற்றிருக்கிறது?

வரலாற்றுக் காலவாரியாக வந்த மன்னர் இனங்கள், உலகில் நிறுவிய கட்டிடக் கலை அற்புதங்களையா செய்திருக் கிறாய் என்ற வினாக்களைத் தொடுத்து, எனது எண்ணப் பணியை ஊனப்படுத்தாதீர்கள்!

மன்னனா நான்? அல்லது அரச பரம்பரையா? கருவூலப் பணத்தை, நினைத்த நேரத்தில் எண்ணியபடி செலவழித்து, மண்ணுலகிலே அற்பதங்களை ஆற்றிட!

எழுத்தை ஆட்சி புரிகின்ற ஓர் ஏழை நான்! என்னாலியன்ற ஓர் எண்ணக் கோயிலை, எனது சிந்தனைகளைக் கொட்டிக் குவித்துக் கண்ணீரோடு எழுதுகின்றேன்! அவ்வளவுதான்!

இந்தக் கோயிலைக் கட்டி முடிக்க, நான் அடுக்கிய எண்ணக் கற்கள், வித்துவத்தால் சூளை போட்டனவல்ல!

என்னையே உணர்ந்து, என்னிலே புதைந்து, அவரோடு பழகிய அன்பு சொற்களால் வெந்த விவேகங்கள், கற்களாக மாறி இருக்கின்றன.

கறை படாத கற்களைக் கொண்டு, கறை சூழா சுண்ணத்தைத் தேர்வு செய்து, கறை காண முடியாத ஏழை

பங்காளரின் இலக்கியக் கோயிலைக் கட்டி முடித்திட எண்ணினேன்!

ஏன் தெரியுமா? அரசியலில் நானும் கறை படா கைகளைக் கொண்டவன்! எந்த பதவியையும், பெறாதவன்! ஏழ்மையில் உழலும் ஓர் எழுத்தாள ஏழை!

எந்த சடையப்ப வள்ளலாவது எனது எழுத்துக்களுக்கு ஏந்தல்களாக மாட்டார்களா?

எண்ணற்ற நூற்களை, தமிழ் காணா வகையில் எழுத மாட்டோமா என்ற ஏக்கத்தால், அலை மோதுகின்றவன் நான்!

அரசியல் கறையுடையவனாக இருந்தால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கல்லறையிலே இருந்து, இந்தக் கண்ணீர்க் காவியத்தை எழுத - எனக்கென்ன பைத்தியமா?

காரிலே பறந்து, கன்னியர் சூழ்ந்து, தன்நலப்புண்ணர் புடைசூழ, தப்புத் தாளப் பக்கமேளங்களுடன், பங்களாவில் இருந்தல்லவா மண்ணின் கோலாகல போகங்களை அனுபவித்துக் கிடப்பேன் - அல்லது எழுதுவேன்!

கற்பனைக்காக நான் இதைக் கழறவில்லை! ஏனென்றால், கற்பனைக்காக நான் எங்கேயும் ஓடித் திரிபவன் அல்லவே!

எப்போதாவது அப்படி இறகுகள் எனக்கு முளைத்தால், நான் மதிக்கின்ற உயிருக்கு உயிரான கவிஞர்கள், எழுத்தாளர் கள், இலாப நோக்கோடு அதனைக் கத்தரித்து விடுவார்கள்!

அவர்களைப் போல, மனிதனாக இருந்து பறவையாக மாறுபவன் - நானல்ல!

பறவையாக இருந்து, நான் மனிதன் ஆனவன்! பறவை என்றால் பொருள் புரிகின்றதா?

என் உயிர்ப் பறவையைத்தான் கூறுகின்றேன்; அது இல்லை என்றால் மனிதன் இல்லைதானே....!

கருவறைக்குள்ளே நான் இருக்கும்போது என்னுடன் இயற்கை பேசிற்று! அதனுடன் நான் பேசவில்லை. அப்போது எனக்கு வாய் இல்லை; காது மட்டும்தான் இருந்தது!

நான் கேட்டதை உங்களிடம் கூறுவதற்காகவே, இந்த எண்ணக் கோயிலை எழுப்பி இருக்கின்றேன்.

கோயிலுக்குள்ளே சிலை இருக்காது. சித்தாந்த வேதாந்தச் சிக்கலுக்கு இங்கே இடமில்லை!

ஆதிக்கும் - அநாதிக்கும் வாதாடுகின்ற எழுத்துக் கூட்டங்கள் இல்லை - இங்கே!

இந்த எண்ணக் கோயிலைக் கட்டிட யார் யாரை நான் நாடினேனோ, அந்த உத்தமர்கள் - நட்பு மறவா சுகானந்தச் செம்மல்கள் - மனச்சுத்தம் உடைய பக்தர்களின் இதயங்கள் - இங்கே இருக்கின்றன!

"நானும்" இருப்பேன், யார் யார் உதவி செய்வார்கள் என்ற ஏழ்மையோடு! என்னோடு இயற்கையும் இருக்கும்.

இந்த நூலுக்கு அடிப்படை என் இறந்த கால எண்ணங் கள், நிகழ்கால அநுபவத்தோடு காதல் செய்யும்போது, எதிர்காலம் வாழ்த்துக் கூறுமோ - வசை பாடுமோ அவைதான்!

புரட்சித் தலைவர் சதுக்கம் இன்று இருக்கலாம். புது ஆட்சிகள் பூக்கும் போதெல்லாம், கவனிப்பாரற்று - வேரற்றுப் போகலாம் - அரசியல் திருவிளையாடல்களால்!

கால வெள்ளத்தால் - கடற்கோபத்தால், இயற்கையின் இன்னல்களால் - அழியலாம்.

கன்னித் தமிழ்ச் சங்கத்தைத் தாங்கிக் கொண்டிருந்த கபாடபுரம் மண் அழியவில்லையா? கவின் புகார் நகர் மூழ்கவில்லையா - கடற்கோள்களால்?

இரண்டாம் தமிழ்ச் சங்கம் பிறந்த தென் மதுரை எங்கே? மாமல்லபுரத்தின் முழு உருவமா இன்று இருக்கிறது?

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தை எழுதிய வரலாற்றுத் துறவி இளங்கோ அடிகள், கோவலன் - கண்ணகி தம்பதிகளை, ஏழு நிலைகளை உடைய எழுநிலை மாடக் கட்டிடத்தில், நான்காவது நிலையில், அவர்கள் பெற்றோர்கள் குடியேற்றினர் என்கின்றார். கீழே மூன்று நிலை, மேலே மூன்று நிலைக்கு நடுவிலே உள்ள இடைநிலைதான் அது!

ஐந்தாவது நிலைக் கட்டிடம் குளிர் காற்றைக் குறைத்து, மிதப்படுத்தி, கட்டிடத்திற்குள் அனுப்பும் குறுங்கண்களைக் கொண்ட பலகணிகளை உடையதாம்! அதாவது ஏ.சி. சாதனம் போன்ற குளுகுளு அமைப்புள்ள மாடியாம்!

ஆறாம் மாடி, கோடை காலத்தில், தென்றற் காற்றைத் திரட்டி, மாளிகைக்குள் அனுப்பும் சாளரங்களைக் கொண்ட கட்டிடமாம்! அதாவது வெப்பப் புழுக்கம் இருக்காது. மாறாக, சிலுசிலுவென தென்றல் சிலிர்க்குமாம்!

ஏழாம் மாடி, வேயா மாடமாம்! இரவு நேரங்களில், கண்ணகியும் - கோவலனும் தங்கி, வெள்ளுலாவின் - அதாவது முழு நிலவின் இன்பத்தை அனுபவிப்பார்களாம்!

இத்தகைய அரிய - அற்புத - பொறியியல் நுட்பங்களைக் கொண்ட கட்டிடங்கள் கணக்கற்றிருந்த அந்த பூம்புகார் இன்று எங்கே?

காவிரிபூம் பட்டினமும், அயல்நாட்டு - வணிகர்களின் வியாபாரப் பெருக்கமும், பாண்டி நாட்டு முத்து வணிகர்களின் கூட்ட நெரிசல்களும் கொண்ட தொண்டி, கொற்கை, துறைமுக நகரங்களும், கடல் ஏப்பம் விட்டன போக எஞ்சிய இடங்கள்தாமே இன்று உள்ளவை?

இக்கொடுமைகள் அறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் சதுக்கங்களுக்கும் ஏற்படா என்பதற்கு என்ன பாதுகாப்பு? போகட்டும்...!

ஆனால், எவை எப்படி அழிந்தாலும் சரி, எழுத்துக் கோயிலால் உருவான எந்த மனிதாலயமும், மக்கள் மனப் பெட்டகத்துள்ளே எண்ணச் சிலையாக அமையாதா என்ன?

அந்த நூலோவியச் சிலை, தமிழ் மக்களால் வழிவழியாகக் காக்கப்படும் என்ற உணர்வுகளை உருவாக்காவா? இதுதானே அழியாத கற்கோயில் சின்னம்?

எனது இந்த எண்ணக் கோயிலுக்குக் கருத்துப் பரிமாறியவர்களை நான் குறிப்பிட்டே ஆகவேண்டும்!

அவர்கள் ஐவர்! அந்தப் பெயர்களை நான் சொல்லி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை!

ஆம்! தனித்தனியாக இருக்கின்ற - இயங்குகின்ற பஞ்சபூதங்களே! அவை உலகிற்குரிய உயிர்ப்புக்கள் என்பதால், அவற்றை உயர்திணைகளாக்கி வணங்குகின்றேன்!

கூட்டுறவோடு வந்து அவர்கள் கூறினார்களா என்று கேட்காதீர்கள்! கும்பலோடு வந்திருந்தால், நான் உயிரோடு இருந்திருப்பேன்!

அவர்கள் தனித்தனியாகப் பிரிந்தால், 'நான்' இறந்ததாகப் பொருள்!

இதை நான் எழுதும்பொழுது, நான் உயிருடனும் இல்லை; பிறக்கவும் இல்லை.

ஏனென்றால், பூதங்கள் ஒவ்வொன்றும் வந்தும், போய்க் கொண்டும் இருந்தன!

எவரையும், ஏமாற்றலாம்! அந்த ஐந்தை, ஏமாற்ற எவராலும் முடியாது!

வலி கட்டாயமாக, யாராவது ஒருவேளை முயன்றால், அதைக் கண்டு, "பூதங்கள் ஐந்தும் உள்ளே நகும்" என்று, நமக்கு புத்தி கூறுவார் திருவள்ளுவர்!

இந்த எண்ணக் கோயிலை எடுத்தவன் ஓர் எழுத்தாளனா? என்று கேட்காதீர்கள்!

நான் எழுத்தாளன் அல்லன்!!

அதற்காகக் கவிஞனும் அல்லன்!

எண்ணத்தை ஆள்பவன் நான்! எனது ஆட்சியின் திறன், சாதனைகள் இதனுள்ளே இருக்கின்றன!

இதோ, ஒரு "திருத்தொண்டர் மாக்கதை" என்று கூறி விழாவெடுத்து, தெருத் தெருவாகப் பட்டி மன்றங்களோ! பக்திச் சொற்பொழிவுகளோ இயக்க மாட்டேன்!

''திராவிடர் திவ்யப் பிரபந்தம்'', இதுவென இயம்பி, நாலாயிர திவ்யப் பிரபந்த வைணவனாக மாற மாட்டேன்!

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்!'' என்ற திருமூலர் திருவாய் மொழியை ஏற்ற, அறிஞர் அண்ணாவின் ஆன்மீக அடியார் எம்.ஜி.ஆர்.!

''ஆயிரம் தெய்வங்களை உண்டென்று நம்பும் அறிவிலிகாள்'' என்ற பாரதியாரின் அறியாமைப் பட்டியலிலே இருந்து விலகிக் கொண்ட ஆன்மீகர் அவர்!

''உளியிட்ட கல்லையும், புளியிட்ட செம்பையும்'' அவர் போற்றியவர் அல்லர். ''காண வேண்டுமென்று கடன் மலைகள் ஏறிய ஆணவ மதம் பிடித்தவர்'' அல்லர் புரட்சித் தலைவர்.

எதைக் கண்டாலும் இறை சக்தியோடு அணுகுபவர்! அதற்காக, அதே வேலையாக அலைபவரும் அல்லர் அவர்!

''தேங்காய் பழம் பூ வைத்து பூஜிப்பதெல்லாம் பிள்ளை விளையாட்டே'' என்ற அருட்சோதி பெருமானின் கருணை வாரிசு மக்கள் திலகம்!

''மக்கள் குரலே மகேசன் குரல்'', ஏழைகள் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்'' என்ற அரசியல் சமுதாய தொண்டுகளை ஆன்மீகமாக ஏற்றுக் கொண்ட அறிஞர் அண்ணாவின் திருத்தொண்டர் பொன்மனச் செம்மல்.

அண்ணா அவர்களின் தமிழ்த் தத்துவமான 'ஒருவனே தேவன்'' என்பதை, மூகாம்பிகை சக்தியிடம் கண்டவர் அவர்!

ஏனென்றால், எதையும் மன்னிக்கும் பண்பு, தாய்மைக்கு மட்டுமே உண்டு என்று நம்பியவர் எம்.ஜி.ஆர்.

அன்னை மூகாம்பிகையிடம், தனது தாய்மையைப் பார்த்தவர்! தன்னை ஈன்ற சத்தியா தாயிடமும், அதே கருணையைக் கண்டவர்!

அதனால், தனது தாயை மூகாம்பிகையாகவும், அன்னை மூகாம்பிகையைத் தன் தாயாகவும் வணங்கியவர்!

சிதம்பரம் நகரிலே, அறிஞர் அண்ணா அவர்களுக்கு கார் ஒன்று பரிசளிப்பு தந்தனர் அவரது தம்பியர்!

கார் சாவியை வழங்கியவர் அன்றைய புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

மேடையிலே, அறிஞர் அண்ணா, நாவலர், கலைஞர், கவிஞர் கண்ணதாசன், ஈ.வெ.கி. சம்பத், என்.வி. நடராசன், தில்லை வில்லாளன், பொன். சொக்கலிங்கம் உட்பட மற்றும் பலர் அமர்ந்திருந்தனர்.

அப்போது எம்.ஜி.ஆர். பேசுகையில், "கழகத்தில் இன்று தலைவர்களாகி இங்கே அமர்ந்திருப்பவர்கள் எல்லாம், சந்தர்ப்பவசத்தால் தலைவரானவர்கள்" என்றார். திணறினர் - திரண்டவர்கள்!

உடனே, மேடையில், இருந்த கலைஞர், 'ஏன், எங்களைப் பார்த்தால், உனக்குத் தலைவர்களாகத் தெரியவில்லையா?" ஆவேசமாகக் குரல் கொடுத்தார்!

எம்.ஜி.ஆர். மீண்டும் பேசும்போது, "உங்களிடத்தில் எதையும், மன்னிக்கும் தாய் மனப்பான்மை இல்லை. என் தாயிடத்திலே காணப்படும் மன்னிக்கும் மனப்பான்மையை அறிஞர் அண்ணாவிடம் காண்கின்றேன். அதனால்தான் அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டேன்" என்றார்.

அன்று அவர் குறிப்பிட்டதைப் போல, ஒரு தாயின் மன்னிக்கும் மன உணர்வை - தாய்மைச் சக்தியிடம், தாய் குலத்திடம் இருப்பதைப் பார்த்து, அவர் எப்போது பேசினாலும், எங்கே பேசினாலும், "என்னை வாழ வைக்கும் தாய்க் குலமே" என்று தான் பேச ஆரம்பித்தார்!

அதே தாய்மைச் சக்தியை - இறை வழிபாட்டிலும், கண்டு அவர் போற்றியதால், மூகாம்பிகை அம்மையைத் - தன் இறை வழிபாடாக ஏற்றுக் கொண்டார்!

அத்தகைய பழந் தமிழரின் தாய்மைச் சமுதாய மரபு வழிபாடுடைய எம்.ஜி.ஆர். கல்லறையை, நானும் திராவிட

இனப் பண்பாட்டு மரபுப்படி எண்ணக் கோயிலாக ஏற்று எழுதுகிறேன்.

நான் ஓர் ஏழை! அதனால், வரலாற்று மரபு வழிப்படி அந்தந்தக் கால கட்டிடமாக இந்த எழுத்தாலயத்தை எழுப்ப முடியாமற் போனாலும், எழுப்புகின்ற இந்தப் புரட்சித் தலைவரது காவியத்தை, நான்கு பகுதிகளாகப் பிரித்துக் காட்டியுள்ளேன்!

எண்ணங்களை அலைமோத விடுகின்ற நானே, வாசகர்கள் சார்பாக, வாக்குவாதம் நடத்தும் வகையில், 'எண்ணக் கோயில்' என்ற இந்தப் பகுதிக்கு அடுத்து, கொடியேற்றம் என்ற பகுதியை அமைத்துள்ளேன்!

'அரசியல்' அல்லல்படும் காலம் அல்லவா இன்று! அறிவு விரும்பி ஒருவன், எம்.ஜி.ஆர். கால அரசியலைக் கடந்த கால நோக்கோடு பார்த்து, அவனிக்குரிய காட்சிகளாக்கி, அரசியல் அரங்கம் என்று பெயர் சூட்டி இருக்கின்றேன்!

கலையரங்கம் என்ற கட்டிடப் பகுதியிலே, கவர்ச்சி இருக்கின்றதோ, இல்லையோ எனக்குத் தெரியாது! ஆனால், முடிந்தவரை முயற்சி செய்துள்ளேன்!

பொது மக்கள் அரங்கம் என்ற கோபுரத்திற்குப் பொன் வேய்ந்திட எனக்குச் சக்தியில்லை! அதை ஏற்கெனவே, சோழர்களும், பாண்டியர்களும் செய்து முடித்து விட்டனர் - தமிழகத் திருக்கோயில்களுக்கு!

இந்த என் எண்ணக் கோபுரத்திற்கு கருத்துப் பொன்களைக் கலசங்களாக்கி வரிசைக் கட்டியிருக்கின்றேன்!

புரட்சித் தலைவரின் சிறப்ப எண்ணங்கள், கொடை ஓவியங்கள், மனித நேய அழகுகள், அருமைகள், பண்புகள் தமிழனாகப் பிறந்தவர்களுக்குப் பயன்படுமா என்று பாருங்கள்! காரணம், அவர் மலையாளி அல்லர்; செந்தமிழ் வேளிர் மரபாளர்!

சந்தனப் பெட்டிகளிலே அடக்கமாகி விட்ட நமது சான்றோர்கள் தொண்டுகளின் மேல், ஒவ்வொரு மனிதனுக்கும்

பய பக்தியான பாசமோ, அன்போ உருவாகிட வழியமைப்பது - சாகப் போகும் சந்ததியான நம்முடைய கடமை அல்லவா?

இறுதியாக, ஒன்று! மறுபடியம், நினைவுப்படுத்து கின்றேன்; இந்த எண்ணக் கோயிலினுள்ளே மனத் தூய்மையோடு வாருங்கள்!

எதையாவது எண்ணி, ஏற்கெனவே மனதிலே சுமந்துள்ள, ஏதோ, ஒரு காழ்ப்புச் சுமையோடு, அவர் நடிகர் தானே என்ற அலட்சியப் போக்கோடு, இந்த நூலையும், எடை போட்டால் ஏமாந்து போவீர்கள்!

மனிதம் மணக்கும் மனிதாலயம் இது! அவ்வளவுதான் கூறலாம்! வாருங்கள் கொடியேற்ற விழாவினைத் துவக்கி வைப்போம்!

அறிவுலக மேதை சாக்ரடீஸ் அவர்கள், தனது மாணவர் களுடன் வாதப் பிரதிவாதங்களாடிய உரையாடல்களைப் போல காண்போமா....

## அவரே ஒரு கவிதை

நமது எம்.ஜி.ஆர். அவர்கள் பேசும்போது, அழகும், உள்ள உணர்ச்சியும்தான் 'கவிதை' என்று சொன்னார். இதைச் சொல்லும்போது நீங்கள் எல்லாம் கை தட்டி மகிழ்ந்தீர்கள். எதற்காகக் கைதட்டுகிறீர்கள் என்று எண்ணிப்பார்த்தேன். அப்போது தான் அவர் தன்னைப் பற்றிப் பேசினார் என்று புரிந்தது. அது அவருக்குத் தான் பொருந்தும்.

— இரண்டாம் உலகத் தமிழ்நாடு 1968ல் சென்னையில் நடந்தபோது அண்ணாவின் புன்னகை உரை

# கொடியேற்றம் காண்போமா!

அறிவுப் பசியோடு அலைந்து கொண்டிருக்கும் மனித சமுதாயத்திற்கு, கருத்து வளம் கொண்ட ஒருவன், தான் படைக்கும் நூல் விருந்தில் தத்துவங்கள் சிலவற்றை எழுதிக் காட்டுவது மரபு.

அவற்றைப் பற்பல உவமைகளின் வாயிலாக விளக்கு வதும், அவனது கடமைகளில் ஒன்று! சுவைக்காக! சிந்தனைக்காக! பண்புகளைப் பரிமாற்றிக் கொள்வதற்காக!

அதனைப் போலவே, ஒரு புத்தகத்தை எழுதி முடித்தவன், தனது வாசகர்களை வரிக்கு வரி கொண்டு வந்து அறிமுகப் படுத்துவதும், சிந்தனைக்கு வழிகாட்டுவதும் அவனுடைய உரிமைகளாகும்.

ஓர் ஊருக்குப் புதிதாக வந்துள்ளவனை வழிகாட்டு வதாகக் கூறி அழைத்துச் செல்பவன், ஊரோரத்திலுள்ள வளைவான பாதையில் நின்று கொண்டு, வானவில்லைத் தன் தலைக்கு மேலே வைத்திருக்கும் மலையையும் காட்டுவான். தவறி விழுந்தால், தேற முடியாத மடுவையும் காணச் செய்வான்.

நான் இதை ஏன் கூறுகிறேன் என்றால், ''மக்கள் நெஞ்சில் எம்.ஜி.ஆர்.'' என்ற இந்த நூலின் கருப் பொருளாகவும் - முழுப் பொருளாகவும் - உரிய பொருளாகவும் காட்சி தருகின்ற மக்கள் திலகம் அவர்களை, ஆசிரியன் - வாசகர் என்ற, உரையாடலின் மூலம் காட்ட விரும்புவதனாலேயாகும்.

கிரேக்க நாட்டு அறிவுலக மேதை சாக்ரடீஸ், தனது தத்துவங்களை உரையாடல்கள் மூலமாகவே விளக்கினார்! அதற்காக, நான் சாக்ரடீசல்ல! எழுத்தாளன். எண்ண ஆளன்! - அவ்வளவுதான்!

உள்ளத்து உணர்வால். உந்தியெழும் ஆர்வத்தால், கலை உலகக் கண்ணாடி வாயிலாகத் தினந்தோறும் பார்த்து ரசித்த பண்பால், புரட்சித் தலைவரை நீங்களும் நன்கு அறிந்தவர்கள்தாம்!

என்றாலும், இந்த எண்ணக் கோட்டத்தை எழுப்பியவன் என்ற காரணத்தால், அவரைப் பல புதிய கண்ணோட்டங் களோடு உங்களுக்கு அறிமுகப்படுத்த விரும்புகிறேன்.

பிள்ளைக் கனியமுதை தாய்தான் ஈன்றாளென்றாலும், மற்றையோர் மத்தியிலேயும் தனிமையாகத் தவிக்கும்போதும், தனக்கே சம்பந்தமில்லாமல், "நீ என் சேய்தானே! நான் உன் தாயல்லவா?" என்ற கேள்வியைக் கேட்பதை, சிற்சில சமயங் களிலே நாம் கேட்டிருக்கின்றோம் - பார்த்தும் இருக்கின்றோம்!

அன்பான போதும், அவ்வாறு கேட்பாள், ஆத்திரப்படும் நேரத்திலும் ஆர்ப்பரிப்பாள்!

அதற்கு அந்த குழந்தை விடையளிக்குமா என்ன?

இதனைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் 'பைத்தி யக்காரி! அந்த தத்துநடைத் தத்துவத்தை, குறுஞ் சிரிப்பு குறும்பனைப் பெற்றவள் நீதான், என்பதை மறந்து விட் டாயா?" என்று, அந்தத் தாயைக் கேட்பரேயன்றி, கையொலித்தா நகைப்பர்!

தாய் - சேய் பாசம், எவ்வாறு இயற்கையுடன் இணைந் ததோ - அதுபோலவே, மக்கள் திலகத்தின் பண்புகளை, நான் இயற்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றேன்.

புராண - இதிகாசங்களிலே வருகின்ற கடவுள்களே குறை நிறைவுடையவர்களாக சுட்டப்படும்போது, சாதாரண ஒரு மனிதனிடம் குறை நிறைப் பண்புகள் இருப்பன வென்பது, மனித இயல்புகளேயாகும்.

குறைகளை மட்டும், தோளில் சுமந்து, குன்றேறி நின்று, "குவலயமே பார்த்தாயா குறையுடைய ஒரு மனிதனை" என்று, கூக்குரலிட்டுக் கொண்டே இருந்தால், குறையுடையவன், இன்றையச் சமுதாயத் தத்துவப்படி மேலும், பண்பிழந்தவனாவனே தவிர, நிறையுடையவனாக்கப்படான்!

காந்தியடிகளிடம் அமைந்த நல்ல பண்புகள், உலகத்தாலே இன்றும் போற்றப்பட்டு வருகின்றன.

அவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற கோட்சேயிடம் இருந்த தீய பண்பு, அவனியால் இன்றும் வெறுக்கப்பட்டு வருகிறது!

எனவே, ஒரு மனிதனிடம் இயற்கையாகவே சில நல்ல பண்புகள் அமைகின்றன. அவைதாம், அவன் பிறந்த நாட்டுக்கும், மொழிக்கும், நாகரிகத்திற்கும், பொன்றாப் பெரும் புகழைத் தேடித் தந்து விடுகின்றன.

அதுபோலவே, சில தீய பண்புகளும் இயற்கைக்கு விரோதமாக அமைகின்றன! அவற்றால், உலகமே கெட்டு அழிந்தொழியும் அவலமும் உருவாகி விடுகின்றது.

அதனால்தான், ஒரு மனிதனிடம் இயற்கையாக இருக்கின்ற சில பண்புகளை இயற்கையோடு ஒப்பிட்டு, நன்மை தீமைகளை நாடுவதில் தவறில்லை என்று, எண்ணுகின்றேன்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களை 'மலர்' என்று குறிப்பிடுகின்றேன்!

"மலரா!", அட! இது எங்களுக்குத் தெரியாதா? இன்றுவரை நாங்கள் மலரைக் காணாதவர்களா?

கட்டவிழாத மொட்டாக அது இருந்த நேரத்தில், உஷை காலத்தில் ஊதி அவிழ்க்கின்ற தேவதையை மகாகவி காளிதாசரும், நோபல் பரிசு பெற்ற கவிஞர் தாகூரும் எழுதிட - நாங்கள் என்ன படிக்காதவர்களா?

"வைகறையிலே போதாகி, மதியத்தில் அரும்பி - மாலையிலே மலர்கின்ற மலர்" என்று தமிழ் மறை தந்த

வள்ளுவரின் திருக்குறளை யாம் கற்றறியோம் என்று கருதினையோ!

வீதியிலே விழுந்த மலரை எடுத்துக் கொண்டு, "இதனுடைய வாழ்க்கை இவ்வளவுதானா?"

பிறப்பிற்கும், இறப்பிற்கும் காலக் குறுக்கம் உண்டா?"

"இளமை வயதாகின்றதா? இன்பம் துன்பத்துள் ஒடுங்குகின்றதா?"

"சிரிப்பவன் அழுகின்றானா? குயிலிருந்த இடத்தில் கோட்டானின் அவலமா?"

'ச்சே...! இதுதானா வாழ்க்கை!"

"இந்தப் பூ, மணத்தை மட்டும் வழங்கவில்லை!"

"மாளிகையிலே இருந்தபோது மேதினியைக் காண முடியாத எனக்கு. அறிவு மணத்தையும் வீசியிருக்கின்றது!"

"அதனால், இதோ ஏகுகின்றேன் ஏகாந்த இடத்தை நோக்கி!" என்று, மனைவி மக்களை விட்டு விட்டுச் சென்ற, போதி மாதவன் புத்தன் வரலாறும் எமக்குப் புரியும்!" சித்தார்த்தனைப் புத்தனாக்கிய பூவைப் பற்றியும் தெரியும்.

மலரைப் பற்றி எம்மிடம் மறுமுறையும் கூறாதே! வேண்டுமானால் இப்படிக் கூறு.....!"

அந்தப் பூவின் நிலை கண்ட புத்தன். அனைத்தையும் துறந்து, போதி மரத்தில் ஞானத்தைப் பெற்று, புவனத்துக்குப் புதியதோர் அறநெறிகளைப் புகன்றதைப் போல,

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தானிருந்த கட்சி என்ற கசங்கிய மலரைக் கண்டு, ச்சே... இதுதானா அரசியல்..! என்று மனம் நொந்து, அறிஞர் அண்ணாவெனும் போதியின் நிழலிலே அமர்ந்து, புதியதோர் புரட்சி மிக்க அரசியல் சிந்தனைகளைப் பெற்றார்!

அதன் பயனாக, தமிழக மக்களுக்கான அரசியல் பொருளாதார - சமுதாய அறநெறிகளை ஏற்றார்! அதனை

மக்களிடையே பேசி அறிவு மணம் பரப்பினார் என்று வேண்டுமானால் கூறு...!

இதைச் சொல்லாமல், எங்களுக்குத் தெரிந்த உவமையினையே இயம்புவதால், நீர் ஓர் எழுத்தாளரா? என்று வாசகர்கள் என்னை வினவக்கூடும். அல்லவா?

''அப்படியா.....! புரட்சித் தலைவரை நிலவு என்று ஏன் சொல்லக் கூடாது? என்று உங்களைப் பார்த்து நான் கேட்கலாம் இல்லையா?''

''ஏலே...! அல்லியின் அந்தரங்கக் காதலன் அம்புலி! கொல்லிமலைச் சாரலிலே, குளிர் புனலாய் ஊற்றெடுக்கும் அருவியின் தோள் வருடும் வெள்ளிநிலா!''

பாரியின் மகளிர், பறம்பு மலையைத் தன் தந்தையின் பகைவரது தாக்குதலால் கை சோரவிட்டு, தானும் களத்திலே துஞ்சிய ஞான்று.

வேலியற்ற இளம் மொட்டுகளாய்

வெந்தழல் மூட்டியிருக்கும் நெஞ்சினராய்,

துணையற்ற மங்கையராய், துவண்டு

அடவிகடந்து, ஆறு கடந்து, அல்லல் பல கடந்து வந்தனர்!

செந்தமிழ் பெண்பாற் புலவர், தமிழகக் கிழவி ஔவை மூதாட்டி, அப்போது அவ்விரு நங்கையரைச் சந்தித்து, ''பிறிதோர் வெள்ளுலா போழ்தில்'', 'யார் நீவிர்' என்று வினவினார்.

தமிழ்ச் செறிவு கொண்ட அவ்விரு அணங்குகளும்'' ''ஔவையே, கொவ்வைத் தமிழ்க் கனிச் சாறே, நாங்கள் பாரியின் தொட்டில் நிறைந்த கண்மணிகள், அம்மட்டோ...!

'அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்.....!'' என்ற பாடலையே அவ்வணங்குகள் பாட ஆரம்பித்தனர்!

தமிழ்க் காட்சிகள் சுரக்கும் ஔவையின் கண்களில், பாரியைப் பற்றிய அவல நீர் சுரக்க ஆரம்பித்தது!

"புரிந்தது! பறம்புமண் பாவைகளே புரிந்தது! வள்ளல் பாரி, தேரைத்தான் இந்த தேமதுரத் தமிழகத்தின் முல்லைக் கொடிக்கு வழங்கிச் சென்றான்!"

"தமிழ்ப் புலமைச் சுழன்றாடும் தம் மகளிர் இருவரையும்; இறுதியாக - எச்சத்தையும் அன்றோ அவனிக்கு அளித்து அகன்றான் என்று அறிந்தேன்!

காலத்தால், உங்கட்குக் கடனாற்ற நானே வந்திருக் கிறேன், என்று, ஔவையின் வாய் மலர்ந்ததை, அறிந்தவர்கள் நாங்கள் - நிலவையும் புரிந்தவர்கள்! ஆனால், நீ கூற வந்த உவமையின் பொருள் இதுவோ...!

ஆட்சியினரால் மக்கள் வாழ்வு தேய் பிறையாகி வருகிறது. அவர்கள் வாழ்க்கையை வளர்பிறை போல் நாளும் ஒளி கூட்ட வேண்டும்.

இறுதியில், முகிலைக் கிழித்துப் பாலொளியைப் பரப்பும் முழு மதியைப் போன்ற ஓர் ஆட்சியை, அறிஞர் அண்ணா அவர்கள் நடத்த வேண்டும் என்பதற்குரிய ஆக்கப் பணிகளைப் புரட்சி நடிகர் செய்தார்.

அரசியல் துன்பங்களால், தாக்கப்பட்ட மக்கள், அகம் குளிரத் தேற்றி மகிழ வைத்தார்! ஏழையர் வாழ்வு மீது தனது அன்பு ஒளியைப் பாய்ச்சினார்!

மக்கள் மீது கவ்வியருந்த இருள், பரங்கிமலைப் பாரியினுடைய உதவி ஒளியைக் கண்டு பறந்தோடியது.

இவ்வாறு, அவர், வான் நிலவைப் போல நின்று, அரசியல், சமுதாயம் என்ற பேதமில்லாமல் ஒளிபரப்பி வந்த மக்களிடையேதான், "ஓட்டு" என்ற சக்தி இருக்கிறது?

அந்த அரசு சக்தி, நாளை நம்மையும் ஆட்சி பீடத்தில் ஏற்றும் அல்லவா?

அந்த ஆட்சியினால், மக்கள் ஒளியின்பம் பெறுவர் என்பதால், எம்.ஜி.ஆரை நிலவுக்கு ஒப்பிட்டனையோ....!

போகட்டும்! பல கோடியில் ஒருவராக உலவும் மக்கள் தலைவருக்கு, நீ தரும் உவமை இதுதானா?''

அன்று..! அவரை நான் தமிழர் நாகரிகத்திற்குச் சான்றாக ஓடிக் கொண்டிருக்கும் காவிரி நதிக்கு ஒப்பிடுகின்றேன்!

அட...! இலக்கியப் பைத்தியமே! பூமலிந்து கரை சேர்ந்த அமிழ்தத் தமிழோசை தெருவெல்லாம் முழக்கி வரும் தென்றலைக் குளிப்பாட்டும் பொன்னியை யாமறிவோம்!

ஆண்டுகள் பல மாண்டன! எனினும், காவிரிக்குப் பதிகம் பாட, வாழ்த்துக் கூற, பாராட்ட, இலக்கியம் இயற்றிட, செந்நாப் புலவரனைவரும் எடுத்திட்ட எழுத்தாணிகளையும், ஓலை களையும்கூட, யாம் புரிவோம்!

காவிரியிலே மலர் மிதந்து வாராமலிருப்பின், கோவலன் காவிரியை வாழ்த்திப் பாடியிருக்க மாட்டான்!

அவன் பாடாமலிருந்தால், மாதவி மனத்தில் அழுக்காறு அரும்பி இருக்காது!

அழுக்காறு அண்டாமலிருப்பின், கோவலனை அந்த நாட்டியப் பேரரசி மதித்திருப்பாள் - இல்லையா?

ஆனால், நடந்து என்ன? காவிரியில் மலர் வந்தது! வாழ்த்தினான் கோவலன்!

''கனியிருப்பக் காய் கவர்ந்தாள்'' மாதவி! இணக்கம் கணக்குத் தவறியதால் பிணக்காய் முடிந்தது!

இத்தகைய எண்ணற்ற இலக்கியங்களை உருவாக்கிய காவிரியைத் தானே கழறுகிறாய்?

அணை உடைத்த வெள்ளமெனப் பெருக்கெடுத்து ஆடி ஓடி வரும் காவிரியின் புதுப் புனல் போல், எம்.ஜி.ஆரின் பாச வெள்ளம் நாட்டிலே பெருகி, மக்கள் உள்ளங்களிலே அன்பெனும் வளத்தை உருவாக்கி, மாசெனும் மேட்டைச் சமன்படுத்தி, வறுமையெனும் பள்ளங்களைத் தூர்த்து, புகழெனும் அறுவடையைப் பெற்ற 'விவசாயி' அவர்!

குன்றேறி நின்று அதைக் குவலயத்திற்குக் கூறக் காவிரியை உவமைப்படுத்து!

ஆனால், இந்த உவமையும் எங்களுக்குத் தெரிந்தது தானப்பா! புரியம்படி வேறொன்று இருப்பின் புகல்வாயோ...!

அப்படியா...! ஊம்....! கங்கு கரையற்ற நீல வானம் என்று அவரைக் கூறாலாமோ...!

அதுவும் நாங்கள் அறிந்ததுதான்! பொன்மனச் செம்மலின் கொடை உள்ளம் - அன்புள்ளம் - பண்புள்ளம் - மிகவும் விரிந்தது - பறந்தது, என்பதற்காகச் சொல்கிறாய் - இல்லையா? அதுவும் புரிகிறது!

விரிந்த உள்ளத்தை எங்களால் தொட முடியும். ஆனால் - வானத்தை நாங்கள் தொட்டதுமில்லை! - அது தேவையும் இல்லை!

அவ்வாறானால், ஏன், இப்படி அழைக்கக் கூடாது? “தன்நீர்மை குன்றா நெடுங்கடலென்று!”

புரட்சித் தலைவரின் மூத்து போன்ற கருத்துக்கள், பவளம் போன்ற எண்ணங்கள், ஆழ்ந்த அறிவின் காரணமாக ஏற்பட்ட நடுக்கடலின் அமைதி, இவற்றைச் சுட்ட, இந்த உதாரணத்தை நீர் செப்புகின்றீரோ...!

ஆனால், செந்தமிழ் வேளிர் எம்.ஜி.ஆர். அவர்களிடத்தில் ஆளை விழுங்கும் சுறா, திமிங்கலம் போன்ற எண்ணங்கள் எப்போதும் இருந்ததில்லையே!

அப்படியானால், எங்கள் கம்ப்யூட்டர் தவறானது என்கின்றீரா? விஞ்ஞானத்தையே விலா எலும்பு ஒடியத் தாக்குகின்றீரே?

இல்லை, இல்லை...! நீர் போடும் கணக்குதான் தவறு! நன்றாக ஆர, அமர சிந்தித்துப் பேசும்......

உலகத்திலேயே மிகமிக உயரமான இமயமலை என்றால் என்ன? இதனைக் கூடவா மறுத்துரைப்பீர்?

எத்தகைய எதிர்ப்பிற்கும் மக்கள் திலகம் அஞ்சாதவர் என்பதற்காகத்தானே இமயத்தை சமமிடுகின்றீர்! வரவேற்கின்றேன். உமது உவமையை!

ஆனால், மனிதனின் உள்ளம் ஆடுகின்ற உள்ளம்! அந்த ஆட்டத்தை அறிஞர் அண்ணாவின் அறிவுரையால் எம்.ஜி.ஆர். அவர்கள் அடக்கிவிட்டார்.

ஆடாத மலையைவிட, ஆடுகின்ற உள்ளம் அடங்கிவிட்டால், அது ஆடா விட்டால், ஆடாத மலையைவிட 'மாணப் பெரிது' என்று வள்ளுவரே கூறியுள்ளாரே!

மலையைத் தகர்த்து விட்டோம் என்ற மண்டைக் கர்வமோ உமக்கு! அப்படியானால் அதைவிடச் சிறிய உவமைக்கு ஒப்பிட்டுக் கேட்கட்டுமா?

புற் பூண்டுகள் மேலே தூங்கும் மார்கழி மாதப் பனித்துளி என்று புகல்கிறேன்! என்ன சொல்கின்றீர்?

புல் நுனியில், மரகதப் பச்சை நிறத்தோடு ஒளி எழுப்புகின்ற தன்மையைப் பார்த்து, எம்.ஜி.ஆர். அவர்களின் ஒளிமயமான சிறந்த பண்புகளை எண்ணி, இந்த உவமையைத் தேர்ந்தெடுத்தீரோ? என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது உமது உவமையை!

வைகறை - காலையாவதற்கு முன்னால்தான், நீர் கூறும் பனித்துளிக் காட்சி! அடிவானத்தின் விளிம்பை விட்டு, எழு ஞாயிறு எரி ஞாயிறாக மாறும்போது, பனித்துளி மறைந்து விடுகின்றது!

அப்படியானால், எம்.ஜி.ஆர். அவர்கள் எதிர் தாக்குதலால் அழிந்து படுபவரா! இந்த உவமையும் ஈடு இலையே!

பிறகு எதுதான் ஈடு? ஒருவேளை, வெள்ளி நிலாவைச் சுற்றி வரும் விண்மீன் கூட்டமென்று மக்கள் திலகத்தைக் கூறலாமோ!

ஏனைய்யா...! ஒருமைக்கும் பன்மைக்கும் வித்தியாசம் தெரியவில்லையே உமக்கு என்று கேட்கமாட்டேன்!

ஏனென்றால், கேட்பவருடைய கவிதைத் தன்மையை என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது.

நீலப் பட்டாடையில் ரத்தினங்களைப் பதித்து வைத்தால் ஆடைகள்தான் தெரியும். ரத்தினங்கள் புலப்படா!

அதனைப் போல, பொன்மனச் செம்மல், ரத்தினங் களைப் பதித்த ஆடையாக, காட்சிக்கு எளியவராய், பல்லோர் அறிய பாரோர் பாராட்டும் நிலையிலே இருந்தார் என்பதைக் குறிப்பிடத் தானே கூறுகின்றீர்?

அப்படியானால், பகலிலே அவர் பார்க்க முடியாதவரா? உவமக் கோளாறு உமக்கு ஏன் இவ்வாறு வந்தது?

புரட்சி நடிகர் அவர்கள், திரை உலக நட்சத்திரம்! எட்டாத வான வெளியிலே எட்டி நின்று மின்னுபவரல்லர் அவர்!

மக்கள் மத்தியிலே இரவு - பகலென்று பாராமல், ஒட்டி நின்று ஒளி விடுபவர்! அவருக்கு இரவு பகலென்ற பேதமே இல்லை.

அடிவானம் என்று அவரை அழைத்தால் என்ன?

அப்படியானல், அவர் தொட முடியாதவரா?

சித்திரை மாதத்தில் பொழியும் செல்வ மழைக்கு ஒப்பிடலாமோ....!

செல்வ மழைதான் அவர்! ஆனால், ஆபத்து வெள்ளத்தை உண்டாக்கி, எந்த ஊரைப் பாழ்படுத்தினார்? நம்பியவர்களை யாரை நட்டாற்றில் தவிக்க விட்டார்?

தமிழகத்தில் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டபோது - தனுஷ் கோடிக்கு ஓடியவரல்லவா அவர்? ஓர் இலட்சம் ரூபாயை வாரி வழங்கிய வள்ளலல்லவா?

அன்றைய நாணய மதிப்பில் ஓர் இலட்சம் என்றால், இன்றைய தினம் அந்தத் தொகை பத்து இலட்சத்திற்கு ஈடாகாதோ...!

தமிழ்த் தொண்டன் அகத்திய முனிவன் வாழ்ந்திட்ட பொதிகை மலையில் தோன்றிடும் தென்றல் காற்றாக அவரை மதிப்பிடலாமா?

ஓ... மதிப்பிடலாமே! ஏன் தெரியுமா? எந்நாட்டிலும் இல்லாத தமிழ்நாட்டு தென்றல்தான் எம்.ஜி.ஆர்.

யாருக்கு? அவர்மீது காதல் கொண்ட பொது மக்களுக்கு!

தென்றல்தான் அவர், ஏழை மக்களது இதயங்களுக்கு! - திரையுலக ரசிகர்களுக்கு! - அவருடைய மன்றத்து வீரர்களுக்கு!

தோகை விரித்து ஆடுகின்ற மயிலைக் காண்கின்றபோது, தங்க ஒளியும் தோற்றுப் போகும் அவருடைய வண்ண மேனியே எனது நினைவுக்குள் நிழலாடுகின்றதய்யா!

அதனால், அவரை மேகம் கண்ட வண்ணத் தோகை மயில் என்கின்றேன்!

தப்பு தப்பு! அவருடைய தங்க நிகர் உடலொளியை வைத்து ஒரு மனிதனை எடை போடாதே. அழகு ஓர் ஆபத்தான ஆயுதம்!

வேண்டுமானால் இவ்வாறு விளம்பு, பொன்னார் மேனியன் எம்.ஜி.ஆர்.! எந்த வரவு கண்டும் ஆடாதவர்!

மயில் மேகத்தைக் கண்டுதான் ஆடும்! குளிரான எழினி தேங்கி, வானத்தில் இருக்கும்போதுதான், அது ஆடுகின்றது!

வெப்பத்தைக் கண்டு அது ஆடுவதில்லை. பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அப்படியா?

ஊம்...... வசந்த கோகிலம் என்றால், சரியாக இருக்குமா?

மாந்தளிர் உண்ட மத மதப்பிலே பாடுவது கோகிலம்! அதாவது குயில்! பேடு வருகையிலே இன்பம் காண, மாந்தோப்பிலே மட்டும் அது மகிழ்ந்து பாடும்!

மக்கள் திலகம், எதையும் எங்கும் உண்பதில்லையே! இவர் நாடெங்கும் சுற்றிச் சுற்றி, மக்கள் நல்வாழ்வுக்குரிய

கொள்கைகளை மேடை முழக்க இசையோடு எழுப்பிப் பாடியவரல்லவா?

அது மட்டுமா? மக்கள் வாழ்க்கைக்காக, திரைப் படங்களிலே போராடி, அறிவுரை - அநுபவக் கருத்துக்களோடு பாடியும், ஆடியும் - நடித்தும் பேசியும் வந்தவராயிற்றே அவர்!

ஒருகால் அவரை, சித்தன்னவாசல், குடுமியான் மலை ஓவியங்கள் என்று அழைத்து, அவற்றிற்கு ஈடாக ஒப்பிட்டு அழகு பார்க்கலாமே!

பல வண்ணக் கூட்டால் உருவாவது ஓவியம்! அப்போதுதான் அவை அழகாகவும் அமையும். ஆனால் எம்.ஜி.ஆர். பல அரசியல் கட்சிகளின் வண்ணக் கூட்டல்லவே! அண்ணா அவர்களது பண்புத் திறமைகளின் கூட்டு வண்ணம் அவர்.

என்னய்யா இது!..... எதற்கெடுத்தாலும் மறுப்பா? எதைக் கூறினாலும் மறுப்புக்கு மறுப்பா? அட....ச்செ...! ஒருவேளை... உள்ளத்தை உலுக்கி எடுத்து, உலகையே மயங்க வைக்கும் மது என்கின்றீரா?

ச்செச்சே....! அவ்வளவு மோசமான கீழ்நிலைக்கு இறங்க மாட்டேன் நான்! மன்னிக்க வேண்டும்.

இல்லை. உமது எரிச்சலைக் கண்டு நான் அப்படிக் கேட்டுவிட்டேன். எனது அவசர புத்திக்கு வருந்துகின்றேன்! போகட்டும். பிறகு எதை உவமையாகக் கூற வந்தீர்?

இசை! உள்ளத்தை உலுக்குகின்றது! உலகையும் மயக்கி மெய் மறக்கச் செய்கின்றது? அதைக் கூற வந்தேன்?

அப்படியா....! நிரல்படுத்தப்பட்ட சப்த சுரங்களும் தாளக் கட்டுப்பாட்டிற்குள் அடங்கும்போது, அதனை இசை என்று கூறுகிறார்கள்.

தாளம் தவறுகின்ற நேரத்தில் - சுரம் அபசுரமாகின்றது. மாறுபட்ட சுரங்களின் மொத்தத் தொகுப்பு இசை!

ஆனால், எம்.ஜி.ஆர். கட்டுக்கடங்காத எண்ணங்களின் மொத்த தொகுப்பா? இல்லை. இல்லை! அவர் ஒரு சக்தி வாய்ந்த ஜீவ நாதம்!

அதற்குத் தாளங்கள் கிடையாது! கட்டுப்பாடுகளும் இல்லை! அந்த நாதத்தினுடைய உருவத்தை அவரே பல தடவை கூறுவார், "அண்ணா நாமம் வாழ்க, அண்ணா நாமம் வாழ்க", இரத்தத்தின் ரத்தமே, என்னை, வாழ வைக்கும் தாய்க் குலமே'' என்று!

பசுமைப் புரட்சியால் மக்களுக்கு உணவு தரும் வயல், என்று கூறுவதும் தவறா?

பலருக்கும் பயன்படுகின்ற காரணத்தால், வான் வரை வளர்ந்து, மேகத்தை மோகித்து, வானமுதத்தைக் கீழிறக்கி, தன்னுழைப்பால் நீர் தேக்கிப் பலருக்கும் பயன்படுகின்றது வயல்! இதனை எண்ணிக் குறிப்பிட்டாயா வயல் என்று!

ஆனால், அதிலேயும் குறை வைத்து விட்டாயே! வள்ளல் எம்.ஜி.ஆர். இடத்திலே களையும் இல்லை! அதனால் அவர் கெட்ட பெயரும் எடுத்ததில்லை!

புரட்சி நடிகரை வானவில் என்று வருணனை செய்யலாமா?

பெய்யென பெய்தபின் குளிரைடைந்த பூமியில், மக்கள் வானவில்லைப் பார்க்கின்றார்கள். அதன் எழிலால் விழி குளிர இன்பம் துய்ப்பார்கள்.

அதனைப் போல, எம்.ஜி.ஆரும், வானென வாரி வழங்கிய பின், வண்ணத் தோற்றங்களோடு. வியனுலகைப் பார்த்தார் என்ற எண்ணத்தால், இந்த உவமையைக் கூறினீர் இல்லையா?

அப்படியென்ன, அவர் நொடிக்கு நொடி காட்சி தந்து ஒடுங்கி விடுபவரா?

கண்ணுக்கு எட்டிய தூரமெல்லாம் மணல் மேடு தட்டிடும் பாலைவனமா அவர்?

நீர் ஓர் உள்ளாழக்காரர்? பாலைவனத்திலே இருக்கின்ற பாலைவனச் சோலையை நினைத்துக் கொண்டு, இந்தப் பரந்த தமிழகத்தில் எம்.ஜி.ஆர். ஒருவர்தான் வாரி வழங்கும் வள்ளலாக இருந்தார்! எனவே, அவரைப் பாலைவனச் சோலை என்று கூறினால் என்ன, என்ற நினைப்பில் பேசுகின்றீர் இல்லையா?

பாரத்தைச் சுமந்து வரும் ஒட்டகங்களுக்குத் தண்ணீரைத் தந்து, அதன்மீது ஏறி வந்தவர்களுக்குப் பேரீச்சம்பழத்தை மட்டும் கொடுத்தவரல்லர் அவர்!

இந்த நாட்டில், ஒட்டக நிலையிலே பாரம் சுமக்கின்ற மக்கள், ஏழை மக்கள்! அவர்கள் நிலையறிந்தே கருணையோடு திட்டங்களைத் தீட்டி வழங்கினார்!

ஆனால், ஏழை மக்கள் மீது சவாரி செய்வோர் எவரையும் அவர் மதித்ததில்லை!

பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆரை மின்னல் என்று அழைப்போம்!

நீரில்லா நிலம் பிளந்து வெடித்திருப்பது போல, வாழ்விலே ஈரத்தைக் காணாதவர்கள் நெஞ்சம் வெடித்திருக்கும் போது, மழையின் வருகையைக்காட்ட மின்னல் வருவதைப் போல, பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வளிக்க, எம்.ஜி.ஆர். மின்னலெனத் திடீரென்று தோன்றுவார் என்பதற்காகத்தானே இந்த உவமையைக் கையாண்டாய்?

வாழ்க்கை வழியைக் காட்ட வேண்டிய மின்னல், மக்கள் விழிகளைப் பிடுங்கியிருக்கின்ற கதைகளை அவர் எப்போதாவது செய்திருக்கின்றாரா?

சுடர்விட்டு ஒளிவிடும் தீபம் என்றால் பொருந்துமா? எம்.ஜி.ஆரை?

விளக்கற்றம் பார்த்து நுழைகின்ற இருளைக் கிழித்தெறிய, மீண்டும் திரியைத் தூண்டி விடுவது வழக்கம்! வாழ நினைத் தவர்கள், வாழ முடியாதவர்கள் என்ற பட்டங்களைச் சுமந்து, இருள் நோக்கி மருண்டவராய், மருளேற்ற மக்களாய், துவண்டு

சுருண்டு விழுகின்ற நேரத்தில், ஒளி போன்ற கைம்மாறு கருதா உதவிகளால், ஊக்கமும், ஆக்குமும் தந்த ஒன்றால்! அவரை ஒளியென அழைக்கத் துணிந்தனையோ!...

அம்மம்ம...! அவரைப் புரிந்தா எழுதினாய்? திரி மற்றவர்கட்கு ஒளிகாட்டும்! ஆனால், திரியின் கீழ் எப்போதும் இருள் இருக்கும். அவர் உள்ளத்தில் இருளா இருந்தது? இருண்டவன் ஒளி தருவானா?

ஐயா, இறுதியாக ஓர் உவமையாடு நிறுத்திக் கொள்கின்றேன். இதற்கு மேல் என்னால் ஏதும் சொல்வதற்கு இயலவில்லை!

கவிஞர் வோர்ட்ஸ்வொர்த் "குழந்தை ஒரு தத்துவம்" என்றான்! அந்த குழந்தைக்கு ஒப்பிடலாமா எம்.ஜி.ஆரை?

அப்படி வா வழிக்கு! இப்போது கூறுகின்றாயே, இதுதான் உண்மை! இதற்கு மேல்நாட்டுக் கவிஞரிடம் ஏன் கடன் பெற்றீர் உவமையை?

"மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்;
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு"

என்றார் வள்ளுவப் பெம்மான்!

எங்கள் கலைக் குழந்தையின் சிறுகை அளாவிய கூழ் அமிழ்தினும் இனிதாக இருந்தது! அந்த செல்வம் தளிர் நடைபோட்டு, சிறு கையைத் தென்றலிலே மிதக்க விட்டு, வெண் சிறகுக் கூடத்தில் தத்தி நடத்தல் போல நடந்தது!

எறும்புகள் தொடர்ச்சி போலமைந்த புருவங்கள் நெறிந்தன! எள்ளுப்பூ அளவினதாய் எழுந்த நாசியும், வண்டிரண்டு வழி தவறி வந்து, செண்டென விரிந்த தாமரை முகத்தில் குந்தி, இரக்க உணர்வினை இசையாகப் பாடியது!

செம்பவள உதடுகள், முத்துப் பற்கள் பளிச்சிட விரிந்து தமிழர் இதயம் ஒவ்வொன்றிலும் எடுத்தடி வைத்தது!

தாயுள்ளம் கொண்ட நாம், அந்தத் தங்கப் பதுமையை, 'எங்கள் வீட்டுப் பிள்ளை எம்.ஜி.ஆர்" என்றே, ஏற்று

*அரவணைத்து அரியணையிற் ஏற்றினோம்! அந்தக் குழந்தை காலம் ஆனது; மக்களை எல்லாம் அழ வைத்து விட்டு! என் செய்யலாம்!*

*இதுவரை, இயற்கையின் தன்மைகளை எம்.ஜி.ஆரிட முள்ள சில இயற்கைப் பண்புகளோடு இணைத்துப் பார்த்து இறும்பூதெய்தினோம்! கொடியேற்ற விழா தானே இந்த பகுதி!*

*எனவே, எனது எண்ணக் கோயிலினுள்ளே இருக்கும் அரசியல் அரங்கப் பிரகாரங்களைச் சுற்றிப் பார்ப்போமா!*

## வள்ளலுக்கெல்லாம் வள்ளல்

**புயல் மழையால் - தேசம் வரும் இடங்களில் எல்லாம், எங்கள் புரட்சி நடிகர் உதவியினைக் காணலாம். தன்னைத் தேடி வருகிறவரின் கண்ணீரைத் துடைக்கிறவன் வள்ளல். தன்னைத் தேடி வருகிறவரின் துன்பத்தைப் போக்குகிறவன் வள்ளல் ஆனால், புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அப்படியல்ல; சமுதாயத்தில் துன்பப்படுகிறவன் எங்கே இருக்கிறான் என்று தேடிப் போய் அவன் கண்ணீரைத் துடைத்துக் கைகொடுக்கிற எம்.ஜி.ஆர்., வள்ளலுக்கெல்லாம் வள்ளல்.**

*- 1961 ரிக்ஷா தொழிலாளருக்கு மழைக்கோட்டு வழங்கும் சென்னை நகர் விழாவில் அறிஞர் அண்ணா பேசியது*

# அரசியல் அரங்கம்

சமுதாயத்தை, நல்ல நிர்வாகத்தின் துணையால், கட்டுக் குலையாமல் இயங்க வைத்து, வாழ்கின்ற ஒவ்வொரு தனிக்குடும்பத்தையும் இன்பத்தால் மெய் மறக்கச் செய்து, வரி பயமோ - சமூக விரோதிகளின் தாக்குதலோ, பொருளாதாரப் போட்டியினால் நாணயத்தின் எரிச்சல் ஏற்படுத்தலோ, வேற்று நாடுகளின் படையெடுப்போ இல்லாமல், அந்நாட்டு மக்களைப் பயமின்றித் தூங்க வைக்கும் கலையின் பெயர் அரசியல் கலை! அந்தக் கலையை ஆட்சி புரியும் மக்கள் அவைக்குப் பெயர் அரசியல் அரங்கம்!

வளர்ந்து வரும் ஜனநாயகத்தை, பிளேட்டோவின் Ideal State போல; இலக்கியமாக எழுதிப் படிக்க வேண்டிய நிலைக்குக் கொண்டு போகாமல் இருப்போருக்கு, உடனடியாக இன்ப மளிப்பது தேர்ந்த குடியாட்சியின் தத்துவங்களாகும்.

ஒரு நாணயமான அரசியல்வாதி எனப்படுபவன், படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய அரசியல் அரிச்சுவடிகள் இவை.

அரசியல்வாதிகள், முழுக்க முழுக்க நாணயமுள்ளவர் களாக நடமாட வேண்டும்!

இவர்களைக் காண்பது இக்காலத்திலே அரிதென்பதால், அரசியலைத் தொழிலாக ஏற்றவர்கள், தங்கள் நாடகத்தை மக்கள் முன் ஆடும் முன்பு, நாணயமற்ற ரேகைகள் கரத்திலிருந்தால் அவற்றை மறைத்துக் கொண்டு, வஞ்சகத்தின் சுருக்கங்கள் முகத்திலிருந்தால், ஒப்பனையால் திரைபோட்டு, வெளியில் வந்தால்தான், அவர்களது வாழ்க்கை மணம் கமழும் பூங்காவாகத் திகழ முடியும்.

போதை தரும் பதவிகளால் மக்களை சிறிது மறப் பார்களேயானால், அந்த அரசியல்வாதிகளின் ஆயுளை ஏழைகள் மாய்த்து விடுகின்றார்கள்.

இது வரலாற்றின் எச்சரிக்கை! உலகம் முழுவதுமாக நடைபெற்ற சம்பவங்களாக இருந்து வருகின்றன!

அரசியல்வாதி ஒருவனின் இலக்கணத்தைத் தெரிந்து கொள்ளாத வரை, ஒரு கலைஞனின் அரசியல் விவேகத்தை, ஒரு மனிதாபிமான அரசியல்வாதியின் சமுதாய வளர்ச்சித் திட்டங்களை, நோக்கங்களை, மக்களால் அறிந்துகொள்ள முடியாது . என்பதற்காகவே, இவற்றை நான் குறிப்பிடுகின்றேன்.

முழுமை பெற்ற அரசியல்வாதி ஒருவன் குற்றமற்ற வனாக இருந்தாலும்கூட, இன்றைய சுயநல அரசியலரங்கத்தில், அவனை அயோக்கியன் என்று குறிப்பிடுவதில் பலருக்கும் போட்டி ஆசை வந்து விடுகின்றது.

அதனால்தான், உலகின் நகைச்சுவை நாடக ஆசிரியர் என்று புகழப்படும் ஜார்ஜ் பெர்னாட்ஷா அவர்கள், If the voters are fools the legislators will be rascals' என்றார்!

“வாக்காளர்கள் முட்டாள்களாக இருந்தால், மன்ற உறுப் பினர்கள் அயோக்கியர்களாகக் காட்சித் தருவார்கள்” என்றார் அவர்!

முழுமை பெற்ற ஒரு நேர்மையான கலைஞன், தனது எல்லையை விட்டு சிறிது நகர்ந்து, தன்னை வாழவைக்கும் நாட்டை உற்று நோக்க நேர்ந்தால், அந்த நாடு அவனுடைய நடிப்பைக் கண்டு பாராட்டுவது அவனுக்குப் புரிகின்றது!

வறுமையின் சுழற்சியில் இருந்து, தன்னுடைய கலையை ஆர்வத்தோடு பார்க்கின்ற, பாதிக்கப்பட்ட ஏழை மக்கள், வாட ஆரம்பித்தால், பண வசூலைப் பற்றிக் கவலைப்படாத எந்தக் கலைஞனும், அரசியல்வாதியாக மாறி, அந்த மக்களின் மத்தியில் அபூர்வியாகி விடுகின்றான்.

நாட்டின் அகத்தைப் படம் பிடிப்பவன், நாடு வறுமை யிலே இருக்கும்போது, அவன் அதைச் சற்றுத் திரும்பிப்

பார்ப்பானோயானால், உதவி புரிய முன் வந்தால், முற்பட்டால், கலைஞன் அங்கே அரசியல்வாதியாக மாறி விடுகின்றான்.

அரசியல்வாதியினுடைய இலக்கணத்தைக் கூறினேன். கலைஞன் அரசியல்வாதியாக உருவெடுக்கும் வரலாற்றையும் விவரித்தேன்.

அமெரிக்க நாட்டிலே, 'தாமஸ் பெயி'னை நாம் நடிகர் என்று அழைப்பதில்லை. அமெரிக்க விடுதலைக்குப் பாடுபட்ட மாவீரன் என்றே நாம் மதிக்கின்றோம்.

அவர் காலத்திலே இருந்த நடிகர்கள் அனைவரும் கொட்டகைகளுக்குள் இருந்தபோது, தாமஸ் பெயின் மட்டும் அரசியல் போராட்டக் களத்திலே இருந்தார்.

மதுக் கோப்பைகள் ஒன்றை ஒன்றுடன் மோதி, 'நான் உன்னுடைய நன்மைக்காகவே இதை அருந்துகிறேன்' என்று, இருவர் மது அருந்துகின்ற நேரத்தில், அந்த இருவரின் நன்மைக்காகத் தாமஸ் பெயின் தனது வியர்வைத் துளிகளைச் சிந்திக் கொண்டிருந்தார்.

சிறிய கோளங்கள் பெரிய கோள்களைச் சுற்ற வேண்டும்! இது இயற்கையின் நியதி!

அமெரிக்காவைப் பிரிட்டிஷ் தீவுகள் சுற்றியிருக்க வேண்டும். மாறாக, அமெரிக்கா அடங்கியிருக்க வேண்டு மென்று பிரிட்டன் எதிர்ப்பார்ப்பது, கடைந்தெடுத்த சர்வாதி காரம், என்று அவர் வாதாடினார்.

ஏன் இதைக் குறிப்பிடுகின்றேன் என்றால்,

குளுமை கொடுக்க வேண்டியது நிலவுதான்.

வெப்பத்தைத் தரவேண்டியது வெய்யோன்தான்.

பூக்க வேண்டியது பூ தான்!

இனிக்க வேண்டியது கனிதான்

நாட்டைக் காக்க வேண்டியது அரசியல்வாதிதான்

அங்கே நடிகனுக்கு வேலையில்லை!

ஆனால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஒப்பனையின் துணையால், ஒழுங்குற மனனம் செய்த வசனத்தை விளக்கும் முறையில், நடிக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தார்.

அப்படிப்பட்ட அவர், நடிக்கும் கலையோடு, தாமஸ் பெயின் துறைக்கும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

மொழிச் சிக்கலா? புலவர்கள் இருக்க வேண்டிய இடத்திலே - செந்தமிழ் வேளிர் எம்.ஜி.ஆர். இருந்தார்!

பொருளாதாரப் புறக்கணிப்பா? அந்தத் துறையிலே மேதைகள் எனப்படுவோர் பேச வேண்டிய கருத்துக்களை, எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோதும் சரி, தனிப்பட்ட சமயத்திலும் சரி - பேசினார்.

வெள்ளம் புகுந்து நாட்டை வேதனைப்படுத்தியதா? மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் விழிகளில் நீர்த் துளிகள் சுரந்தன.

பாதிக்கப்பட்ட மக்களை நோக்கி ஓடோடிச் சென்று, வேண்டிய உதவிகளைச் செய்து, அவர்களை அவர் அணைத்து கொண்டார்.

அரசு ஆற்ற வேண்டிய மக்களது கடமைகளை - கலைஞனாகிய அவர், அயராது - அலட்சியப்படுத்தாது ஆற்றினார்.

தனது நாட்டிற்கு சீன எதிரியின் தாக்குதலா? இதோ எனது உதவி என்று, எம்.ஜி.ஆர். தன்னுடைய நடிப்பின் உழைப்பிலிருந்து, பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை அவ்வப்போது மனமுவந்து கொடுத்தார்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காமிரா முன்னாலே நின்று கொண்டு, எழுதிக் கொடுத்த வசனங்களை எழுத்தற ஒப்புவிப்பதிலேயே, முழு கவனத்தையும் செலுத்தியவர் அல்லர்.

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். சிறந்த சிந்தனையாளர்; மேடைப் பேச்சாளர்; பீறிட்டுக் கிளம்பிய அவரது உள்ளத்து வீரச் சொற்கள், நேரிட்ட எதிரியின் நெஞ்சத்தைப் பிளக்கும்

குத்தீட்டிகளாகப் பாய வல்லன! அதற்காக, 'சாகவும் தயார்' என்று அவர் சூளுரைத்தவர்!

நான் ஒரு பெண்ணுக்குப் பிறந்தேன். அந்த பெண் இந்த மண்ணின் மானம் காக்கும் மாதா. அவள் என் தாய்! என்று - தாய் நாட்டின் மானம் காக்க மக்களிடம் சென்று போர் எழுச்சி உருவாக்கினார்!

தாய் மண்ணுக்கு ஏற்பட்ட மாசு, என் தாயிற்கு இழைக்கப்பட்ட ஆசு, எனக் குகைக் விட்டுக் கிளம்பிய புலியெனப் புறப்பட்டுப் பகையை முறித்து, வகையான வாகையைத் தேடிட மக்கள் ஆதரவுகளைப் பொதுக்கூட்டங் கள், கலை நிகழ்ச்சிகள், மூலமாக மத்திய அரசுக்குத் திரட்டித் தந்த மறவனின் மறு பெயர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

நிலவின் மேல் சினம் கொண்ட விண்மீன்கள் கோடிக் கணக்கிலே கூடி, திங்களைப் பார்த்து, "எங்களாலேயும் இந்த உலகுக்கு விளக்கேற்ற முடியும்" என்று கூறுவதைப் போன்ற கீழான நிலை, இயற்கைச் சக்திகளிடையேகூட இருப்பதை நம்மால் காண முடிகின்றதல்லவா?

அம்புலி மீது அழுக்காறு கொண்ட விண்மீன்கள், அவனியைப் பார்த்து ஆயிரமாயிரம் கண் கொண்டு கேட் பதைப் போல, "நாங்கள் மட்டும் ஒளி கொடுக்கவில்லையா?" என்று, அவை மின்னத்தான் செய்கின்றன! - அகங்கார பாணியில்!

தொட்டிலிலே இருக்கின்ற குழந்தைகூட, தொடுவானுக்கு மேலே, நடுவானுக்கிடையிலே, வீசியெறியப்பட்ட வெள்ளித் தட்டெனா விளங்கும் வெண்ணிலாவைப் பார்த்துச் சிரிக்கின்றதே தவிர, விண்மீன்களைக் கண்கொண்டு நோக்குவதில்லை!

அதுபோல, தனக்குரிய பண்பால், தாராள மனப்பான்மை யால், சினமறியா நெஞ்சத்தால், குணம் கொண்ட நடத்தையால், இளைஞர் முதல் ஏற்றதோர் குடும்பத் தலைவன் வரை, தன்பால் ஈர்த்துக் கொண்ட புரட்சித் தலைவரை, "கச்சோதம்" என்ற மின்மினிப் பூச்சி ஒளி கொண்ட சில விண்மீன்கள், ஆளும்

கட்சியின் அரசியல் துறையிலும் - கலைத் துறையிலும் அப்போது கேலி பேசின!

நடிப்பால் எம்.ஜி.ஆர். உயர்ந்தார் என்று கணக்குத் தவறிய நடிகர் சிலர், அவரது புகழைக் கொட்டகையிலே கெடுக்க எண்ணினார்கள்!

பண்பால் எம்.ஜி.ஆர். உயர்ந்தார் என்ற எண்ணங் கொண்ட சிலர், அவரது பண்பின் எடையை நாணயமற்றத் துலாக் கோலால் எடை போட்டனர்!

கட்சியால் எம்.ஜி.ஆர். உயர்ந்தார் என்று கருதிய சிலர், அவர் சார்ந்திருந்த கட்சியையே தாக்கினார்கள்!

வள்ளன்மையால் எம்.ஜி.ஆர். உயர்ந்தார் என்று வரம்புக் கட்டிய சிலர், அறத்தை விலை பகர அங்காடிகளிலே நின்றார்கள்!

பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். பிறகு, எதனால் உயர்ந்தார்?

நிலவு எப்படி உயர்ந்தது என்று நமக்குத் தெரியாதோ - அதைப்போல, இவருடைய உயர்வுக்குக் காரணம், எது வென்று நம்மால் அறிந்துணர இயலவில்லை!

ஒரு சிலரின் பொறமைத் தீ, இவரைச் சுட்டபோது, ஒளிவிடும் மக்கள் தங்கமானார் எம்.ஜி.ஆர்.!

சிலரின் வஞ்சகக் குளிர் நடுக்கம் - இவரைத் தாக்கிய போது, புரட்சித் தலைவர் விரைத்து விட்ட வரில்லை.

மனிதனுக்குத் தேவையான - அதுவும் ஓர் ஆண் மகனுக்குத் தேவையான, சிறப்பாக அறிஞர் அண்ணாவின் தம்பிக்குத் தேவையான, வீரம், இவரிடத்தில் குறையாமல் பொங்கி நிமிர்ந்து நின்றது!

நாட்டின் விடுதலைக்கோ, மொழியைக் காப்பதற்கோ, தேர்தல் பிரச்னைகளைத் தெளிவாக்குவதற்கோ தத்துவ ஞானிகள் தனிச் சிந்தனையில் உதயமான நல்ல அரசியலை உருவாக்கு வதற்கோ, மக்கள் அரசியல்வாதிகளை விரும்புகிறார்கள்!

இதுபோன்ற பிரச்னைக்கு எடுத்துக்காட்டாக, மாவீரன் ஜூலியஸ் சீசரைப் படுகொலை செய்துவிட்டு, ரத்தம் உறையாத கட்டாரியோடு ரோம் நாட்டு வீதியில் புருட்டஸ் என்பவன் நின்று கொண்டு பேசும்போது, ஒருவன் குறுக்கே எழுந்து பேச ஆரம்பித்தான்!

புருட்டஸ் பேச்சின் தொடரலையை அவன் குந்தகப் படுத்துகின்றான் என்று எண்ணி, பேச்சைக் கேட்க வந்தவர் களில் ஒருவன், "ஏ, அடிமையே....! அந்தச் சுதந்திர மனிதன் சுதந்திரம் பெற்று தந்த பிறகு, நீ தாராளமாகப் பேசலாம்! அதுவரை, நீ, செவியை அவனிடத்திலே கொடு" என்று, கனல் கக்கும் கண்களுடன் குரல் கொடுத்தான்!

அரசியல்வாதிகள் உள்ளக் கிளர்ச்சியை, உள்ளுணர்ச்சி யைத் தூண்டிவிடும் போதைப் பேச்சுகளைப் பேசுகின்ற போது, குறுக்கே எவன் வந்தாலும், யாராக இருந்தாலும், அவன்மீது மக்கள் கோபப்படுவார்கள்.

ஆனால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பேச வருகின்றார் என்றால், அவ்வாறு சினமோ, சீற்றமோ, அடைவதில்லை. அவரை வெறும் நடிகராக மட்டும் மக்கள் மதித்ததில்லை - தேர்ந்த அரசியல்வாதியாகவும் கருதினார்கள்.

அவருடை பேச்சு, சினிமா கொட்டகையின் வசனமாக மட்டும் கேட்டதில்லை. தத்துவச் சுடரவிழ்க்கும் தீப ஒளியாகத் திகழ்ந்து ஒலித்தது.

தமிழக சட்டமன்றத்திலும் சரி, பொதுக்கூட்டங்களிலும் சரி, இலக்கிய வித்தகர் அவைகளிலும் சரி, அவர் ஆற்றிய சிறப்புரைகள் அதற்குரிய எடுத்துக்காட்டுகளாகவே விளங்கின!

எனவே, எம்.ஜி.ஆர். என்பவர் ஒரு வேடிக்கைப் பொருளு மல்ல - கண்ணுக்கினிய காட்சிப் பொருளுமல்ல - மனத்திற்குரிய கருத்துத் தொகுப்பாகும்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நாட்டிலே ஓர் அமைதியைக் காண விரும்பினார்! எப்படிப்பட்ட அமைதி அது!

பணிமனைக்குச் சென்றவன், மாலை மணி ஐந்தான பிறகும் வரவில்லையே என்று, வழிமேல் விழி வைத்துப் பாவை ஒருத்தி காத்திருந்தாள்!

ஆளன் வருவதைக் கண்டு, அவள் முகம் அன்றலர்ந்த தாமரையாயிற்று!

நெருங்கினாள் நெஞ்சம் நிறைந்த நாயகனை! நிலா முகம் சீதளம் சிந்திற்று! மின்னிற்று செவ்விதழ்கள்!

'வாருங்கள் அத்தான்' என்றாள்!

'வழியெல்லாம் நீயாகத்தான் இருந்தாய்' என்றான் வந்தவன்!

இருவரும் சிரித்தனர்! அந்தச் சிரிப்பைத் தென்றல் ஏந்திற்று! தொட்டிலில் துயிலும் சீதளச் சிறு மழலையின் செவியில் ஊற்றிற்று!

விழித்துத் தானாக சிரித்தக் குழந்தையின் கன்னத்திலே, அப்போது ஒரு குழி விழுந்தது!

விழுந்த அந்த மழலையின் கன்னக் குழியிலே விளங்கிய இருளில், கவிதா நோக்குடையவன் கண்ணுக்கு - ஓர் அமைதி தென்படும்!

அந்த அமைதியை, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ஏழையர் இல்லங்களிலும், நல்லோர் உள்ளங்களிலும், எல்லாக் காலங் களிலும் காண விழைந்தார்!

இவ்வளவையும் கூறி வருகின்ற நானும் ஓர் அரசியல் வாதி தான்! என் வீட்டிலே அந்த மகிழ்ச்சி உண்டா? இல்லையே! சாகும் வரை வாராது போலிருக்கே! எனக்கே இந்த கதி என்றால், ஏழைகளுக்கு என்னவோ.....!

வெறும் தத்துவங்களை மட்டும் உலகுக்குக் கூறி நஞ்சருந்திய மாமேதை சாக்ரடீஸ் காலத்தில், நடிகர்கள் பற்றியும் கலைஞர்கள் குறித்தும், கவிஞர்கள் மேலும் தவறான ஓர் எண்ணமிருந்தது!

அரசியல் அறிஞன் பிளேட்டோவின் வசனங்கள் இதை விளக்குகின்ற நேரத்தில், அனிட்டஸ் என்ற கவிஞனைத் தாறுமாறாகத் தாக்குகிறான் பிளேட்டோ!

“கலைஞர்களால், கவிஞர்களால் நாட்டுக்குக் கிடைத்தது என்ன? அர்த்தமற்றக் கற்பனைகளும் - அருவருக்கும் அங்க சேஷ்டைகளும் - ஒரு நாட்டின் தலைவிதியினையா நிர்ணயிக்கும்?” என்று அவன் தாக்கினான்!

“சிந்தனை வளையத்தில் இவர்கள் நுழையக்கூட முடியாது. நான் உலகத்தை இருகூறுகளாகப் பிரிக்கின்றேன். ஒரு பிரிவினர் அறிவாளிகள்! மற்றொரு சாரார் முட்டாள்கள்!

அறிவாளிகள் என்னைப் போன்றுதான் இருப்பார்கள்! இதற்கிடையில் இருக்கும் எவனையும் நான் மதிப்பதில்லை” என்றான் பிளேட்டோ!

நானும் இதைப் படித்தவன்தான். என்றாலும், கிரேக்கத்து மாவீரன் அலெக்சாண்டரின் வீரம், ஏதென்ஸ் நகரத்து பேரறிஞன் சாக்ரடீசின் தத்துவம், உலகப் பேச்சாளர்களில் தலைச்சிறந்தவர்கள் என்று கருதப்படும் டெமஸ்தனீஸ், சிசிரோ போன்றவர்களின் மேடை முழக்கங்களின் வன்மை, இந்த மூன்றையும் பிளேட்டோ கண்டித்தவை என்பதாகவே உணர்கின்றேன்!

இந்த மூன்று கலைகளும் ஒரு நடிகனிடத்தில் முழுமை யாக இருக்கும்போது, ஒரு காலத்தில் தாக்கப்பட்டவர்கள் பிறிதோர் காலத்தில் தாங்கப்படுகிறார்கள் என்று பொருள் அல்லவா?

ஒரு காலத்தில் மதிக்கப்படாதவர்கள், மற்றோர் காலத்தில் வீட்டுக்கு வீடு படமாக்கப்பட்டு, அவர்களுடைய தலைகளின் பின்புறத்தில் வட்ட ஒளிப் பிழம்பு இருப்பதாகவே, வரைந்து காட்டப்படுகின்றனவே!

இந்த நிலை, சான்றாண்மை, மக்கள் திலகத்திற்கு உருவானதை, யாரால் உருக்குலைக்க முடிந்தது? - மரண மாதாவின் மடியிலே அவர் நீடு துயில் கொள்ளும் வரை?

அதனால்தான், சாக்ரடீசுக்குப் பிறகு வந்தவர்கள், அவனது தத்துவ வழியை விட்டு சிறிது நகர ஆரம்பித்தார்கள்.

சாக்ரடீசுக்குப் பின்னே தோன்றிய உலக நாடகப் பெரும் புலவரான சேக்ஷ்பியர், நடிகர்களைப் பாராட்ட வேண்டும் என்பதற்காகவோ என்னவோ, "இந்த உலகமே நாடக மேடை! நாமனைவரும் அதில் நடிகர்கள்" என்று துணிந்து கூறலானார்!

சாக்ரடீசைத் தவிர்த்தன்று; அவனையும் சேர்த்தே குறிப்பிட்டார் அவர்! நாமும்கூட "நாடகமே உலகம்" என்று சிறுகளத்தூர் சாமா பாணியில் பாடவில்லையா?

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற அறிவுலக மாமேதை அறிஞர் அண்ணா அவர்களும், கலையைப் பற்றி கூற வந்த நேரத்தில், "நாடகம் என்றால் கேவலமாக நினைக் காதீர்! நாட்டின் அகம் தான் நாடகம்" என்று விளக்கமளித்தார்!

இத்துணை உயிரோட்டமான இலக்கியச் செல்வாக்கும், அதன் துணையும் இருக்கும்போது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், ஏன் அரசியல்வாதியாக இருக்கக் கூடாது! என்ற வினாக்களைத் தொடுத்த தமிழக மக்கள், அவரை அரசியலரங்கத்திலே ஏற்றி அமர வைத்து அழகு பார்த்தார்கள்!

நாடகத்தில் வருகின்ற ஓர் ஏழை, துயரமான ஒரு பாடலை மனமுருகப் பாடும்போது, அதைக் கேட்கும் மக்கள் இரக்கப்படுகிறார்கள்.

ஆனால், அதே நிலையிலுள்ள ஓர் ஏழை, நடு வீதியிலே பாடினால், அவனைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை.

அதனால் தான் அந்த ஏழை, 'அம்மா பிச்சை' என்று இயற்றமிழிலே கேட்கின்றான்! அதற்கும் ஈரமில்லாத பெண் களைப் பார்த்து! 'அம்மா பசிக்குதே!' என்று இசைத் தமிழால் பாடுகின்றான்!

அதற்கும் மனமுருகாத மங்கயைர்களிடம் "நாடகமே உலகம் - நாளை நடப்பதை யாரறிவார்?" என்று, தகுதி

நிலையாமையை அவன் நடித்துக் காட்டிப் பிச்சை எடுக்கின்றான்.

தொல்தமிழன் கண்ட பழந்தமிழ் மொழி, இயல்-இசை-நாடகம் என்ற மூன்றும் கொண்ட முத்தமிழ் அல்லவா? இந்த மொழி அருமை வேறு எம்மொழிக்கும் இல்லை என்பதை, ஒருவன் பிச்சை எடுக்கும்நிலை கண்டே நாம் பெருமைப் படலாம்.

முத்தமிழாலும் பிச்சை எடுப்பவனின் மொழியுணர்வை அறியாதவர்கள் மத்தியிலேதான், எம்.ஜி.ஆர். மனிதாபி மானியாக மாறி, ஏழைப் பங்காளரானார்!

அந்த ஏழைகள்தான் அவரை சாகும்வரை மதித்து, அதன் நன்றிக் கடமையாக 'தமிழக முதல்வர்' என்ற அரியாசனத் தையும் அளித்தார்கள்!

பேரறிஞன் பிளேட்டோவைப் போல தாங்களும் அறிவாளிகள் என்று நினைத்துக் கொண்டு, குறிப்பிட்ட அரசியல் கட்சி நடிகர்கள் அரசியல்வாதிகளாக நடமாடுவதைக் கண்டு, கூத்தாடிகள் என்ற கேலிக் கணைகளை எய்தார்கள் சிலர்.

காலம் அவர்களை முட்டாள்களாக்கி விட்டதே என்றுதான் அறிஞர்கள் அனுதாபப்பட்டார்கள்!

பிளேட்டோவை சேக்ஷ்பியர் மறுத்து விட்டான்! இது அறிவுலகத்தின் பரிணாம வளர்ச்சி!

ஜெர்மன் நாட்டிலே பெத்தோவன் என்ற செவிடன் ஒருவன் வாழ்ந்தான்! பெரிய இசை வித்தகன்! அவனும் பிளேட்டோ கூற்றுப்படி வெறுக்கப்பட்டவனாவான்!

ஆனால், உலகத்திற்குத் தேவையான மேலைநாட்டு இசை இலக்கணங்களை, அந்த காது கேளா மேதை இசைஞன் தான் உருவாக்கித் தந்தான்!

நாட்டைக் காப்பதற்காக ஒரு சாதிதான் இருக்க வேண்டும் என்ற மாய்மாலத்தைத் தகர்த்தெறிந்த மாவீரன் பெத்தோவன்!

செருப்புத் தைத்துக் கொண்டிருந்த ஒருவன் சோவியத் அதிபர் ஸ்டாலினாக மாற முடிந்தது!

வண்ணமடித்துக் கொண்டிருந்த ஒருவன், இட்லராக மாறி, உலகத்தை நோக்கி, 'என்னிடம் ஒரு நெம்புக் கோலைக் கொடுங்கள், உலகத்தின் இருசையே மாற்றிக் காட்டுகின்றேன்' என்று, கணித மேதையும், விஞ்ஞான வித்தகனுமான ஆர்க்கி மிடிஸ் தத்துவத்தையே எதிரொலித்துச் சவாலிட முடிந்தது!

சிறு வயதிலே மாடு மேய்த்துக் கொண்டிருந்தவன், அமெரிக்கக் குடியரசுத் தலைவரான ஐசனோவரானான்!

ஒரு நேரத்தில் விறகு வெட்டி வயிற்றைப் பேணிக் கொண்டிருந்த குடும்பத்தைச் சேர்ந்த ஆப்ரகாம் லிங்கன், அமெரிக்க ஜனாதிபதியாகி, உலகப் புகழ்பெற்ற கெட்டிஸ்பர்க் பேச்சு மூலமாக அடிமை விலங்கொடித்த மாவீரனானான்!

சட்டிப் பானை வியாபராம் செய்து கொண்டிருந்தவன், பிற்காலத்தில் உலக வரலாற்றையே எழுதிய வரலாற்று மேதை எச்.ஜி. வெல்ஸ் ஆக மாறினான்!

இவர்கள் அனைவரும், இத்தகைய அரியவர்களாக, செயற்கரிய செய்து முடித்த சான்றோர்களாக முடிந்தபோது, ஒரு நடிக்ன் மட்டும் ஏன் அரசியல்வாதியாக ஆகக் கூடாது? அதனபிமானமாக நாடாளக் கூடாது? என்ற கேள்வியை எவரும் கேட்கலாமல்லவா?

அந்த வினாவிற்கு விடையாக, அடையாளமானவர்தான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.. ஏறக்குறைய பன்னிரண்டாண்டு காலம் தமிழகத்தைக் கோலோச்சும் கோமானாக வீற்றிருந்தார்!

அமெரிக்காவின் குடியரசுத் தலைவர்களில் ஒருவரான ரொனால்டு ரீகன், ஆந்திர தேசத்து முதலமைச்சராக இருந்த மான வீரர் என்.டி.ராமாராவும், கலை உலகப் பிரதிநிதியாக இருந்து அரசியலரங்கத்திற்கு வருகை தந்த அடலேறுகளே!

இக்னேஸ் பெடெரெவ்ஸ்கி என்பவர் ஐரோப்பா கண்டத்திலே உள்ள போலந்து நாட்டின் பியானோ என்ற இசைக் கருவி மேதை!

அவர் தனது கலைத் திறனில் உயர்வான புகழைப் பெற்று உலகையே உலுக்கி வாழ்ந்த இசைத் துறை இசைஞர்! தனது நாட்டிற்கு பெரும் கீர்த்தியை தேடித் தந்ததோடு, தானும் புகழின் உச்சக் கட்டத்திலே மிதந்து கொண்டிருந்தார். அவர், போலந்து நாட்டின் குடியரசுத் தலைவராக ஒரு முறையும், மறுமுறை அந்த நாட்டின் பிரதம மந்திரியாகவும், அந்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்!

திரைத் துறை நடிகர் மட்டுமல்ல, எழுத்தாளர்களும் நாவலாசிரியர்களும்கூட, ஒரு நாட்டிற்குப் பிரதம அமைச்சர் களாக பதவி வகித்துள்ளனர் என்ற உலக வரலாற்றில், "எல்லாக் காலங்களிலும் அற்புதமான பியானோ மேதை இக்னேஸ் பெடெரெவ்ஸ்கி" என்று, உலக நகைச்சுவை நாடகப் பேராசிரியர் ஜார்ஜ் பெர்னாட்ஷா அவர்களால் பாராட்டப்பட்டவர்!

அத்தகைய இசைக் கலைஞரும் தமது நாட்டை ஆளலாம் என்று போலந்து நாட்டு மக்கள் அரங்கம், அவரைப் பதவியிலே அமர வைத்து, ஆட்சிப் பொறுப்பையும் அவரிடம் அளித்துப் புகழ் தேடிக் கொண்டதைப் போலவே, தமிழ் மக்களும் நமது புரட்சித் தலைவரை முதல் அமைச்சராக்கினார்கள்.

அரசியல்வாதியாக எவரும் மாறலாம்! ஆனால், ஒரு அரசியல்வாதி, செருப்புக் கலையில் தேற முடியாது - ஓவியர் ரவிவர்மாவாக இயலாது; விஞ்ஞானியாகி வியனுலகை வியக்க வைத்திட ஆகாது!

நடிப்புக் கலைஞனைப் போல நாடாளவும் திறமைவராது என்பதற்கு சான்றாக நின்றவர் புரட்சித் தலைவர்!

எனவே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் வாழ்க்கை, வாழ்வதற்கே மட்டுமன்று; கலைக்காக மட்டும் அன்று! அரசியலுக்காகவும்தான் இருக்க வேண்டும் என்று மக்கள் விரும்பியதிலே என்ன தவறு?

வேழத்தைத் துளைத்தது; வேங்கையை வீழ்த்தியது; மானின் உடலை உருவியது; முள்ளம் பன்றியின் முட்களை முறித்தது; இறுதியாக - உடும்பு ஒன்றின் உடம்பிலே ஊடுருவி நின்றது ஓர் அம்பு!

பாய்ந்திருந்த அம்பைப் பாணர்கள் பார்த்தார்கள்! உடும்பின் உடலிலே ஊடுருவிய அம்பை உருவினார்கள்! அதை எய்தவன் யார் என்று அறிய முற்பட்டார்கள்!

எவர் பெயரும் அந்த அம்பில் எழுதப்பட்டிருக்க வில்லை! வியந்தார்கள். யார் இந்த வில் வித்தகன் என்று?

மாவீரன் வாலியை மறைந்திருந்து தாக்கிய காகுத்தனைப் போன்ற ஒருவனுடைய அம்பாக இருக்குமோ? என்று எண்ணினார்கள்!

எவன் எய்தான் அதை, என்பதைக் கண்டிட அந்த பாணர்கள் சற்று முன்னோக்கியும், பின்னோக்கியும் சென்று பார்த்தார்கள்!

தாக்கப்பட்ட வேழம், குருதி சிந்தியபடியே தரையிலே வீழ்ந்து கிடைப்பதைக் கண்டார்கள்!

வேங்கை ஒன்று ரத்தம் கசிந்தவாறே களைத்துப் பெரு மூச்சோடு, எழ முடியாமல் படுத்திருப்பதை நோக்கினார்கள்!

மான், காட்டுப் பன்றி, உடும்புகளின் உடல்கள் எல்லாம் செந்நீரால் சிவந்து கிடந்தன!

வீழ்ந்து கிடக்கும் இவை அனைத்தையும் வீழ்த்தியவன், சிறந்த வில்லேருழவனாகத்தான் விளங்க முடியும் என்ற வியப்பிலாழ்ந்திருந்தபோது, அருகே இருந்த குன்றை அவர்கள் நிமிர்ந்து நோக்கினார்கள்!

அம்பை எய்தவன், அதோ எதிரே உள்ள குன்றின்மீது தான் இருக்க வேண்டும். கீழ்நோக்கி விடப்பட்ட அம்புதான், அதன் வேகக் குறிதான், இத்தனை மிருகங்களையும் தாக்கி இருக்கின்றது' என்ற ஆச்சரியத்தோடு காணப்பட்டார்கள்!

அப்போது ஒரு வேடன் ஓடி வந்து, "உங்கள் கையிலே இருக்கின்ற அம்பு என்னுடையது. தயவு செய்து கொடுங்கள்" என்றான்!

"பெயர் பொறிக்கப்படாத இந்த அம்பு உன்னுடையதா? விற் கலையில் இத்தகைய வியப்புமிக்கத் திறமை பெற்ற உனக்குப் பெயரில்லையா?"

"முயலை எறிந்த அம்பில்கூடப் பெயரைப் பொறித்துக் கொள்கின்ற காலம் இது!

"உன்னுடைய அம்பு, வேழத்தைப் பிழைத்ததல்லவா? வேங்கையை வீழ்த்தியதல்லவா? மானை, முள்ளம் பன்றியை, உடும்பைத் தாக்கிய அம்பு! இத்தனை உயிர்களையும் கொன்ற கணை; உனது குறி தவறா வீரக் கணை!"

"கொஞ்சம் புகழ் கிடைத்தால், கிட்டிய கீர்த்தி ஒளி விளக்கைப் பகலிலேயே பலருக்குக் காட்டிடக் கைகளிலே ஏந்திச் செல்லும் காலம் இது!"

"ஆனால், நீ, நாண் பூட்டி எய்துவதில் இவ்வளவு வல்லவனாக இருந்தும், உன் பெயரை அம்பில் பொறிக்காமல், புகழை துறந்து விட்டிருக்கிறாயே"

"இது நல்லதோர் பண்பு! நீ புகழேந்தி அன்று! உனது பெற்றோரிட்ட சிறப்புப் பெயர்தான் என்ன?" என்று, அந்தப் பாணர்கள் வியப்புரையாடல் விளைத்தனர்!

"என் பெயர் ஓரி" என்றான் வேடன்!

"வள்ளல் ஓரியா!" என்று மீண்டும் அவர்கள் வினவினர்!

வெட்கத்தால், தலை கவிழ்ந்தான் ஓரி!

உடனே, "வல்வில் ஓரி வாழ்க" என்று வாழ்த்தினர் பாணர்!

இந்த இலக்கியச் சான்றை நான் ஏன் கூறுகிறேன் என்றால், சங்க காலத்தில் தனக்கு வரும் புகழைத் துறந்து வாழ்ந்தவர் வள்ளல் ஓரி என்பவர், என்று குறிப்பிடவே!

சங்க கால ஓரிக்கும், மறைந்த பரங்கிமலைப் பாரிக்கும் என்ன சம்பந்தம் என்று சிலர் சாடலாம் அல்லது கேட்கலாம்!

ஒரு மனிதனுக்குப் புகழ் வருகிறது என்றால், அவன் அதை நோக்கிக் கால் கடுக்க ஓடுகின்றான்.

அடிவானை நோக்கி ஓடுகின்ற சகோடப் புள், திரும்பி வர இயலாமையால் அங்கேயே விழுந்து இறக்குமாம்!

கானலை நம்பி ஓடுகின்ற மான், கண் நிலைக்குத்தி, கடை மணியில் நீர் சொரிய, 'நா நிலந்தேய, சுருண்டு விழுந்து சாகுமாம்!

புகழ், கானல் நீரைப் போன்றது; அடிவானை ஒத்து தோன்றுவதுண்டு.

ஆனால், அந்தப் புகழை மண்ணில் தோன்றிய எவனும் அணைத்தாக வேண்டும்! காலக் கட்டாயம் இது!

'ஐம்புலன்களையும் - ஆறறிவுகளையும், நொடியில் சிறை பிடிக்கும் சக்தி புகழ் என்று மனோதத்துவம் கூறுகின்றது.

மணமாகாதவன்; ஒரு பெண்ணைப் புகழ்ந்தால், அவள் காதலியாக மாறுகின்றாள்!

குழந்தையை நாம் புகழ்ந்தால், அது சிரிக்க ஆரம்பிக்கின்றது!

மன்னர்களைப் புகழ்ந்து - பாணர்கள், கவிஞர்கள் பெரும் பரிசுகள் பெற்றது உண்டு.

அவற்றிற்கு ஆற்றுப்படை இலக்கியங்களே ஆதாரங்கள்!

அமைச்சர்களை இன்று புகழ்ந்து கொண்டே இருந்தால், அன்றாடம் அரசியல் லாபங்கள் பெறலாம்!

ஒரு கால கட்டத்தில், மறைந்த சோவியத் அதிபர் ஸ்டாலினையே புகழ் பாடியவர், பிறகு, ரஷ்யா அதிபரானார் குருசேவ்!

ஆனால், ஏழைகளை எவன் புகழ்வான்! அதனால் ஏழைகளைப் புகழ்ந்து பாராட்டும் எவனும், ஒரு காலத்தில் ஒரு கட்சித் தலைவராகலாம்! ஆட்சியிலேயும் அமரலாம்!

எனவே, புகழ் போதை எப்படிப்பட்டவனையும், அடிமைப்படுத்திவிடும் சக்தி பெற்றது!

அதனால்தான், அறிஞர் அண்ணா அவர்கள், புகழைக் கண்டு கூச்சப்பட்டார்! புகழ்பவனைக் கண்டு அச்சப்பட்டார்! அதை வெளிப்படையகாவும், கூறினார்; ''நான் சாமானியன்''

என்னைப் புகழ்பவர்களைக் கண்டால் அச்சப்படுபவன்'' என்றார்!

அவருக்கு உருவான புகழ் அவரது அறிவுக்கும் பண்புக்கும் காலம் தந்த கொடை; இயற்கை கொடுத்த வரம்; அவர் பணிவுக்கு மீறிப் பீறிட்ட அற்புத சக்தி! அவர் மக்களை அரவணைத்த அன்புக்குரிய, மரணமிலாப் பெருவாழ்வு!

சாதாரண அண்ணா என்ற மூன்றெழுத்துப் புகழின் ஆலமரத்து நிழலிலே, கலைஞர் தலைமையிலான தி.மு.க; புரட்சித் தலைவர் அ.தி.மு.க.; எம்.ஜி.ஆர். அண்ணா தி.மு.க. என்ற அணிதேர் புரவி படைகளோடு இந்தக் கட்சிகள் எல்லாம் தங்கி இளைப்பாறுகின்றன!

அகில உலக அரசியலிலே இல்லாத அற்புதச் சக்தி என்ன வென்றால், அறிஞர் அண்ணா அவர்களையே ஆசானாகக் கொண்ட ஒரு கட்சி, தமிழகத்தை ஆளும் கட்சி! அதன் ரத்தமான இன்னொரு பிரிவுக் கட்சி, எதிர்கட்சி!

மறுமுறை முன்பு ஆண்டிருந்த கட்சி எதிர்கட்சி! எதிர்கட்சி யாக இருந்த கட்சி ஆளும் கட்சி! இந்த அற்புதம் அகில உலக அரசியலிலே எங்கே நடந்தது?

ஓராண்டு, ஈராண்டல்ல இந்த அற்புதம் அவதாரம் எடுத்தது! ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளாக! இதற்குக் காரணம் அண்ணாவின் அறிவு தந்த புகழ் சக்திதான் அடிப்படை.

எனவே, அண்ணாவின் புகழ், அவரால் தேடி ஓடிய ஒன்றல்ல! அவரை நாடி தேடி ஓடி வந்த காலக் கொடை.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அரசியல் வயலுக்கு, அண்ணா என்ற அறிவு உரத்தைப் போட்டு, உழுது பயிரிட்ட அகில உலக அற்புத ''உழவாரப் படையின் தலைவர்'' எம்.ஜி.ஆர்.!

ஒருவருடைய புகழைப் பயன்படுத்திக் கொள்ளவும் தகுதி வாய்ந்த ஒரு மனிதத் தன்மை, நன்றி மறவா நல்லுணர்வு,

ஆல்போல் வேர் கொண்ட அன்பு, அதனோடு தரமிக்க அறிவும் ஒருவருக்கு அமைதல் வேண்டும்.

அந்த அறிவு, மக்கள் திலகத்திடம் இருந்தது! அதனால் தான், ஒரு குறிஞ்சி மலர்க் காலத்திற்குத் தமிழ்க் குவலயத்தை அவரால் அரசோச்சிட முடிந்தது!

புள்ளிக்குப் பரிமாணம் இல்லையென்று ஜியோ மெண்டரி கூறுகிறது! ஆனால், கணித மேதைகள் அதை எப்படிக் காட்டுகிறார்கள் தெரியுமா?

இரண்டு கோடுகளைக் குறுக்கே சந்திக்கும்படிப் போட்டு, அவை சந்திக்கும் இடமே புள்ளி என்பார்கள்!

மிக நுட்பமான ஒன்றைத் திட்பமான சூழ்நிலைகளைக் காட்டிப் புலப்படுத்த வேண்டும். அந்த திட்ப அறிவு, பொன்மனச் செம்மலுக்குத் தனித்திறனாக அமைந்தது!

அதனால்தான், அண்ணா அவர்கள் திருப்பெயரைத் தனது கட்சிக்குச் சூட்டினார்! அதன் கொடியில் அண்ணா உருவப் படத்தை நடுபாகத்திலே சின்னமாகப் பொறித்தார்! தான் மேடையேறிப் பேசும் ஒவ்வொரு கூட்டத்தின் முடி விலும், திருக்கோவில் பக்தர்களைப்போல 'அண்ணா நாமம் வாழ்க!' என்று கூறி முடிப்பார்!

A Man reaches his full highlight only, through Compulsions, Responsibilities and Suffering (Hegal)

''காரியப் பொறுப்பு, துன்பம், அவசியம், இவைகள் வாயிலாகவே ஒரு மனிதன் தனது முழுமையான உணர்ச்சியை அடைகின்றான்'' என்ற, ஆங்கிலப் புலவன் ஹெகல் உணர்ச்சிக்கு வடிவும் தந்து, தமிழ்நாட்டில், தான் துவங்கும் காரியப் பொறுப்பையும் நன்கு உணர்ந்து சிந்தித்துச் செயலாற்றிய செயற்கரிய செயல் செய்தவர் புரட்சித் தலைவர் - சிந்தனை வீரர் எம்.ஜி.ஆர்.

""Without adventure civilization is in full decay" (White head)

“துணிவான முயற்சி இல்லையானால், மனித சமுதாயத்தின் நாகரீகம் முழுவதும் அழிந்து போகும்” என்ற, தனி மனிதத் தத்துவத்தை தலைமேல் சுமந்தவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். எப்படி?

“அண்ணா என்ற பெயரையும், உருவையும் எம்.ஜி.ஆர். துணிவான முயற்சியோடு கையாளவில்லை என்றால், அறிஞர் அண்ணா வளர்த்த அரசியல் நாகரிகமான “மக்கள் குரலே மகேசன் குரல்” என்ற தத்துவமும், சமுதாய நாகரிகமான “ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்!” என்ற ஏழ்மை நிவாரணத் தத்துவமும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மனித வாழ்வின் மும்மணி உணர்வுகளும் - அழிந்து போயிருக்கும்! தமிழ்ச் சமுதாயம் செய்த தவப் பயனால் எம்.ஜி.ஆர். அந்தத் துணிவான முயற்சியில் ஈடுபட்டார்!

ஒவ்வொரு நாட்டிலும் அற்புதமான மனிதர்கள் தோன்றுகின்றார்கள். ஒவ்வொரு புதுமைகளை அவரவர்கள் ஈடுபட்ட துறைகளிலே சாதிக்கின்றார்கள்! அதனால், புகழ் மாலைகள் சூட்டப்படுகின்றார்கள்.

இத்தகைய, நிலைமையில் உலகம் இயங்கும்போது, வள்ளல் வல்வில் ஓரியைப் போல அனைவராலுமா பெற்ற புகழையும் துறக்க முடியுமா?

ஒரு மனிதன் செத்ததற்குப் பிறகு புகழை இழப்பது வேறு! அவன் உயிரோடிருக்கும்போது புகழைத் தானம் செய்வதென்பது வேறு!

இறந்த பிறகு, புதைக்கப்பட்டவரின் புகழை மண் பெற்றுக் கொண்டு மணக்கிறது; உயிரோடிருக்கும்போது புகழ் கை மாறுவதைப் பார்த்ததில்லையா நாம்?

மண் பொறுக்கும்; மனம் பொறுக்குமா? பொறுத்த மண் மீண்டும் மணக்கிறது - மற்றவர்களும், அதை நுகர, மகிழ!

பொறுத்த மனம் - பொறாமையை, குரோத விரோத உணர்வுகளை எழுப்பியல்லவா பெரும் போரைக்கூட உருவாக்கி விடுகின்றது!

நீண்ட நெடுங்காலத்தின் ஓட்டத்திற்கு ஏற்றவாறு, வல்வில் ஓரி, பாரி, காரி, குமணன், அதியமான் போன்றவர்களுக்கு அடுத்தவாறு, இந்த உலகம் இரண்டாவது முறையாக மற்றொரு அநுபவத்தைப் பெற்றிருக்கின்றது!

புரட்சித் தலைவரின் கலையுலகப் புகழுக்குச் சான்றாக, மதுரை மாநகரத்தின் மூன்று லட்சம் மக்கள், தங்களது அன்பு காணிக்கையாக; நூற்றிப்பத்து சவரன்களாலான தங்கவாள் ஒன்றை, பொன்மனச் செம்மலுக்கு பரிசாகக் கொடுத்தார்கள்!

சீன ஆக்ரமிப்பினால் ஏற்பட்ட இந்தியா - சீனா போர் நிதிக்காக, மக்கள் கொடுத்த அந்தப் பரிசை, புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அப்படியே மத்திய அரசுக்குத் தானமாகக் கொடுத்தார். இதற்குப் பெயர் என்ன? தனது புகழையே தானமாகக் கொடுத்ததற்கு ஈடல்லவா?

பேரறிவாளன் செல்வம் ஊருணியென சுரந்து கிடக்கையில், தன்னுடைய புகழின் சின்னமான தங்க வாளை, வீரத்திற்கு அடையாளமாகக் கிடைத்த அன்பளிப்பை, மக்களது அன்புக் காணிக்கையை, நாட்டின் நெருக்கடி நேரத்திற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கொடுத்தாரென்றால், சிந்திக்க வேண்டிய ஓர் அரசியல், சமுதாய சித்தாந்தம் தானே இது!

பாரதக் கன்னன் போர்க் களத்திலே தனது தர்மத்தைத் துறந்தானாம்! இதிகாசத்தின் இயம்பல் இது!

கன்னன் தான் செய்த தர்மங்களைத் தானமாக அளித்து, அதனால் மீண்டும் ஒரு புகழைப் பெற்றுக் கொண்டான்.

சங்க கால ஓரி, இருபதாம் நூற்றாண்டில் பரங்கிமலைப் பாரியாகக் காட்சியாகி, தான் பெற்ற புகழையும் தனக்கென வைத்துக் கொள்ளாமல், இந்த நாட்டுக்கே தானம் தந்து விட்டமைக்கு, தமிழ் இலக்கிய நேரிடைச் சான்று அல்லவா இது?

பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். மக்களுக்கு வாரி வழங்கியவை செல்வம் மட்டுமல்ல, அந்தச் செல்வத்தால் பெற்ற புகழையும், தங்க வாளோடு சேர்த்துத் தானமாக்கிக்

கொடுத்தார். மீண்டும் அவரைத் தேடி அதே புகழ் நாடி வந்ததே! இது என்ன அதிசயப் பண்போ...!

இந்த அரிய செயலைச் செய்கின்ற மனப்பக்குவம் எல்லாருக்குமே வந்து விடுமா? நூற்றாண்டுகளுக்கு ஒரு தடவை ஓரிருவருக்குத் தானே அமையும்?

அந்த ஒருவர் எம்.ஜி.ஆர்.! கோடியில் ஒரு கோமான் எம்.ஜி.ஆர்.. கொடுப்பதையே தனது அறமெனக் கொள்கையாக்கிக் கொண்டவர் அவர். அதனால்; கொடைக் குணம் மனிதனைத் தெய்வமாக்குகின்றது. எப்படி?

"ஈவானே தெய்வம்" என்றாள் ஔவை! ஈகை, இருமைக்கும் பெருமை ஈவது! "ஈதல் உயிர்க்கு ஊதியம்" என்றார் தமிழ் மறையாளர்!

கொடையால், பிற உயிர்களை வாழ வைக்கின்றான் ஒருவன்! வாரி வழங்குபவன் பொன்னும், பொருளும் உதவி, புவி வாழ் மக்களைப் பேணுகின்றான்! அதனால், அவன் பொன் உயிராய்ப் பொலிகின்றான்! மன்னுயிர் அவனை இன்னுயிராய் மதிப்பதில் தவறென்ன?

கொடுப்பவன் செம்பொன்! கொடாதவன் கரும்பொன். அதாவது இரும்பன்! மனம் இரக்கமற்றவன்! சிலர், காக்காப் பொன்னர்களாகத் திகழ்வார்கள்! அவர்கள் திரி சங்குவாதிகள்! எதையும் பற்ற முடியாமல் தொங்கியபடியே காட்சி தருவார்கள்!

தளர்ந்தவர்களுக்குத் தளராமல், எவன் தானமும் தருமமும் புரிகின்றானோ, அவனுக்கு இயற்கை வாரிக் கொடுக்கின்றது! அதனால், ஊருக்கும் உலகுக்கும் அவன் ஊருணி போல ஊற்றுச் சுரந்து, ஏழ்மை வேட்கையைப் போக்குகின்றான்!

இதைக் கண்ட தகடூர் யாத்திரைக் காவியக் கவிஞர் 'நூற்றில் ஒருவன் வீரனிருப்பான்; புலமையாளனாக ஆயிரத்தில் ஒருவனாக புலப்படுவான்; ஏழைகளை எள்ளாமல் எவனொருவன் உள்ளம் உவந்து கொடுக்கும் கொடை செய்கின்றானோ, அவனை உலகம் முழுவதும் தேடினாலும் எங்கும் காண முடியாது" என்கிறார்.

இந்தப் பாடலைக் கண்ட ஔவையார் எனும் பெண்பாற் புலவர், "கொடைஞனை உலகம் முழுவதும் தேடினாலும் காண முடியாது" என்ற தகடூர் கவிஞர் கருத்தினை ஏற்க மறுத்தாள்!

"வீரன் நூற்றி ஒன்றில் ஒருவன், புலவன் ஆயிரத் தொன்றில் ஒருவனாகப் புலப்படுவான். நல்ல மேடைப் பேச்சாளன் நூறாயிரத்தில் ஒருவன். கொடையாளி உலகிலே இருக்கின்றானோ, இல்லையோ தெரியாது" என்று தகடூர் யாத்திரைக் கவிஞர் கருத்தை ஒப்ப மறுத்தவளாய், அவரைவிட ஒருபடி மேலே சென்று, கருத்தாட்சியோடு ஔவையார் பாடுகிறார்!

தருகின்றவன் எவனோ, அவன்தான் தாதா எனும் தகுதியான பேரைப் பெறுகின்றான் நடுத்தர மக்களிடம்!

> "இலன் என்னும் எவ்வம் உரையாமை - ஈதல்
> குலனுடையான் கண்ணே உள"

- என்று திருவள்ளுவரும் குறிப்பிடுகின்றார்!

"தந்தவன் தரணி ஆள வந்தவன்", ஈகை புரிந்து வந்த கை. செங்கோலை ஏந்தும்! அலைகள் சூழ் உலகை நலமாய் ஆளும்" என்ற, தமிழ் அறங்களுக்கு ஏற்ப, பொன்மனச் செம்மல் ஏழைகளுக்குத் தன்னாலியன்ற வரைக் கொடுப் பதையே மதமாகக் கொண்டார்!

அதன் பலன்தான், ஆட்சியிலே அவரைப் பன்னி ரண்டாண்டுக் காலம் அசைக்கவோ, ஆட்டவோ முடியாத சக்திகளே இல்லாமற் போயின என்பதை உலகு கண்டது!

ஒரு மனிதனுடைய வாழ்க்கை, பல கோணங்களிலே நாட்டிற்குப் பயன்பட்டாக வேண்டும்! பிறந்த மண்ணிற்கு அவன் ஏதாவது பெருமையை உருவாக்க வேண்டாமா? பிறப்பின் பண்பன்றோ!

வான் மழை, தென்னை மரத்தின் கீழே விழும்போது, இளநீராக மாறுகின்றது!

பனை மரத்தின் வேரில் அதே மழை பாயும்போது, பதநீராக பயன் தருகின்றது!

கனி மரத்தினடியில், அந்த தண்ணீர் தவழ்ந்து ஓடும்போது, கனிச் சாறாகின்றது!

"பூக் கிண்ணத்'தில், அந்த எழினியின் சொட்டு எழிலாக அமர்ந்தபோது தேனாக இனிக்கிறது!

மூத்துச் சிப்பியினுள் அந்த மேகம் உமிழ்கின்றபோது, நாடு போற்றும், நல்முத்தாக மரியாதையும் மதிப்பும் பெறுகின்றது!

அதுபோல, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வாழ்க்கை, கலை உலகத்திலே உயிர்பெற்றபோது, மக்கள் மன ஆசனத்திலே அமர்ந்த நடிப்புருவமாக நடமாடியது.

வாரி வாரி மக்களுக்கு அவர் ஈந்தபோது, அந்த ஈகை, பரங்கிமலைப் பாரியாகப் பெயரெடுத்தது!

இந்த புவனியின் மானத்தைக் காப்பதற்காகத் தனது புகழையே தானமாகத் துறந்தபோது, 'வல்லில் ஓரி'யின் கொடை போன்ற அறமானது!

கட்சிப் பணிகளில் ஈடுபட்டு அவர் கடமையாற்றிபோது, சிரம் பழுத்தத் தொண்டனின் சேவையானது.

அரசியலரங்கத்திற்கு அந்த ஒளி விளக்கு மக்களது இருளகற்றி, மருளகற்றி, வெளிச்சம் விளக்கியபோது அறிஞர் அண்ணாவின் பண்பாக உருவேற்றது!

எனவே, பொன்மனச் செம்மலின் வாழ்க்கை குறிப்பிட்ட ஒரு கோணத்திலேயே முடங்கிப் போகவில்லை!

முப்பட்டைக் கண்ணாடியின் வழியாக ஊடுருவிய பகலவன் ஒளி, பல வண்ணங்களோடு, பல கோணங்களில், மக்கள் இதயமென்ற பலகணி வழியாகப் பதத்தோடு எட்டிப் பார்த்தது.

மக்கள் திலகம் இதுவரை அரசியல் அரங்கம் என்ற பிரகாரச் சுற்றுகளில், அலங்காரப் பவனியுடன் மக்கட் திரள் புடை சூழ பவனி வந்தார்!

அடுத்து, கலைஞன் அமைக்கும் கலைக்கோயில் பகுதியில் அவரை அருவருமாகக் காணலாமா?

# கவின்மிகு கலையரங்கம்!

கலை என்பது, ஒரு குறிப்பிட்டக் காலத்தின் வாழ்வையும், நாகரிகத்தையும் காட்டுகின்ற காலக் கண்ணாடியாகும்.

மனிதக் கற்பனை, அறிவு நிரல்படுத்தப்படாத இயற்கையை, திறமையினால், ஒழுங்காக்கி விடுமானால், அதனை, 'கலை' என்று அழைக்கலாம்!

'சில்லெனச் சிதறி ஓடுகின்ற காற்றை, நிரல்படுத்தப்பட்ட மூங்கில் குழாயின் ஏழு துளைகள் வழியாக அனுப்பப்படும் போது, அது இசைக் கலை எனப்படுகின்றது! அதனால்தான், இசையைக் குறிஞ்சி நிலம் பெற்றெடுத்த குழந்தை என்கிறோம்!

கரடு முரடான பாறை ஓரிடத்திலும், உளி எங்கோ ஒருவனிடத்திலும் இருக்கின்றது!

இவை இரண்டையும், மனிதக் கற்பனை அறிவு, ஓரிடத்தில் சேர்த்து, திறமையும் அவற்றுடன் கலக்குமானால், அதன் முழு வடிவம் 'சிற்பக் கலை' என்ற பெயரைப் பெறுகின்றது!

எல்லாக் கலைகளையும், இவ்வாறே விளக்கிக் கொண்டே, எழுதிக் கொண்டே போகலாம்! கலை வரலாறு அவ்வளவு சக்தி பெற்றது.

கலைக்கே இந்த இலக்கணம் என்றால், நேர்மையான ஒரு கலைஞனுக்குரிய இலக்கணம் எப்படி இருக்க வேண்டும்.

கற்பனா சக்தியும், திறனும், உழைப்பும், சாதாரண ஒரு மனிதனைவிட, அளவில் அதிகமானதாக யாருக்கு அமை கின்றதோ, அவனே அற்புதக் கலைஞனாகத் திகழ முடியும்.

பத்து ரூபாயை வைத்திருப்பவன் ஒரு ரூபாய் வைத்திருப் பவனை விட உயர்ந்தவனாகிறான்.

பத்து ரூபாய் என்ற பொருளாதார நிலை உயரும்போது, அதற்கேற்ப, அவன் நினைப்பும் நிலையும் உயர்ந்து விடுவதை, நாம் பலரிடையே பார்த்திருக்கின்றோம் அல்லவா?

எவரும், எப்போதும் பெற முடிகின்ற பொருளுக்கே இந்த உயர்வு தாழ்வு ஏற்படுகின்றதென்றால், கலைஞனுக்கென குறிப்பிட்டக் கற்பனை சக்தியுடன் கூடிய நெடிய உழைப்பும், திறனுமுடைய ஒருவன், பல கோடியில் ஒருவனாகத் தான் இருக்க முடியும்.

அத்தகையக் கலைஞர்களால், பொதுமக்கள் தங்களது ஒய்வு நேரத்தைப் பொற்காலமாக்கிக் கொள்கின்றார்கள்.

அவர்கள், கலைஞர்களை மதிக்காமல், பாராட்டாமல், வாழ்த்தாமல், சமுதாயத்திலே வாழ்கின்ற பல்வேறு வகையான திறமையானவர்களைவிட அதிகமாகப் புகழாமல் வேறு என்ன செய்வார்கள்?

எனவே, அரிய திறன் பெற்ற கலைஞர்கள், மக்களி டையே காட்சிப் பொருளாய் இருப்பதிலும், வியப்பில்லை.

அப்பொருட்களைக் காண, பொது மக்கள் துடியாய் துடித்து மோதியடித்துக் கொண்டு ஓடுவதிலும் ஆச்சரிய மில்லை.

கோழி கூவியபோது, விழித்தெழுந்து, கோட்டான் கூவும் வரை உழைத்துழைத்துத் துவண்டு போகின்றவர்களது உடல்கள், குடும்ப பாரத்தால் சோர்ந்து போன உள்ளங்கள் மீண்டும் புத்துணர்வு பெற்று வாழ்க்கையில் புளகாங்கிதம் பெற, பழைய முறுக்கேற, அவர்கட்கு நாடகமோ, நாட்டிய மோ, சினிமாவோ, இசையோ, வேறு என்ன கலையோ ஒன்று தேவைப்படுகின்றது!

பொது மக்கட்கு மகிழ்ச்சியைத் தருபவர்கள் கலைஞர்கள் தாம் என்பதை எவராலும் மறுக்க முடியாத ஒன்றாகும்.

ஒரு சமுதாயத்தில் கலைஞர்கள் அரிய பிறவிகளாகி விடுகின்றார்கள்.

ஓய்வு நேரத்தைப் புனிதமாக்கும் சக்தி, அவர்களிடம் இருப்பதால், கலைஞர்கள் மக்கள் பாராட்டுக்கு உரியவர்களா கின்றார்கள்.

அப்படிப்பட்டவர்கள், அரசியல் வாழ்வில் தங்கள் வாணாளைக் கழிப்பார்களேயானால், பொதுமக்களிடமும் நல்லதோர் பாராட்டைப் பெறுகின்றார்கள் - போற்றப் படுகின்றார்கள்!

ஆனால், கலை உலகத்திலே கலைஞர்களுக்குள் ஒற்றுமை இருப்பதற்கில்லை. இதில் கட்சிகள் வேறு நுழைந்து விடுகின்றன!

தகுதிகேற்ற தக்கதோர் இடம் பிடிக்கும் நோக்கும் மனித இயல்புதான் என்றாலும், அது ஒரு பகை உருவமாக கலை உலகில் காணப்படுகின்றது.

இலட்சக்கணக்கிலே ஒரு கலைஞன் பொருளீட்டுவதை விட, பொதுமக்கள் செல்வாக்கெனும் பொருளை ஒரு கலைஞன் பெறுவது மிகமிகத் தேவையானாதாகும்.

எனவே, இத்தகையவர்களிடம் இருக்கும் அழுக்காறு, செல்வாக்குச் செறுக்கு, கலைஞர்களுக்குள் ஏற்படுவது பொதுவான ஓர் தீய பண்பாகும். மனித இயல்பும்கூட!

இதிலிருந்து விதிவிலக்குப் பெற்றவர் மட்டுமல்ல; புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். ‘‘அழுக்காறு கொண்டவர்கட்கு அதுவே சாலும்’’ என்ற குறட் தத்துவத்தையும் உணர்ந்து நடந்தவர்!

அதனால்தான், புகழ் காய்ச்சலெனும் கனலிலே புரண்டுக் கிடப்பவரைக் கண்டும் கூட, புன்முறுவல் காட்டி, அவர்கட்கு ஆற்ற வேண்டிய மனிதக் கடமைகளைச் செய்து, ஒறுத்து, நன்னயம் செய்தார்!

இந்த விதிவிலக்கை பொன்மனச் செம்மல் எவ்வாறு பெற்றார் என்று அறியப் புகுமுன், வலிமை பொருந்திய சரித்திரச் சான்றுகள் சிலவற்றை நாம் காணவேண்டியது இன்றியமையாததாகும்!

தத்துவ ஞானி சாக்ரடீசினுடைய சிந்தனைத் தொடரலைகள், அரசியல் வித்தகன் பிளேட்டோவால் ஊடுருவப் பெற்று, சகலகலாவல்லன் அரிஸ்டாட்டலால் எவ்வாறு முற்றுப் பெறுகின்றதோ,

கனவுக் கலைக் கலைஞன் சிக்மண்ட் ப்ராய்டு'வினுடைய மனோ தத்துவ அலைகள், அறிஞன் ஜங் என்பவனால் எங்ஙனம் முடிவடைகின்றதோ!

பொதுவுடைமைப் புலவன் ஏஞ்சல்சினுடைய பொருளாதாரத் தத்துவங்கள், சமதர்ம ஞானி காரல் மார்க்ஸ் வழியாக ஊடுருவி, சோவியத் சிற்பி லெனினால் எப்படி இறுதியுற்றதோ.

அடிமைகளுடைய விலங்கை நொறுக்குவதற்காக மனித சுதந்திர வீரன் ஆப்ரகாம் லிங்கனால் ஊற்றெடுக்கப்பட்ட ஜனநாயகத் தத்துவங்கள், எப்படி மனித சமத்துவச் சிற்பியான கென்னடியால் ஆறாக பெருகி ஓடியதோ;

அதனைப் போலவே, கலை உலகத்தில் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் வண்மை, பண்பு, அறம், பொது மக்கள் தொடர்பு, ஏழைகளைக் கவனிக்கும் உருக்க நோக்கு, அன்பு, தன் நிலை அறிதல், தன் நலம் தவிர்த்தல், பொது நலம் பேணல், அரசியல் தெளிவால் மின்னுதல், இவையனைத்தும் எம்.ஜி.ஆர். என்ற பேருழைப்பின் சின்னம் வாயிலாகப் பொது மக்களுக்கு ஆற்றப்படும் பொழுது, கலைவாணருடைய இறவா வரம் பெற்ற உணர்வுகள்; மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களால் காப்பாற்றபடுகின்றன என்று பொருளாகும்.

நல்ல நோக்குடைய ஒருவன், ஒரு மரத்தைப் பார்த்தானேயானால், மரத்தின் வண்ணத்தைச் சொல்வான்! பெயரைக் கூறுவான்! கனியின் தன்மையைக் கழறுவான். அது கனியும் காலத்தைச் சாற்றுவான், பயிரிடும் முறையைப் பகருவான்.

பார்வையில் தெளிவில்லாதவன், அதன் அருகிலிருந் தாலும்கூட, இது மரம் என்று சொல்லிவிட்டுப் போய் விடுவான்.

அதுபோல, புரட்சி நடிகர் எம்.ஜி.ஆரைப் பார்க்கும் போது, நல்ல நோக்குடைய நமக்கெல்லாம் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆரை மட்டுமே தெரியவில்லை.

அவருக்குப் பின்னாலே இருக்கின்ற கலைவாணரையும் நம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது.

'என் கால் சுடுகின்றது. எனக்குச் செருப்பில்லை. இரு ஜோடிகள் அவனிடம் இருப்பானேன்!?' என்று எவனாவது கேட்பானேயானால், கேள்வியை எழுப்பியவன் பின்னாலே பொதுவுடைமைவாதிகள் மார்க்சும் ஏஞ்சல்சும் இருக் கின்றார்கள் என்று பொருள்!

"நான் யாருக்கும் அடிமை இல்லை. அதனாலே நான் எசமானனும் இல்லை" என்று யாராவது கூறுவானேயானால், அவன் பின்னாலே ஆபிரகாம் லிங்கன் இருக்கிறான் என்பது அர்த்தம்!

மாண்டிசோரியின், "குழந்தைமை ரகசியம்" என்ற நூலை படிக்கும்போது, மாண்டிசோரி மட்டும் நமக்குத் தெரியவில்லை. அவருக்குப் பின்னாலே இருக்கின்ற பிராய்டு, ஜங் போன்ற பேரறிஞர்களும் புரிகின்றார்கள்!

கற்றோர் அவையிலே ஒருவன் தனது வாதத் திறமையைக் காட்ட ஆரம்பித்தால், வினா எழுப்பியவனையே விடையிறுக்க வைத்தால், தெளிவு பெற வந்தவனையே கேள்வி கேட்டு, அவன் வாயாலேயே விளக்கம் பெறச் செய்தால், அத்தகையவனுக்குப் பின்னாலே தத்துவமேதைகள், மெய்கண்டார், சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாடில் நால் வரும் உள்ளார்கள் என்பதை நம்மால் காண முடிகின்றது.

அதனைப் போல, பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். பொறாமை என்ற பெரு நோயிலிருந்து விதிவிலக்குப் பெற்றவர் என்று நாம் நினைக்கும்போது, வாரி வாரி வழங்கும் வள்ளல் என்று நாம் அவரைப் போற்றுகின்றபோது :

இரக்கத்தின் தாய்!

அறத்தின் திக்கு!

நீதியின் நிழல்!

நேர்மையின் தொகுப்பு!

என்று அவரைப் பாராட்டும் நேரத்தில், எம்.ஜி.ஆருக்குப் பின்னாலே அவரது கலை உலக மூத்த சகோதரர் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் இருந்தார் என்று பொருளாகும்.

எந்த ஆசிரியரிடத்தில் ஒரு மாணவன் படித்தாலும் அதே ஆசிரியனுடைய பண்பு ஓரளவாகிலும், மாணவனுக்குள் திகழ்வதை நாம் பார்க்கலாம். அதை ஆங்கிலத்தில் School of Thoughts என்று குறிப்பிடுவார்கள்.

செந்தமிழ் வேளிர், எம்.ஜி.ஆருடைய பரிந்தோம்பும் பண்பு, அன்பு சுரக்கும் தன்மை, ஈத்துவக்கும் ஈகை இவையனைத்தும் அவர் ஓர் ஆசிரியரிடத்தில் பெற்ற சாயல்களைக் காட்டுகின்றன!

''பிறருக்கு நன்மை செய்பவர்கள் தாம் என்றும் நலமாய் இருப்பார்கள்'', 'Only those llive who do good' என்று ரஷ்ய ஞானி டால்ஸ்டாய் TOlstoy கூறிய அற உரைக்கு எம்.ஜி.ஆர். ஓர் எடுத்துக்காட்டாக நடமாடினார்.

கலைவாணர் ஒரு கலைக் கூட்டத்தை வைத்தே உண வளித்தார்! எம்,ஜி.ஆர். கலைவாணரைப் போல தினந்தோறும் எண்ணற்றோருக்குப் பசியறிந்து புசிக்க உண்டியளித்தார்!

உணவளித்தது மட்டுமல்ல, நூற்றுக்கணக்கான தரித்திர நாராயணப் பழங் கலைஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் மாத ஊதியமும் தனது சொந்த பணத்திலே கொடுத்தார்!

தனது இல்லம் இருக்கும் இராமாவரம் தோட்டத்தில் உணவு சமைத்திட, பரிமாற, காய்கறி வாங்கி வர, இறைச்சி மீன் வகைகள் இறக்குமதியாக, ஒரு மடப்படையே இருந்தது. எந்த நடிகரிடமும் இன்று வரை இந்த சோற்றுப்படை இருந்ததில்லை!

வாழ்வில் பாதிக்கப்பட்ட கலைஞர்கள், கலைவாணரைத் தாயாக நினைத்து அடைக்கலம் பெறுவர்! அவரும் ஆறுதலளித்துப் போற்றி உதவி செய்தார். அவர்களுடைய - கட்ட நட்டங்களில் பங்கும் பெறுவார்!

மக்கள் திலகம் அவரைவிடப் பலபடிகள் மேலேறி, கைக்கு வந்ததைத் தன் கையே கணக்கறியாதபடி மனமுவந்துக் கொடுத்தார்!

திரையுலகத் துணை நடிகர்கள். எம்.ஜி.ஆரைத் தாயாகக் கருதி ஓடி வருவர். அவர்களைச் சேயாகக் கருதும் அவர், அவர்களின் நல்லன கெட்டன நிகழ்ச்சிகளுக்கும் குறிப்பறிந்து ஈந்தார்!

கலைத் தொழிலில் கவுரமாக ஒரு காலத்தில் வாழ்ந்தவர்கள் எல்லாம், வாழ்க்கையில் வெந்து நொந்து கூனிக் குறுகி வரும்போது, அவர்களைப் புரட்சி நடிகர் தனது உடன் பிறப்புகளாக அணைத்தார்; உடன் ஈகையின் தாள் திறக்கும்! இன்னுயிர் பேணும் அருமருந்துப் பொருளை அவரவர் நிலைக்கேற்ப அளவறியாமல் அள்ளி அள்ளி உதவி செய்தார்!

""The hands that help are holier than the lips that pray" (Ingersol)

“இறைவனைத் துதிக்கின்ற வாயைவிட, ஒருவனுக்கு உதவி செய்கின்ற கைகள் மிகவும் தூய்மையுடையன” என்ற இங்கர்சாலின் மனிதாபிமான உரைக்கு உவமையாக, ஈட்டிய பொருளைத் தனது உதவிக் கரங்களாக நீட்டியவர் பொன்மனச் செம்மல்!

“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்” என்ற தமிழ் மறைத் தத்துவத்திற்கேற்ப மட்டுமன்று; அதற்கும் ஒருபடி மேலே சென்று, தனது சொந்த உழைப்பினால் வந்த வருவாயில் பெரும்பகுதியை, பிறர் நல வாழ்வுக்காக மழையெனப் பொழிந்து, வளம் கண்டு, பேரின்பம் எய்தியவர் எம்.ஜி.ஆர்.

கலைவாணர் திரை உலகிலே காலடி எடுத்து வைத்த ஞான்று, நடிகர்களைக் கூத்தாடிகள் என்று அழைக்கப்பட்டுக் கேலி பேசியதும் உண்டு.

கால மாறுதலுக்கேற்ப, பிறகு, மெல்ல மெல்ல மக்கள் செல்வாக்கு மற்ற நடிகர்களைவிட, கலைவாணருக்கு மிகையாக ஏற்பட்டு விடவே, திரை உலகமே அவருக்குத் தடபுடலான மரியாதையினை வழங்க இரு கை கூப்பி ஓடி வந்தது.

கலைவாணருக்கு இத்தகைய உயர்நிலை ஏற்படக் காரணம்; அவர் வயிற்றுப் பிழைப்புக்குத்தான் நாம் நடிக்க வந்திருக்கிறோம் என்ற நிலையைத் தகர்த்தெறிந்ததுதான்!

கலை கலைக்காகவே என்ற கவைக்குதவாத நெறியை மாற்றி, கலை மக்களுக்காகவே என்ற நன்னெறியை அவர் கடைபிடித்தார்.

அதனால், சொல்லொணாத இன்னல்களை ஏற்று, ஏறு டைபோட்டு திரைவானிலே வெற்றி கண்டார்.

கலைவாணருக்கு இவ்வாறு வளர்ந்து வந்த செல்வாக்கு, புகழ், மரியாதை அனைத்தும், அவருடன் செல்வோருக்கும், அவரது பெயரைக் கூறிக்கொண்டு உதவி பெறப் போவோருக் கும்கூட, நல்லதோர் புகழைத் தேடித் தந்து, மரியாதை யினையும் தரும் கட்டாய நிலையைப் பெற்றுத் தந்தது.

இவற்றை எல்லாம் புரட்சித் தலைவர் உற்று நோக்கினார்! கலைவாணருக்கும், மக்களுக்கும் இடையே உருவான அன்புப் பாலத்தைக் கவனித்தார்!

கலை மக்களுக்காக, அவர்கள் நல்வாழ்வுக்குரிய அறிவுரைகளைக் கூறும் அறநெறிகளுக்காக, சமுதாய வளர்ச்சிக் காக, அதற்கான கருத்துக்களும், கதைகளும், வசனங்களும் பாடல்களும் அமைய வேண்டும் என்பதை, மிக ஆழமாகச் சிந்தித்தார் புரட்சி நடிகர். அந்த பொறுப்பை அவரே நேரடியாக ஏற்றார்! பொறுப்போடும் அவற்றைக் கவனித்தார்!

அதன் எதிரொலிதான், அவரது படங்களும், பாடல்களும் மக்களிடையே அற்புதமான வெற்றிகளை ஈட்டித் தந்ததற்குரிய உத்திகளாகும்!

எம்.ஜி.ஆர். என்ற மூன்றெழுத்துக்குத் திரை உலகிலும் சரி, அரசியல் உலகிலும் சரி, மக்கள் மத்தியிலேயும் சரி, தமிழகத்தைப் பொறுத்த மட்டில் மட்டுமன்று, இந்தியாவில் கூட, இதற்கு முன்பு வேறு எவருக்குமே இருந்ததில்லை என்பது வெள்ளிடை மலை.

காலம் எப்படிப்பட்ட மாறுதலைச் செய்தாலும் சரி, கலைவாணர் - எம்.ஜி.ஆர். என்ற இந்த இரு வள்ளல்கள் திரை உலகிற்கும், சமுதாயத்திற்கும் ஆற்றிய வண்மையை ஒரு போதும் நாடு மறவாது!

வள்ளண்மை என்ற வார்த்தை இருக்கும்வரை இந்த இருபெரும் நடிக மன்னர்களின் பெயரும் நீடு புகழோடு வாழும்! - வளரும்!

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். கலை உலகத்திலே, காலெடுத்து வைத்தால் போதும் பெரும் பணக்காரர்கள் முதல் படாதிபதிகள் வரை, ஏழைத் தொழிலாளிகள் முதல் கலைத் தொழில் நிபுணர்கள் வரை, ஏதோ ஒரு பாசத்தால் ஆக்ரமிக்கப் பட்டவர்களைப் போல பாசம் காட்டும் பண்பு வளர்ந்து வந்ததைக் கண்டோம்!

அதே நிலை மக்கள் மன்றத்திலும், அவருக்கு நிலவியது என்றால் என்ன பொருள்?

மக்கள் திலகம் அரசியல் அரங்கில் கலந்து கொள்கிறார் என்றால், அங்கே பொது மக்களது பெருங்கூட்டமும், ஆரவாரமும், கடல்போல் பெருகி ஆர்ப்பரிக்கும் களிப்பும் திரையுலகையே திக்கு முக்காடச் செய்தது - அடே...! யப்பா! எம்.ஜி.ஆருக்கு மக்களிடையே இத்துணை பெரும் செல்வாக்கா என்று!

சமுதாயத் துறையிலே அவர் ஆற்றி வந்த சேவை அரசியல்வாதிகளுக்கே ஓர் அறை கூவலாக அமைந்தது.

வாரி வழங்கும் வளமான பண்பு, அறநெறி உதவிகள், வாழ்க்கைப் புயலால் உருவாகும் அன்றாட வேதனைச் சம்பவங்களைப் போக்கும் செயல்கள் ஆகியவை, எந்த ஓர்

அரசியல்வாதியாலும், இதுவரை ஆற்ற முடியாத அளவுக்கு எம்.ஜி.ஆர். தனியொருவராக நின்று ஆற்றினார்!

இதனால், அரசியலரங்கிலும், கலையரங்கிலும்கூட அவர்மீது அழுக்காறு கொள்ளும் காழ்ப்புத் தன்மை மனித இயல்பாகவே ஏற்பட்டது.

மூன்றுவேளைகள் உண்டு. வெள்ளை மாறாமல் உடைகள் உடுத்தி, அவன் வேலையை அவன் பார்த்துக் கொண்டிருந்தால்கூட, முன்பின் தெரியாத ஒருவனுக்கு திடீரெனப் பொறாமை ஏற்படுவது உண்டு!

என்ன குற்றத்தை அவன்மீது கூறினால் நாடு நம்பும் என்று ஆராய்ச்சி செய்து, இறுதியில் ஏதாவதொரு குற்றத்தைக் கூறி, அவன் புகழை, ஏன் அவனையே அழிக்க நினைப்பது மனிதனின் தீய இயல்பாகும்!

இதை அறிந்துதானே திருவள்ளுவர்

உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ் - என்றார்

கலை உலக எதிர்கட்சி எதிரிகள் சிலர், எம்.ஜி.ஆர். புகழைக் குறைத்து நாட்டிலே அவரைச் செல்வாக்கற்று ஒழித்து விடலாம் என்று நினைத்தார்கள்! காலம் அதற்கு பதில் கூறிவிட்டது.

அதன் எதிரொலிதான், அவருடைய அரசியல், கலை உலக எதிரி ஒருவர், வீடு தேடிச் சென்று, பொன்மனச் செம்மலைக் கொல்ல நினைத்து, துப்பாக்கியல் சுட்ட சம்பவம்!

அப்போது நாடே கொதித்து எழுந்தது! சுட்டவரை போலீஸ் பிடித்தது! மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப் பட்டு தொண்டையில் அறுவை சிகிச்சை நடந்து, புரட்சி நடிகர் சுகம் பெற்று மீண்டார்!

'தன்னை உணர்ந்தவன் தரணியை வெல்வான்' என்ற தத்துவத்திற்கேற்ப, எவர் எந்த புகார்களைக் கூறினாலும், அடுத்துக் கெடுத்தாலும் நம்பிக்கைத் துரோகம் புரிந்தாலும்,

அவற்றை மனத்தின் காசு எனக் கருதி, தூசாக மதித்து, தனது அரசியல், கலைக் கடமைகளை ஆற்றி வந்தார், அண்ணாவின் தொண்டர் எம்.ஜி.ஆர்.

மக்கட்கு செய்ய வேண்டிய சமுதாயச் சேவைகளை மனந்தளராமல், ஏழை, பணக்காரன் என்ற பேதம் கருதாமல் செய்தவர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.

அமெரிக்க நாட்டு நடிகரான ஜெரி லூயிசிடம் ஒருவன் வேலையாளனாகப் பணியாற்றினான்!

நோய் கண்ட தனது தாயை அவன் ஒருநாள் மருத்துவ மனையில் சேர்த்தான். ஆனால், தன் தாயிக்கு வேண்டிய வசதிகளைச் செய்திட போதிய பணம் அவனிடம் இல்லை!

இதை அறிந்த ஜெரி லூயிஸ், தனது வேலையாளின் தாயாரைத் தினந்தோறும், மருத்துவமனைக்குச் சென்று, அவனுக்குத் தெரியாமல் பார்த்துவிட்டு, வேண்டிய பணத்தையும் மற்ற உதவிகளையும் செய்து வந்தார்.

வேலையாளின் தாயாருக்கு ஒரு நாள் சந்தேகம் ஏற்பட்டு, தன் மகன் தவறினாலும், இந்த மனிதன் தவறாமல் வந்து நம்மை பார்க்கின்றானே, யாராயிருப்பான் என்று நினைத்தாள். "நீ யாரப்பா என்றும் கேட்டாள்?"

அதற்கு லூயிஸ், அவளது 'மகனும், தானும் ஒரே இடத்தில் பணியாற்றுபவர்கள்' என்று கூறினார்.

அந்தத் தாய், மருத்துவமனையை விட்டுத் தம் இல்லம் திரும்புகையில் தன் மகனுடன் வெளியே வரும்போது, லூயிஸ் அந்த தாயைப் பார்க்கப் போனார்.

அப்போது, அவருடைய பணியாள், "எஜமான்", என்று பயபக்தியோடு கையெடுத்துக் கும்பிட்டான்.

அந்தத் தாய், "உன்னுடைய எஜமானரா! இவர்? ஏழையிடத்தில் எத்தகைய அன்பு வைத்திருக்கின்றார்!" என்று வியந்து, தன்னைத் தினந்தோறும் மருத்துவமனைக்கு வந்து பார்த்து, செய்த உதவிகளை ஆனந்தக் கண்ணீர் விட்டு தன் மகனிடம் கூறினாள்.

அத்தகைய நடிகர் ஜெரி லூயிஸ்தான், ஆண்டொன்றுக்கு ஏழை மக்களுக்காகப் பத்து மில்லியன் டாலர் பணம் உதவி செய்தார்! பத்து மில்லியன் என்றால் ஒரு கோடி ரூபாய்க்கு சமமாகும்.

அம்ரி போகாட் என்ற மற்றொரு நடிகர், அமெரிக்காவில் பல இலட்ச ரூபாயில் ஏழை மக்களுக்காக ஒரு புற்று நோய் மருத்துவமனையைக் கட்டினார்.

இந்த இருபெரும் நடிகர்களைப் போலவே, ஏழை பங்காளர் எம்.ஜி.ஆர். அவர்கள், சென்னையிலே உள்ள சாலிக்கிராமம் அருகே, லட்சக்கணக்கான ரூபாயில் தன் தாயின் பெயரில் ஒரு மருத்துவமனையைக் கட்டி ஏழை மக்களுக்காக நடத்தினார்!

அமெரிக்க நடிகர் திலகமான மார்லன் பிராண்டோ என்ற நடிகர், நீக்ரோ மக்களது உரிமைகளுக்காகப் போராடிய மாவீரர்!

அவர் ஆப்ரகாம் லிங்கன் மெமோரியலிலிருந்து வாஷிங்டன் மாநகர் வரை 'கிரேட் மார்ச்' என்ற பேரணியைத் தனது போராட்டத்தின் அறிகுறியாக நடத்திக் காட்டினார்!

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள், மார்லன் பிராண் டோவைப் போல நேரடிப் போரட்டத்தில் ஈடுபட்டாரா என்று அவசரக்காரர்களும், ஆத்திரக்காரர்களும் கேட்டார்கள்!

அதற்குக் காரணம், அறிஞர் அண்ணா அவர்கள், 'கலைஞர்களும், வழக்குரைஞர்களும், டாக்டர்களும் போராட் டத்தில் ஈடுபடக்கூடாது' என்று தனது கட்சியின் சார்பாக ஒரு தீர்மானம் போட்டு விதிவிலக்கு அளித்திருந்தார்.

என்றாலும், மக்களன்பர் எம்.ஜி.ஆர்., போராட்ட நேரங் களில் தனது ஆதரவை, கருப்பு துணிகளாலான கொடியைத் தனது கட்டிடங்களிலே பறக்கவிட்டு தனது எதிர்ப்பை அடையாளம் காட்டினார்.

பிரிட்டன் நாட்டின் நடிகரான மாரியஸ் கோரியஸ் என்பவர், தென் ஆப்ரிக்க நிறவெறியை எதிர்த்து, 'அந்த

நாட்டின் எந்தவிதக் கலை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வ தில்லை' என்று பிரிட்டன் கலை ஆட்டக்காரர்கள் சங்கத்திலே தீர்மானம் போடப்பட்டதை ஆதரித்தார்.

அதற்கேற்ப, மாரியஸ் கோரியஸ், அறப்போராட்டங் களிலே ஈடுபட்டு, எந்த கலைநிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளாமல் இருந்தார்.

பிரிட்டன் நாட்டுக் குடிமக்களாகிய அந்த நடிகர்கள், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் போக்குக்கு ஆதரவு காட்டும் வகை யிலும், தென் ஆப்ரிக்க நிறவெறியைக் கண்டிக்கும் நிலையிலும் அறப்போராட்டம் புரிந்தனர்!

அதுபோல, இந்திய மண்மீது ஆக்ரமிப்பு வேட்டை நடத்திய சீன வெறியர்களை எதிர்த்து; நாடே திரண்டுப் போர்க்கோலம் சூழ்ந்து நின்றது.

மறைந்த பிரதமர் பண்டித நேரு அவர்கள், 'சீன ஆக்ரமிப் பாளர்களை எதிர்த்திடப் பொருளுதவி தேவை' என்று, வானொலியில் கல்லும் கனிந்துருகும் வண்ணம் பேசியதை மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் கேட்டார்.

அப்போதிருந்த தமிழகக் காங்கிரஸ் ஆட்சி, அறிஞர் அண்ணா உட்பட போராட்டத் தலைவர்களை எல்லாம் காராக்கிரகத்திலே தள்ளி வேதனைப்படுத்திய நேரம்!

அண்ணாவின் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் சிறையி லடைக்கப்பட்டு, சித்ரவதை செய்யப்பட்டு, சிறையிலே ஓரிருவர் இறந்து, பலர் ரத்தம் சிந்தக் கொடுமைகளை அனுப வித்தக் கடுமையான அரசியல் சூழ்நிலை சூழ்ந்திருந்த நேரம்!

இவற்றையெல்லாம் மறந்தார் எம்.ஜி.ஆர். தனது நாட்டுக்கு அல்லவா ஆபத்து என்பதை உணர்ந்தார்! சிந்தித்தார்!

"சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுத முடியும். நாடு இருந்தால்தான் வீடு இருக்க முடியும்!

இந்திய உபகண்டத்துக்கு வந்துள்ள ஆக்ரமிப்பு ஆபத்தை, வேரடி மண்ணோடுகளைய இந்திய மக்கள் தத்தம் கட்சிகளை மறந்து ஒன்றுபட வேண்டும்"

"நேற்று வரை திராவிட நாடு பிரிவினை கேட்ட நான், இன்று அந்த கொள்கையினையே கைவிடுகின்றேன். அதனால், பிரிவினைப் பிரச்னை போய்விட்டது என்று பொருளன்று; நீறு பூத்த நெருப்பு அது! கனன்று கொண்டிருக்கும் இலட்சியம்! இப்போது நமக்குள் முதற்கண் வேண்டுவது ஒற்றுமை! தாராளமான பொருளுதவி செய்யும் சிந்தனை - செயல்!" என்று அண்ணா அவர்கள் சிறையிலே இருந்து மீண்டு வந்து மக்கள் உணர்வை கிளறிடும் கருத்துக்களைப் பேசினார்.

புரட்சி நடிகர், அறிஞர் அண்ணா அவர்களின் அற்புதமான ராஜ தந்திர உரையின் உள்நோக்கத்தை ஆழ்ந்து நோக்கினார்! எழுபத்தையாயிரம் ரூபாயைப் போர் நிதிக்காக மத்திய அரசுக்கு அனுப்பினார்!

போர் நிதிக்கு பணம் வழங்கிய எம்.ஜி.ஆர். கொடை உள்ளத்தை, அப்போது பாராட்டாத காங்கிரஸ்காரர்கள் கிடையாது.

சீன எதிர்ப்புப் போர் நிதிக்காக, தன் புகழுக்காக வழங்கப் பட்ட தங்க வாளையே ஏலம் போட்டார் எம்.ஜி.ஆர். அந்தப் பணத்தையும் போர் நிதிக்கே கொடுத்தார்!

பிரதமர் பண்டித நேரு, புரட்சி நடிகரின் கொடை யுள்ளத்தையும், உணர்வையும் பாராட்டி, நடிகர்கள் சார்பாக ஒரு நடிகர், முதன் முதலாகப் போர் நிதி வழங்கியுள்ளாரே என்பதை மதித்து, ஒரு பாராட்டுக் கடிதத்தையும் எழுதிப் பாராட்டி மகிழ்ந்தார்.

காவல்துறை நூற்றாண்டு விழா சென்னையிலே கொண்டாடப்பட்டது. அப்போது தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவராக எம்.ஜி.ஆர். இருந்தார்.

புரட்சி நடிகர், கலையுலகம் சார்பாக, நடிகர்களைக் கொண்டு, போலீஸ் பிரச்சாரப் படங்களைத் தயாரித்துக் கொடுக்கத் தக்க கடன் உதவிகளையும் வழங்கினார்!

அத்துடன் மட்டுமா இருந்தார்? அவர் தனது சொந்த செலவில் அவரே ஒரு கதையினையும் படமாக்கித் தந்தார் என்பதை - எவரே மறுப்பர், மறப்பர்!

தன்னுடைய கட்சிக்கு, எதிர்கட்சி ஆளும் கட்சி என்ற கீழ்புத்தி அவரிடம் இல்லை! ஆளும் கட்சியிலிருப்பவர்களும் பொது மக்கள் தானே என்ற பெரும்புத்தி இருந்ததால்தான் - மக்களை எல்லாம் சமத்துவ பெரு நோக்கோடு எம்.ஜி.ஆர். பார்த்தார்! தக்க உதவிகளை எல்லாம் தடையின்றிச் செய்தார்!

நடிகர் பரம்பரைக் கோடாரிக் காம்பாக அவர் என்றுமே இருந்ததில்லை. மாறாக, தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பாக, ஸ்டண்ட் யூனியன்' ஒன்று அமைய, தனது சொந்தப் பணத்தையும் ஓரளவு கொடுத்து உதவினார்!

நீக்ரோக்களை அடிமையாக ஏலம் போடும் காட்சியினையும், அந்த மக்களை விலைக்கு வாங்கி மாடுகளைப் போல நடத்தும் பிரபுக்களின் மனிதத் தன்மையற்றக் கொடுமையினையும் ஒழிக்கப் புறப்பட்ட மாவீரன் ஆப்ரகாம் லிங்கன் அவர்களை, ஒரு நாடகக் கொட்டகையிலே, ஜான் வில்கியூஸ் பூத் என்பவன் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றான்!

ஆனால், திரைப்படக் காட்சிகளுக்காக வேண்டுமானால் எம்.ஜி.ஆர். துப்பாக்கியைத் தூக்கியிருக்கலாம்! ஓர் உயிரைத் துடிதுடித்துக் கொல்ல அவர் அதைத் தொட்டவரல்லர்.

நடிகர் குலப் பொறாமை, அரசியல் சூதாட்டம் காரணமாக, நடிகவேள் எம்.ஆர். ராதா என்ற நடிகர் தூக்கிய ரிவால்வர் குண்டுகளைத் தனது கழுத்துத் தொண்டையிலே ஏந்தி, எம்.ஜி.ஆர். தனது கொடை அருளால் உயிர் பிழைத்துக் கொண்டார் என்று வேண்டுமானால் கூறலாம்!

பிரான்ஸ் நாட்டிலே சார்ல்ஸ் - லா - பூச்யர் என்ற ஒரு நடிகர் இருந்தார். அவர் மக்கள் உரிமைக்காகப் போராடி வந்த மாவீரர்!

சந்துமுனைகள் முதல் சந்தைப் பேட்டைகள் வரை, அரண்மனை வாயில்கள் முதல் அங்காடி முனைகள் வரை, பிரான்ஸ் நாட்டு மக்கள் சுதந்திரமாக, வளமாக வாழ வேண்டும் என்பதற்குரிய சம்பவங்களை நாடகமாக நடித்துக் காட்டி அவர் போராடி வந்தார்!

இதைக் கண்ட கொடுங்கோலன் லூயி ஆட்சி, பேராத்திரம் கொண்டது! கொந்தளித்து எழுந்தது! ஆனாலும், மக்களுடைய மனதிலே மனித தெய்வமாக வீற்றிருந்த அந்த நடிகனைப் பிடித்துச் சிறையில் தள்ளப் பயந்தது!

பிரான்சில் மக்கள் புரட்சி ஏற்பட்டு விடுமோ என்ற பயமே அதற்குக் காரணம்! அதனால், அவரை அமைதியாகச் சந்தித்து, பிரான்ஸ் நாடாளுமன்ற உறுப்பினராக்கினால், பிறகு ஊமையாகி விடுவார் என்று கருதிய லூயி ஆட்சி - அவரை நாடாளுமன்ற உறுப்பினராக்கியது!

நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார் லாபூசியர்! ஆனால், அங்கும் நாடக பாணியிலேயே பிரான்ஸ் நாட்டு மக்கள் பிரச்னைகளுக்காகவே போராடினார். நாடகங்களை நடித்துக் காட்டினார்!

அதே நேரத்தில் முன்பைவிட சற்று அதிகமான தைரியத்தோடு, பிரான்ஸ் நாட்டு மக்கள், லாபூசியர் என்ற நாடகப் புரட்சியாளனது நாடகங்களை நடித்தனர்; பார்த்தனர். இந்த மக்கள் எழுச்சி, கொடுங்கோலன் லூயி ஆட்சிக்குப் பெரிய தலைவலியாக மாறிவிட்டது!

ரொட்டித் துண்டுகளுக்கு அலைந்த பிரெஞ்சு குடி மக்களது எரிகின்ற இதயத்திற்கு மக்கள் நடித்த லாபூசியருடைய நாடகம், பெட்ரோலை ஊற்றியது போலானது!

பார்த்தது லூயி ஆட்சி! பதைத்து எழுந்தது! சார்லஸ் லாபூசியர் என்ற மக்கள் நடிகனைச் சிறையில் அடைத்தது!

சிறையிலேயாவது அமைதியாக இருந்தாரா அந்த நடிகர்? மற்ற கைதிகளையும் சேர்த்துக் கொண்டு அங்கும் அன்றைய பிரான்ஸ் நாட்டின் கொடுங்கோற் சம்பவங்களை விளக்கி நாடகமாடியவாறே இருந்தார்!

அதன் எதிரொலி என்ன ஆயிற்று தெரியுமா? லூயி ஆட்சியை எதிர்த்து பிரெஞ்சு மக்கள் நடத்திய புரட்சியில் பாஸ்டில் என்ற அந்த கொடுமைச் சிறைக் கூடம் தூள் தூளாக்கப்பட்டது.

'பாஸ்டில் என்ற காரக்கிரகம் தகர்த்தெறியப்பட்ட காரணங்களுள் ஒன்றுதான், சார்லஸ் லாபூசியர் என்ற அந்த நடிகன் நடித்த நாடகங்களின் எழுச்சிமிக்க உணர்ச்சிகளே' என்று நாவன்மை படைத்த மேடைப் பேச்சாளர் வால்டேர் மேடைகள் தோறும் முழங்கினார்!

அந்த மாபெரும் நாடகப் புரட்சி வீரனைப் போல, மக்கள் நாயகர் எம்.ஜி.ஆர். மக்கள் உரிமைக்காக அரசியல் பிரிவில் போராடினார்!

தமது திரைப்படங்களிலே, நாடகங்களிலே, கதை அமைப்புகளிலே, உரையாடல்களிலே, காட்சிகளிலே, பாடல் களிலே, சமுதாய எழுச்சி மிக்க கருத்துரைகளைத் திணித்தும்; தானாக மற்றவர்களை சித்தரிக்கும் சூழ்நிலைக்குப் பக்குவப் படுத்தியும் புரட்சி செய்தார் எம்.ஜி.ஆர்.

படம் எடுக்கும் முதலாளியாகவும், இயக்குநராகவும், நடிகராகவும், அரசியல்வாதியாகவும், கொடை வள்ளலாகவும், கட்சி நடத்தும் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் இறுதியாக தமிழ்நாடு முதலமைச்சராகவும் அவர் வாழ்ந்தபோதெல்லாம், சரிகை துப்பட்டா வாழ்க்கை வாழாமல், தரித்திர நாராயணர்களின் வாழ்க்கைகாகவே புரட்சிக் குரல் கொடுத்தார் புரட்சி நடிகர்.

பிரெஞ்சு மக்களுடைய உள்ளங்களிலே லாபூசியர் தனது நாடகங்கள் மூலமாகப் புரட்சி வித்துக்களைப் பரவலாகத் தூவிப் பக்குவப்படுத்தினார்.

தமிழக மக்களுடைய இதயங்களிலே புரட்சி நடிகர் நாடகம், திரைப்படங்கள், பாடல்கள், வசனங்கள், மக்கள் சேவைகள், மூலமாகத் தனது புரட்சி வித்துக்களைப் பரவலாகத் தூவி வைத்தார்!

சர் லாபூசியர் வெளியே இருந்தால் ஆபத்து என்பதை உணர்ந்த லூயி ஆட்சி, அவரைப் பிரான்ஸ் நாட்டின் நாடாளு மன்ற உறுப்பினராக்குவதன் வாயிலாக அவர் உணர்வை ஊமையாக்கிட செயல்பட்டது.

புரட்சி நடிகரை, அப்போதைய ஆளும் கட்சி, சட்டமன்ற மேலவை, உறுப்பினராக்கவில்லை. ஆனால், தமிழக மக்கள் அவரை பரங்கிமலை தொகுதியில் இருந்து தமது ஓட்டுச் சக்திகள் மூலமாக சட்டமன்ற உறுப்பினராக்கி, தமது குறைகளை எடுத்துச் சொல்ல தூது விட்டனர்!

சர் லாரூசியர் நாடாளுமன்றத்திலும், சிறையிலும், தனது நாடகக் கருத்துக்களை நடித்து, பாஸ்டில் என்ற கொடுமைக் கூடாரத்தைத் தகர்த்தெறிந்து, லூயி ஆட்சியையே மாற்றிடும் பிரெஞ்சு புரட்சிக்குக் காரண கர்த்தாவாக இருந்தார்!

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். ஜனநாயகப் புரட்சிக்கு மக்களைத் தயார் செய்து வைத்திருந்த காரணத்தால், அவரைக் கொல்ல ஒரு நடிகன் ஏந்திய கைத் துப்பாக்கியின் வேட்டொலியை எதிர்த்து, அதே மக்கள், 'ஓட்டொலி' மூலம் அப்போதைய ஆட்சியை எதிர்த்து தவிடு பொடியாக்கி காட்டி விட்டார்கள்!

இவ்வாறு புரட்சி நடிகர், கலைஞனாக இருந்து கொண்டே ஓர் ஆட்சியை மாற்றுமளவுக்கு மக்கள் ஜனநாயகனாக நடமாடினார் என்பது கலையுலக வரலாற்றில் ஓர் பொன்னேடு ஆகும்!

புரட்சி நடிகர் கலையுலகக் கோமானாகக் காட்சியளித்தாலும், கர்வம் இல்லாதவர், அடக்கமானவர், நன்றி கொன்றிடும் பண்பற்றவர், எல்லாரும் இன்புற்று வாழ வேண்டும் என்ற பெருநோக்குடையவர், தன்னை வைதாரையும் வாழ வைத்த தறுகணாளர் ஆவார்!

கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களுடைய செல்வக் குமரிகள் இருவருக்கும் லட்ச ரூபாய்க்கு மேல் செவழித்து திருமணம் செய்து வைத்து அவர்கள் குடும்பத்தைக் குன்றின் மேலிட்ட விளக்கென ஒளியிட வைத்தவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி அவர்கள் குடும்பத்தை, தான் சாகும்வரை அரசியல் தகுதியோடு வாழ வைத்து, நட்பிற்கு இலக்கணமாக நடமாடினார்!

தன்னிடம் பணியாற்றிய அவருடைய கலைக்குடும் பங்கட்கு, எண்ணற்ற வாழ்வு- தாழ்வுக் கொடைகளைக் கொடுத்து, அவரவருடைய ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்ட பண்பாளர் அவர்!

கலை உலகத்தில் எத்தனையோ எழுத்தாளர்களுக்கும், கவிஞர்களுக்கும், நடிகர்களுக்கும் கலை நுட்ப தொழிலாளர் கட்கும் ஏணியாக நின்று தோள் கொடுத்தவர் எம்.ஜி.ஆர்.!

கலைவாணர், தனது கார் ஓட்டும் தொழிலாளிக்கு வெள்ளிவிழா கொண்டாடி, பொன்னாடைப் போத்தினார்! ஆனால் எம்.ஜி.ஆர். தனது நாணயமான கணக்குப்பிள்ளையை மந்திரியாகவே பணியாற்ற வைத்தார்! உலகம் கண்டதுண்டா இந்த அற்புதத்தை?

புரட்சி நடிகர், தனது உழைப்பால் வந்த வருவாயைக் கொண்டு, சென்னை அடையாறு பகுதியில், தனது தாயின் பெயரால் சத்யா ஸ்டுடியோ என்ற ஒரு ஸ்டியோவை உருவாக்கினார்!

ஆனால், அவர் சாகும்போது அந்த ஸ்டுடியோவின் முதலாளிகள் யார் தெரியுமா? அவரிடம் பணியாற்றிய தொழிலாளர் தோழர்கள் தான்!

ரஷ்ய நாட்டிலேயாகட்டும், அல்லது கம்யூனிசம் பரவிய பிற நாடுகளிலேயாகாட்டும், தனி மனிதன் உழைப்பால், தான் ஈட்டிய பொருளால் உருவான ஒரு தொழிலகத்தை, அதுவும் பல லட்சங்கள் பெறுமானமுள்ள ஒரு பெரிய நிறுவனத்தை, தொழிலாளர்களுக்கு சம பங்காக உரிமை எழுதி வைத்த ஒரு சமதர்மவாதியை, உண்மைப் பொதுவுடைமைவாதியை, உலகத் தலைவர்களிலே யாராவது ஒருவர் இருந்தால் காட்டட்டுமே புரிந்து கொள்ளலாம்?

எனவே, புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்களை இது வரை, ஆனால், சுருக்கமாக, கலையரங்கக் கண்ணோட்டத்தில் கண்டோம்!

பொது மக்கள் அரங்கம், அவரை எப்படி போற்றிப் புகழ்கிறது என்று பார்ப்போமே?

## என் இதயக்கனி

"எம்.ஜி. ஆருக்கும், எனக்கும் இருக்கிற தொடர்பை நாடு அறியும். எம்.ஜி.ஆரைப் பாராட்டுவது என்னை நானே பாராட்டிக் கொள்வதாகக் கருதப்படும். உண்மை தானே! எம்.ஜி.ஆர். என்றால் அவர் தாங்கியுள்ள கொள்கை எது என்பதை நாடு அறியும். முல்லைக்கு மணம் உண்டு என்பதைக் கூறவா வேண்டும்? இந்தக் கனி, தங்கள் மடியில் விழாதா என்று பலர் எதிர்பார்த்தனர். அது என் மடியில் விழுந்தது. என் இதயத்தில் எடுத்து வைத்துக் கொண்டேன்.

*1958ல் - 'நாடோடி மன்னன்' வெற்றி விழாவில் அறிஞர் அண்ணா ஆற்றிய உரைப்பகுதி*

# பொது மக்கள் அரங்கம்

மக்களாட்சிப் பேரலைகளில் கப்பலாக, எவ்வித பயமு மின்றிச் செல்கின்ற ஒரு பொருளை, உயர்ந்த அரசியல் கண்ணோட்டத்தோடு காண்பவர்கள் அப்பொருளுக்குப் பொதுமக்கள் என்று பெயர் சூட்டுகின்றார்கள்!

மன்னராட்சியில் பொதுமக்களாகிய நாங்கள், மக்களாக இல்லையா என்றால் 'இல்லை' என்றுதான் கூறுவோம்!

ஏனென்றால், எங்களுடைய வாழ்க்கைக்குத் தடையாக வருகின்ற எந்தச் சட்டத்தையும் நாட்டின் தலைவர் என்று அழைக்கப்படுகின்ற ஓர் அரண்மனைப் பிறவி இயக்கி விடுமானால், தலைவன் என்ற அப்பிறவியை எங்களால் விலக்க முடியாது.

பிராண வாயு, நிலவொளி, கதிர், நீர், நெருப்பு இவை உலகத்திற்கெல்லாம் பொதுவாக இருக்கும்பொழுது, இவற்றை அனுபவிக்கின்ற நாங்களும் எவ்வித ஏற்றத் தாழ்வுமற்றப் பொது மக்கள்தாம்!

அதுபோல, எங்களை ஆள்கின்ற தலைவனுடைய செயல்முறைத் திட்டங்கள், எங்களுக்குப் பொதுமையாக்கப் படாவிட்டால், அந்தத் தலைவனை, ஆட்சிப் பொறுப்பிலிருந்து நீக்கப் பொதுமக்களுக்கு உரிமையுண்டு!

குடிமை ஆட்சியில், "மக்கள் குரலே மகேசன் குரலாகிறது!" மன்னனோ மந்திரிகளோ இடையில் இருப்பார்களானால், அவர்கள் எங்களுக்குத் தேவையானவற்றை நிறைவேற்றும் ஏவலர்களே தவிர, எசமானர்கள் அல்லர்!

இத்துணைப் பெரிய தகுதி வாய்ந்த எங்கள் இதயத்தில், சில உணர்ச்சிகள் பாராபட்சமின்றி விரவப்பட்டிருக்கின்றன.

இளமைப் பருவம், காதல் உணர்ச்சி, தாய்மை, தந்தைமை, முதுமை, இறப்பு, பொருளாதார ஏற்றத்தாழ்வுத் திறமையினால் ஏற்பட்ட மேடு பள்ளங்கள், இடையிடையே வந்து போவன! ஆதலால், இவற்றைக் கணக்கில் சேர்ப்பதற்கில்லை.

எங்களிடத்தில் நம்பிக்கையான, ஓர் அழுத்தமான இடத்தைப் பிடிக்க வேண்டும் என்றால், எமது உணர்ச்சி நாளத்தின் நம்பிக்கைக் குருதியாக எவரேனும் ஓட வேண்டும்.

செக்கு மாடுகளைப் போல நாங்கள் அந்த நம்பிக்கைக்கு உரியவனைச் சுற்றிச் சுற்றித் திரிய வேண்டுமென்றால், அந்த மனிதனின் கூர்த்த அறிவும், நேர்மைக்கும் - நீதிக்கும் முதலிடம் கொடுத்து, தானும் கீழே அமர்ந்து கொள்ளும் பண்புடையவராக இருந்தாலொழிய - நாங்கள் எவரையும் மதிப்பதில்லை.

உலகத்தின் துவக்கக் காலத்தில், சூரியன் கிழக்கில் வந்தாலும், அந்தியில் அமர்ந்தாலும், நிலவு நிறைவோடு இருந்தாலும், குறைந்து தேய்ந்து காணப்பட்டாலும், எழினி இரண்டு - ஒன்றை ஒன்று மோதி உடைத்துக் கொண்டாலும், விண்மீன்கள் எரிந்து சாம்பலாக விழுந்தாலும், கடல் கொந்தளிப்பால் நிலம் விழுங்கப்பட்டாலும், பூகம்பத்தால் பூமியின் முதுகு வெடித்தாலும், எரிமலையால் பசுமை கரியாக்கப்பட்டாலும், நடுங்கிக் கொண்டிருந்த மனித இனத்தின் எதிர்காலத்தை, சில தத்துவப் பல்வண்ணச் சுடர் விளக்கேற்றி வைக்க, திருவள்ளுவர் என்ற பேரறிஞர் தோன்றினார்!

அந்த வாழ்வியல் நெறி மேதையின் காலத்திற்கு முன்பிருந்தே, பொது மக்களின் தொடர்ச்சியாகிய நாங்களும் தான் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம்.

எங்களது இதயங்களைக் கவர, அற்புதங்களைக் கையிலேந்திக் கொண்ட மதங்கள் எத்தனை? எங்கள் செவியில், அவை சிதறிய மந்திர நூல்கள் எத்தனை?

ஜெப மாலையின் சரட்டை எங்கள் கையில் கொடுத்து, நாங்கள் உருட்டுகின்ற அழகைப் பார்த்து, "இன்றோடு உங்கள் பாபங்கள் மன்னிக்கப்பட்டன", என்று கூறிய குருமார்கள் எத்தனையோ பேர்கள்.

அதற்குப் பிறகும், நாங்கள் உலகத்தின் பட்டி தொட்டிகள் தோறும் இருந்து வருகின்றோம் - வாழ்ந்து வருகின்றோம்.

அடிமைகளாக நாங்கள் இருந்து வந்த பகுதிகளில் எங்கட்கு சுதந்திரமளிக்க பல அசோகன்கள், சாலமோன்கள், தீர்த்தங்கரர்கள், பௌத்தர்கள், இயேசு கொள்கைவாதிகள், முகமது நபி வாரிசுகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், ஆபிரகாம் லிங்கன்கள், தாமஸ் பெயின்கள், காந்தியடிகள், தந்தை பெரியார்கள், அறிஞர் அண்ணாவைப் போன்றவர்கள் வந்தார்கள்!

நாங்கள் நம்பிக்கை என்ற மதச் சேற்றில் புதைந்து கிடந்த நேரத்தில், விஞ்ஞானக் கைக்கொடுத்துத் தூக்கி விட்டவர்கள் எண்ணற்றோர்!

மிருகங்களாகக் காடுகளில் நாங்கள் அலைந்து திரிந்த நேரத்தில் - கடலின் அழகும், அழகின் சிரிப்பும், மலைமிடுக்கின் உயர்வும், கவிதை உருவில், கதைப் போக்கில், வடித்துக் காட்டியவர்கள் கோடான கோடிகள்!

மேற்கூறியவர்களிடமிருந்து பொதுமக்களாகிய நாங்கள், கைமாறி கைமாறி வருகின்றபோது, தத்துவச் சூட்டால், கருத்துக் கொதிப்பால், சிந்தனை நெருப்பால், விஞ்ஞானத் தழலால், மெஞ்ஞானக் கனலால், மொழியின் இளஞ்சூட்டால், நாங்கள் வெந்து வெந்து புடம் போட்ட பொன்னொளிர்த் தங்கமாகவே மாறிவிட்டோம்!

இனிய பொது வாழ்க்கைக்கு ஏற்றப் பொருட்களாக நாங்கள் மாற்றப்பட்டதால், பொது மக்கள் என்று அழைக்கப் பட்டோம்!

இத்தகைய நாங்களே, இன்னும் பக்குவப்பட்டாக வேண்டும் போலும்! ஏனெனில், எப்பொருளின் மீதும் காலத்தால், சந்தர்ப்ப சூழ்நிலையால் நெருக்கடி நிலைமையால், கசடு ஏறல் இயல்புதானே!

இரசம் போகாத கண்ணாடி என்றாலும், முகம் பார்க்கும் முன்பு அதை ஒருமுறை துணியால் துடைப்பது வழக்க மில்லையா?

ஒளி தரும் வைரம்தான் எனினும், நாய்த் தோலால் அதைச் சுத்தப்படுத்துவது உண்டே?

மாற்றுக் குறையாத தங்கமானாலும், அதன்மீது படிந்துள்ள தூசைத் துடைத்துத்தானே ஆகவேண்டும்?

எனவே, அவ்வப்போது எங்களில் ஒருவர் தோன்றி - எங்களைத் தூய்மைப்படுத்துவதும் உண்டு! - ஆற்றுப் படுத்துவதும் உண்டு!

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், அதற்கேற்ப பலர், பற்பலத் துறைகளிலே எங்களைச் சந்தித்தனர்!

தத்துவஞானிகள், விஞ்ஞானிகள், மொழிப் பேரறி ஞர்கள், சமாதானப் பிரியர்கள், அடிமைகளின் ஆதரவாளர்கள், விடுதலை வீரர்கள், சமதர்மக் கொள்கைவாதிகள், இலட்சிய வீரர்கள், ஆத்திகர்கள், நாத்திகர்கள், பகுத்தறிவாளர் எனப்படும் சுயமரியாதைக்காரர்கள், அத்தனை பேரும் எங்களைச் சந்தித்தார்கள்!

தேவையான நேரத்தில், தேவையானவற்றை மனக்கசப் பின்றி வாரி வழங்கும் வள்ளல்களும் மேற்கூறியோருள் ஒருவகையினர் தாமே!

எங்கள் நினைவில் மாறா தத்துவமாய், குறையா நிலவாய், குன்றாத பொருளாய், வளையாத சீராய் நிலைத்து, செழித்து, எம்முடைய மனம் களிக்க நிழலாடிக் கொண்டிருப் பவர்களுள் மறைந்துபோன எங்கள் மக்கள் திலகமும் ஒருவராக இருந்தார்.

இந்த உலகம் என்ற சக்கரத்திலே, ஆரக்கால்களாக இருப்பவர்கள் தத்துவஞானிகள் முதல் வள்ளல்கள் வரை ஆவர்!

மனிதன் வாழும்போது பிறருக்கு எதையும் கொடுத்து விடுவதில்லை.

ஒழுக்கத்தைப் பற்றி விளக்க வந்த தத்துவஞானிகள் எல்லாம், "மனிதன் எதையும் தேக்கிக் கொள்கின்ற பண்டங்கள்" என்றே குறிப்பிடுகின்றனர்!

இயற்கை அளித்த முழு உருவம்தான் மனிதன், பேரறிஞன் டார்வினது சித்தாந்தப்படி, "தெளிவற்றக் குரங்கின் உள்ளம், ஐந்து பெரிய கலைஞர்களால், மந்தி மனிதனாக்கப் பட்டான்" என்பதாகும்.

உதாரணமாக, மனிதன் கண்களுக்குப் பூக்கள் தான் விருந் தளிக்கின்றன. பூக்களுக்கு மனிதன் கண்கள் அவசியமில்லை.

மனிதனுடைய செவிகளுக்குக் குயில்கள்தான் தேவை யான இசை ஓசையைக் கொடுக்கின்றன!

இவை போல, மனிதனுடைய ஐம்புலன்களுக்கும், இயற்கைதான் எல்லாவற்றையும் வழங்குகின்றதே தவிர, மனிதன் பார்த்து இயற்கைக்கு எதையும் கொடுப்பதில்லை.

எனவேதான், 'மனிதன் ஒரு தேக்கி வைக்கக் கூடிய பொருள் என்றான்' மாமேதை டார்வின்!

கருவிலிருந்து கல்லறை வரையில், எல்லாவற்றையும் தேக்கிக் கொண்டு, கடைசியில் உடலைக்கூட ஓர் எட்டடிக் குழிக்குள் பதுக்கி வைத்துக் கொள்கின்றான்

இத்தகைய மனிதன், பக்குவப்பட்டக் கல்வியினால், பழுத்த அறிஞர்களின் தொடர்பால், தன்நிலை அறிந்து, உள்ளொளி எரிய, தன்னையே மற்றவர்களுக்குக் கொடுக்க ஆரம்பிக்கின்றான்.

இந்த நிலையை ஒரு மனிதன் அடைய ஆண்டுகள் எத்தனை ஆகும் தெரியுமா?

மாஞ்செடிகள் கனி கொடுக்க எத்தனை வருடங்கள் ஆகின்றன?

தென்னை இளநீர் வழங்க, சில மாதங்களாவது ஆவது போல், மனிதனும் தன்னையே வழங்கிட, காலத்தின் துணை தேவைப்படுகின்றது.

எனவே, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களின் சமுதாயச் சேவை, மக்கள் தொண்டு, காலத்தின் நற்சான்றிதழாகும்!

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

- என்ற திருவள்ளுவரின் தத்துவத்திற்கேற்ப, அவர் பொது மக்களுக்குச் செய்துள்ள மனிதாபிமானத் தொண்டு களை இந்த உலகமே நன்கு அறியும். நெஞ்சுடைய மக்களால் மறக்கப்பட்டால், அது நஞ்சல்லவா?

இளம் சிறார்களின் பிஞ்சு நெஞ்சங்களிலே கல்விக் கனிச் சாற்றை இனிக்கச் செய்ய வேண்டுமென்று கருதிய - கல்விச் சேவையாளர் எம்.ஜி.ஆர்.; சென்னையில் ஓர் இலவச ஆரம்பப் பள்ளியைத் தனது வருமானத்தில் முதன்முதலாக ஆரம்பித்தார்!

அந்தப் பள்ளி இன்று ஆல்போல் வளர்ந்து - அருகு போல வேரூன்றி, பல்கலைக் கழகத்திற்குப் பக்கம் நிற்கும் கல்விக் கூடமாக, ஜானகி ராமச்சந்திரன் மெட்ரிக்குலேஷன் பள்ளியாக எம்.ஜி.ஆர். ஆண்-பெண் மேநிலைப் பள்ளியாகத் தோற்றமளிக்கின்றது!

பொருள் இல்லாமையால் கல்வி கற்க முடியவில்லை என்று மனம் குமைந்த மாணவர்கள், பொன்மனச் செம்மலிடம் சென்றால், அவர்கட்கு வேண்டிய பணத்தையும் கொடுத்து, கல்வியையும் கற்கச் செய்து அவர்களுடைய வாழ்க்கையிலே அறிவு ஒளியை ஏற்றினார்!

எத்தனையோ மாணவர்கள் அவரது ஆதரவால் படித்தார்கள்! கற்ற அந்த கல்வியாலே அவரையே எதிர்த்தார்கள்

- ஏசினார்கள் சிலர்! நன்றி மறந்த பிண்டங்கள் அவை என்பதையும் நாடறியும்!

வடசென்னையிலே இருக்கும் வெள்ளுடைக் கோமான் சர். பிடி. தியாகராயர் கல்லூரிக்கு, தனது சொந்த வருவாயிலும், நாடக வசூல் வாயிலாகவும், ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு மேலே வாரி வழங்கினார்! அதன் காப்பாளர்களிலே ஒருவராகவும் திகழ்ந்தார் எம்.ஜி.ஆர்.

அடையாறிலே இருக்கும் ஔவை ஹோம் என்ற மாதர் நல வளர்ச்சி நிறுவனத்திற்கு, முப்பதாயிரம் ரூபாயை நன்கொடையாகக் கொடுத்தார் - பரங்கிமலைப் பாரி!.

பச்சையப்ப முதலியார், செங்கல்வராய நாயக்கர் போன்றவர்கள் எப்படி கல்விக்காக தமது சொத்துக்களை வழங்கினரோ, அதைப் போலவே எம்.ஜி.ஆரும். வழங்கிக் கல்விக் காவலராக விளங்கினார்!

அறத்தின் சொற்பொருள், 'அற்றது' என்பதே! அது, பற்றற்ற நிலை, தன் நலப் பற்றற்றத் தூய்மையைச் சுட்டுவதாகும்.

உண்மை, நன்மை, குணம், நல்லூழ், அருள், தருமம், புண்ணியம், சமைய நம்பிக்கை, ஞானம், நேர்மை, ஒழுங்கு முறை என்று, இடத்திற்கேற்ப பல்வேறு கருத்துக்களில் பயன்படும் சொல் அறம்!

திருவள்ளுவர் பெருமான், 'ஈதலே அறம்' என்றார்! ஈதலுக்கு அடிப்படை வறுமை! அதனாலெழும் பசி! - பிற தேவைகள்!

நெருப்பிலும்கூடத் தூங்கலாம்; ஆனால், வறுமை வந்தவன் கண்ணிமைக்கவே முடியாது. எனவேதான், 'வறுமை எனப்படும் பாவி' என்று வறுமையை வயிற்றெரிச்சலோடு சபித்தார் அவர்!

'மணிமேகலை' ஆசிரியர், பசியைப் 'பிணி' என்றார்! பசித்த உயிர்கட்கு உணவிடுதலே ஜீவகாருண்யம்!' இது வள்ளல் பெருமானின் உயிராபிமான வாக்கு!

பிறப்பு வேதனை, இறப்பு வேதனை, பிற வாழ்வியல் வேதனைகளைவிட மிகமிகக் கொடியது பசி வேதனை! வறுமை வேதனை!

அதனால்தான், 'கொடிது கொடிது வறுமை கொடிது' என்று இருமுறை வற்புறுத்திப் புத்தி புகட்டினார் - ஔவையார்.

வறுமையிலும், இளமையில் வறுமை, அதனினும் கொடிது, ஏனென்றால், மானம், குலம், கல்வி, வண்மை, அறிவு, தானம், தவம் முயற்சி, தாளாண்மை, காமுறுதல் என்ற பத்தும் பறந்து போம்' என்றார் தமிழ்க் கிழவி - பசி வந்திடில்!

வறுமைப் பிணிகளகற்றிடும் இந்த ஞானத்தை, அறிவை, அதன் அடிச்சுவடுகள் பிறழாமல் ஆற்றி, மக்கள் திலகம் தன் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டியவர்! காரணம் இளமையில் அவர் அநுபவித்த வறுமை! - பசி!

இத்தகைய வறுமையெனும் பாவி, இளம் வயது பள்ளிச் சிறுவர் - சிறுமியர்களைப் பற்றினான் என்றால் அந்த மனிதப் பிஞ்சுகளின் வாழ்வு, பூகம்பத்தில் சிக்கிய பூமிதானே!

கல்வி கற்கும் பிள்ளைகள், பசியெனும் கோரப் பிணிக்கு ஆட்பட்டு விடக்கூடாது என்ற மனிதாபிமான அக்கறையினால் தான், அவர்களுக்குச் சத்துணவு வழங்கும் திட்டத்தைக் கொண்டு, வந்து, வயிற்றைக் குளிர வைத்தார் எம்.ஜி.ஆர்.

அதன் எதிரொலி என்ன? பள்ளிப் பிள்ளைகள் நாள் தோறும் தவறாது பள்ளிகளுக்குப் போகும் ஒழுங்குமுறை உருவானது!

அவ்வாறு அவர்கள் வருகை தருவதனால், கல்வி வளர்ச்சியில், முன்னேறி, கேரள மாநிலத்தின் படிப்பறிவுக்கு அடுத்த நிலையிலே உள்ளது தமிழகம்!

கல்லார்க்கும் கற்றவர்க்கும், பொருள் உள்ளார்க்கும் இல்லார்க்கும், வாலிபர் முதல் வயோதிகர்க்கும் சிறுவர், சிறுமியர்க்கும், பிற எல்லார்க்கும் தேன் சிதறும், பக்திச் சொற் பொழிவுகள் வாயிலாகத் தமிழமுதை விருந்தாகப் படைத்து

வந்த, அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்தவாரியார், புரட்சித் தலைவரின் சத்துணவுப் புரட்சித் தத்துவத்தின் கல்வித்துவத்தை ஆழ்ந்து நோக்கினார்!

அதன் பயன், திருச்சி மாவட்டத்திலே, திருப்பராய்த் துறை எனும் சிற்றூரிலே இயங்கி வரும் 'இராமகிருஷ்ணர் குடில்' என்ற கல்விக் கோட்டத்திற்கு' மக்கள் திலகத்தை அழைத்தார்.

கல்வி போதனை பெற்று வரும் அங்குள்ள பிள்ளைக் களுக்கான உணவு, உடை, இன்ன பிற தேவைகளை விளக்கினார்! வாரியாரின் வாக்கைக் காக்க, அங்கேயே மூன்று லட்சம் ரூபாயைக் கொடையாக வழங்கப் பரங்கிமலைப் பாரி உத்தரவிட்டார்.

காவிரி வெள்ளமே துள்ளி எழுந்துக் களி கொண்டாற் போல், அந்த பக்திச் சொல்லேருழவ, 'சொற்பொழிவுச் சக்கரவர்த்தி'யான வாரியார் சுவாமிகள், புரட்சித் தலைவரைப் புகழ் வானத்தில் பறக்கவிட்டு, 'பொன்மனச் செம்மல்' என்ற விருதை அங்கே வழங்கி, அறம் மணக்கும் பாதையிலே நடமாட விட்டார்!

அன்று முதல் தமிழகம், எம்.ஜி.ஆர். அவர்களைப் 'பொன்மனச் செம்மல்' என்றே அழைத்து அகம் மலர்ந்த காட்சியைக் கண்டோம் அல்லவா?

'மண்திணிந்த நிலனும் நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும் வளிதலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு
ஐம்பூ தத்து இயற்கை போல'

நமது உடல் பஞ்சபூத சக்திகளால் இயங்குவது என்ற மணிவாசகரின் அறிவியில் மொழி போல, மக்களை நோய் பிடித்துத் தாக்குவது இறப்பின் ஏக்கமாகும்!

தேகத்திலே தேங்கிக் கிடக்கும் அந்தத் தேக்கம், பிணி விக்கல்களை அவ்வப்போது எழுப்பி அச்சுறுத்தும் போது, அன்போடு நீர் வழங்கும் மருத்துவ உதவிகளைப் புரிவது, மானிடத்தின் உயிர்ப்பேணல் கடமை!

அந்த அரிய பெரிய சீரிய உயிரற உதவியை, நேரிய முறையில் ஆற்றிட, வாகினி ஸ்டுடியோ உரிமையாளரான திரு. நாகி ரெட்டியார் அவர்கள் தனியார் துறையிலே முன் வந்தார்.

மக்கள் திலகம் பெயரால், சென்னை, வட பழநி பகுதி யிலே உள்ள விஜயா தோட்டத்தில் ஒரு மருத்துவமனையை நிறுவி, அதன் ஒரு பகுதிக்குப் புரட்சித் தலைவர் பெயரைச் சூட்டிட விரும்பி, இராமாவரம் இல்லத்திற்குச் சென்று அவரிடம் அதற்கான அனுமதி விழைந்தார்!

மக்கள் உயிருக்கான அந்த பொற்காலத் திட்டத்தைப் பொன்மனச் செம்மல் கேட்டதும், 'உமது, மருத்துவத் தொண்டிற்கு இது எனது தொண்டு' என்று, ஒரு சூட்கேசைக் கொடுத்து, வாழ்த்தி அனுப்பினார்.

ஸ்டுடியோவிற்குள் திரும்பி வந்த ரெட்டியார் அவர்கள், அதைத் திறந்தார்! பணமாகக் காட்சியளித்தது பெட்டி!

நாம் கேட்கச் சென்றது எம்.ஜி.ஆரின் பெயரைச் சூட்டிட அனுமதி, அதற்கு அவர் பெட்டியைக் கொடுத்து அனுப்பி விட்டாரே என்று அவர் வியந்தார்! அதைத் திருப்பிக் கொடுத்திட மீண்டும் வந்தார் - அவரிடம்!

மறுபடியும் வருகை தந்தவரைக் கண்ட மக்கள் திலகம், வந்தவர் வாயைத் திறக்காததற்கு முன்பே, ''இதுவும் எனது மருத்துவத் தொண்டுதான், மறுக்காதீர்கள், சிறப்பாக நிறுவுங்கள் மருத்துவமனையை' என்று, மீண்டுமோர் சூட்கேசை ரெட்டியாரிடம் கொடுத்து அனுப்பினாராம்!

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற அவரது அரசியாலாசான் அறிஞர் அண்ணா கூறியதை அடிக்கடி செவிமடுத்த ஞானமல்லவா எம்.ஜி.ஆருக்கு?

சென்று பாருங்கள் வடபழநி பஸ் ஸ்டாண்டு எதிரே, இன்றும் எம்.ஜி.ஆர். பெயரால் அந்த மருத்துவ மனையின் வரவேற்பு வளைவு, நம்மை வரவேற்கும் காட்சியை!

''தேவா வருகவென்று சொல்வதோ - ஒரு
செம்மைத் தமிழ்மொழியை நாட்டினால்

ஆவலறிந்து வருவீர் கொலோ - உம்மை
அன்றி ஒரு புகலும் இல்லையோ.....?

"இறைவா! உமையன்றி எனக்கு யாருளர்? நல்ல செழுந்தமிழால் நான் அழைத்தால், என் ஆவல் அறிந்து வரமாட்டீர்களோ.....? என்று, அமரகவி பாரதியார் இறைவனை - தமிழருமை கூறி ஏக்கத்தோடு வேண்டினார்.

இறை வழிபாட்டிலும் அவர் இசைத் தமிழை மறந்தாரில்லை! தமிழ் மண்ணின் உருகி ஓதும் இயல்பு அது!

தேத்தமிழ் தெளித்து, தேவ தேவனைப் பராவிய செந் 'நா' அருளாளர் வள்ளல் பெருமான், 'வான் கலந்த மாணிக்கவாசகா....! என்று, வாயார வாழ்த்தி, ஊனுருக உடலுருகப் பாடி பரவசப்பட்டார் - தமிழ் இசையால் ஓதி-ஓதி!

"தத்துவங்கள் தீண்டாத உள்ள கத்தே
தமிழமுத மலரரும்பாய்த் தோன்றி இன்று
சித்தாலே மலர்ந்துதயா மணத்தை உலகு
தேர்ந்து கொள வருகுதிதை ஏற்று வாழ்வீர்!"

வாக்கு ஒவ்வொன்றும் விலை மதிக்கவொண்ணா மாணிக்கம் போலப் பாடிச் சென்ற மாணிக்கவாசகப் பெருமான், மேற்கண்ட தமிழ்ப் பண்ணால், தமிழ் பூக்களால், தடாதகைப் பிராட்டி நாயகனை பாசுரம் ஓதி, வழுத்தினார்! பா - பாக்களால், சுரம் - இசைத்துப் பாடி அருள் வேண்டுவது தானே பாசுரம்?

'நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்' என்ற ஜனநாயக 'நா' படைத்த நாவுக்கரசர் பெருமான் 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' என்று, உலக உருவாக்க விளக்கத்தின் முதல் வித்தான ஒலியால், அம்மையப்பனை, தமிழ்ப் பண்ணால் பாடி வழிபட்டார்!

ஆய கலைகள் அறுபத்து நான்கிலும் தலையாய கலை - இசைக் கலை! தமிழ் இசை தொன்மையானது! தொல் தமிழர் கண்டு இறையை ஆரா்த்தித்தது!

தமிழர் வாழ்வுக்குப் பொருளதிகாரம் வழங்கிய 'தொல் காப்பியம்' நூல் - இதற்குரிய தலையாய சான்று!

தொல் என்றால் - பழைய, காப்பு என்றால் - அதனைப் பாதுகாப்பது, இயம் என்றால் - அனைவரும் அதன்னை ஏற்கும் வகையில் எடுத்துச் சொல்லும் பான்மை உடையதுதானே, தொல்காப்பியம்?

பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, சிலம்பு இசைக்கும் நுட்ப நுணுக்கங்கள், சீவக சிந்தாமணி, இன்னபிற இலக்கியங்களிலும் பரந்து கிடப்பது என்ன? இயல்-இசை-நாடகம் அல்லவா?

முத்தமிழின் புகழ் பூத்த இத்தகைய அரும்பெரும் முத்துறைக்கும், தனது ஆட்சியில் என்னென்ன பணிகளை முத்தாய்ப்பாகச் செய்ய முடியும்?

அதே நேரத்தில், முத்தமிழிலும் புகழ் பெற்ற வித்தகர்கள் திறன்களை எவ்வாறு நாடறியச் சிறப்பிக்க இயலும்?

அந்தந்தத் துறை கலைஞர்களின் வெப்ப வறுமைகளை, எப்படியெல்லாம் தட்பங்களால் தணிக்கலாம்? என்று, சிந்தித்த முத்தமிழ் காவலர் எம்.ஜி.ஆர்.

அவற்றின் அரிய செயற்கரிய செயலாக எதிரொலித்த சேவைகள், அனேகமனேகம்! எனினும், காலத்தால் சிற்சில கல்வெட்டுக்களைப் போல, தேவைகளுக்கேற்ப ஆற்றியவர் புரட்சித் தலைவர்!

அதன் முதற்றொண்டாக, அமரகவி பாரதியின் ஏக்கமான தமிழ் இசையால் தயாபரனை வழிபடும் எண்ணத்திற்கு, எழிலுருவம் கொடுத்தார்!

ஏனென்றால், இசை இறைவழிபாட்டின் இதயமுருக்கிக் கலை! இறைவனிடம் மனிதனையும் - மனிதனிடம் இறையுணர்வையும் இசைய வைக்கும் கலை - இணங்க வைக்கும் கலை!

மக்கள் எல்லோரும் ஒன்று என்ற ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உணர்வை; ஒழுங்கு முறைப்படுத்தும் ஒழுக்க ஒடுக்கக் கலை என்பதை, அந்த இசை அருமையை - இயல்பாகவே உணர்ந்தவர் எம்.ஜி.ஆர்.!

அதற்கேற்ப, தேவார நால்வர்களின் பூவாரப் பண்களால், உளமுருக நாடோறும் ஓதி, ஓதி இறைவழிபாடு இயற்றி வந்த தமிழிசை ஓதுவார் தருமபுரம் சுவாமிநாதன் அவர்களை, புரட்சித் தலைவர் தமிழக அரசின் ஓதுவராக நியமித்தார்!

திங்கள்தோறும் ஆயிரம் ரூபாயை அரசு சார்பாக வழங்கி, தேவாரத் தமிழிசையால், இறைவனை வழிபடும் வழியை, முதன்முதலாக தமிழகத்தில் அரசு சார்பாக எம்.ஜி.ஆர். நாட்டினார்! தமிழிசை ஓதுவார் மரபுக்குரிய அரசு மரியாதை-மாண்பு, அதனால் உருவானது!

மானுடத்தைப் புகழ்ந்துபாடும் போக்கை மாய்த்தது நாயன்மார்! ஆழ்வார்கள் காலம்! அதாவது ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பிறகு!

'ஏழிசையாய் இசைப் பயனாய், எங்கும் நிறை ஒலிமய மாய் ஒளிரும் இறைவனை, மருதமலை மாமணியே முருகா' என்று பாடிப் பாடி தமிழ் மண்ணை இசை வலம் வந்தவர் மதுரை சோமு அவர்கள்!

கனிவுடைய சுவையோடு, அவர் தமிழிசைப் பாடும் போது, கல்லாரும், கற்றாரும் கேட்டுக் களி தாளம் கொட்டுவர்! இசைக் கச்சேரி இடையே எழுந்து சிறுவர் நாட்டியமும் ஆடுவர்! ஒருமுறை இது யானை கவுனி அம்மன் விழாவிலே நடந்த சம்பவம்!

அத்தகைய ஆற்றல் பெற்ற இசை மேதையை, அரசவைத் தமிழ் இசைவாணராக நியமித்தார் எம்.ஜி.ஆர். மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் ஊதியம் வழங்கி, இசை மேதைகட்கு அரசு மரியாதையை அளித்தார்.

மைசூர் மன்னரின் அரசவை இசைப் புலவர் ஜி.என். பாலசுப்பிரமணியம் என்ற இசை வித்தகர்!

ஏழிசை வாணி, கோகிலகான இசை வாணி என்று இன்று நம்மால் அழைக்கப்படும் ஏழிசை வித்தகி எம்.எஸ். சுப்பு லட்சுமியின் 'சகுந்தலை' என்ற திரையோவியத்தில் நடித்தவர் அவர்! அவரது மாணவியான எம்.எல். வசந்தகுமாரி, கர்நாடக இசையில் தேர்ச்சி பெற்ற வித்தகி!

இன்றைய திரையுலகிலே, பெரும்பாலும் தாய் நட்சத்திர மாக, பார்ப்பவர் மனமுருகிட அற்புதமாக நடித்து வரும் ஸ்ரீவித்யா என்ற நடிகையின் தாயார்!

ஒரு பெண்பால் இசைஞானியின் இசைத் திறன், அரசவை நிகழ்ச்சிகளிலும் ஒலித்து, பெயரும், புகழும் பெற வேண்டும் என்று எண்ணிய தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர்., ''அரசவைத் தமிழிசைச் செல்வி''என்ற விருதை வழங்கி அரசு கௌரவத்தை அவருக்கு அளித்து, மாத ஊதியம் பெற வழி வகுத்தார்!

கண்ணுக்கு விருந்தளிக்கும் கவின் கலை ஆடற்கலை! அந்தந்த நாட்டின் கலைப் பண்புகளை அதன் நயங்களை பயன்பாடுகளை, ஆடலழிகள் தமது விழி நயனங்களால் - மெய்பாடுகளால் விளக்கி, பார்ப்பவர்களுக்கும், பகிர்ந்தளித்துப் பரிமாறிடும் இறைவழிபாட்டின் அற்புதக் கலை! அதனால்தான், அக்கலை ஆலயங்களிலே ஆரோகணமாக வளர்ந்தது!

இயற்கையின் இயக்கமே அசைவதும் ஆடுவதும் தானே! அதன் எதிரொலிதான் ஆடற்கலை! அது அறிவை வளர்க்கும் தெய்வீகத்திலே ஆன்மாவை சேர்க்கும்! மனம் மயங்கி இணங்க வைக்கும்!

ஆண்கள்கூட ஆடலாம் ஆடற்கலையை! அவன் ஆடினால் பண்பு நலம் பெறுவான்! மென்மை மனமடைவான்! உடல் வளமும் பலமும் உருவாகி, அழகுக்கே உருவாக்கப் பட்ட அணங்குகளையும், 'தோற்கடிக்கும் உடலுக்கு, உவந்து தவழ்ந்தாடும் எழில் மேனியையும் காண்பான்!

அந்த பொன்னார் மேனியனுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் தான், சிலிர்த்த அழகு சிதறும் நமது செம்மேனிச் செம்மலான பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர்.!

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆரின் அந்த ஆடற்கலை மாண்பை, 'மன்னாதி மன்னன்' என்ற படத்திலே, தரையிலே புலி ஓவியம் வரைவதிலே கண்டோம் - இல்லையா?

தெய்வீகப் பண்புகள் சிதறும் இந்த ஆடற்கலையின் புகழை, உலக நாடுகள் எல்லாம் உற்று நோக்க வேண்டும் -

மகிழ்ந்து பாராட்ட வேண்டும் - தமிழ்க் கலைகளைத் தரணி கண்டு வியக்க வேண்டும் என்ற பேராசை எம்.ஜி.ஆருக்கு!

சுவர்ணமுகி என்ற ஆட்டனத்தியை தமிழக அரசின் ராஜ நர்த்தகியாக நியமித்தார்! ஆடற்கலைக்குப் பெருமை சேர்த்தார்! மாத ஊதியமும் வழங்க எம்.ஜி.ஆர். ஏற்பாடு செய்தார் அரசு சார்பாக!

மாண்டலின் என்பது ஒரு மேலை நாட்டு இசைக் கருவி! சுவரம், தாளம், ஒத்திசைப்புக்கு மட்டுமே பயன்படும் வாத்தியம் அது!

இசையை மீட்டிட இயலாது அக்கருவியாலே, குறிப்பாக, மேலைநாட்டு இசையைத் தவிர, கர்நாடக இசையை அறவே இயங்க வைக்க இயலாத கருவி!

அந்த மாண்ட்லின் இசைக் கருவியிலே, எல்லா அராகங் களையும் விரைவாக, அழகாக, சுவரம் பிறழாமல் இனிமையாக மீட்டிட முடியும் என்பதை, சீனிவாசன் என்ற இளைஞன் காட்சியாக்கினான்!

இசை மேடையிலே அதைக் கண்ட எம்.ஜி.ஆர். சிறுவனின் வியன்மிகு திறமையை விளங்கி வியந்தார்!

அதே இடத்தில், தன் கழுத்திலே அணிந்திருந்த தங்கச் சங்கிலியைக் கழற்றி அந்த இளைஞன் கழுத்திலே அணிவித்துப் பாராட்டி மகிழ்ந்தார்!

இன்று அந்த இளைஞன், அமெரிக்கா போன்ற கடல் கடந்த நாடுகளுக்கெல்லாம் சென்று, மாண்ட்லின் சீனிவாசன் என்ற புகழைப் பெற்று, இசை உலா வருகின்றார்!

தனக்கென ஓரிடத்தைப் பற்றிய தாரகையாகத் திரை வானில் ஒளிர்ந்து கொண்டிருந்தவர் கவிஞர் கண்ணதாசன் அவர்கள்!

கொத்து முத்தமிழ் கொண்டு, பொருள் கொழுத்த தமிழால், சம்பவங்களுக்குரிய சான்றான பாடல்களாக நிற்க சங்கத் தமிழைக் கையாண்டவர் அவர்!

எழுதுகின்ற என் பேனாவிற்கும் - அவர் எழுத்திற்கும் ஏற்பட்ட மேடு பள்ளங்கள், மோதல்கள், வாக்குவாத வசைகள், வாழ்த்துதல்கள், நட்டலால் ஏற்பட்ட நெருக்கங்கள் எலாம் நீரிற் குமிழிகளாகி விட்டன! இன்று!

என்செய்ய! இளமை, நீரலைகள் தானே! உடம்பு நீரெழுத்துக்கள் அல்லவா? அதனாலே வருந்தி யாது பயன் இந்த யாக்கைக்கு?

நான் 6.4.52 அன்று, சென்னை ஒற்றை வாடைக் கலையரங்கில் நடத்திய இலட்சிய ராணி என்ற நாடகத்திற்கு ஆறு பாடல்களை எழுதினார்! கலைவாணரைத் தலைமை வகிக்க அழைத்து வந்த கேண்மையின் வைரமவர்! போகட்டும்!

கல்வி கற்புடைய மனைவிக்குச் சமம்! மனைவியினால் பெறும் இனிய இன்ப உணர்வுகளே கவிதைகள்!

ஏறுபோல் பீடு நடைபோடும் வீறுபெற வைப்பது அந்த மனைவியின் கற்பு! அறம், அன்பு!

சொல்வன்மை, மனச்சான்று, எதிர்கால நோக்கு, சிந்தனைச் செல்வம், கற்பனை வளம் என்ற கவிப்புலனுணர்வுகள் ஒரு கவிஞனிடம் அமைதல் வேண்டும்.

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஒண்டொடி உணர்வுகளோடு; கவிஞன் கவிப்புல உணர்வுகளும் ஒன்றிடின், அவன் கவிதை வானிலே மரணமிலாப் பெருவாழ்வு வாழும்!

இது ஒரு சிலரால் மட்டுமே இயலக்கூடிய கவிதைச் சித்து விளையாட்டாகும்! அவர்களிலே, ஒருவர் கவி மன்னர் கண்ணதாசன்! பத்தாயிரம் பாடல்களை எழுதிய திரையுலகத் தற்கால வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளாவார்!

இத்தகைய கவிதைச் சிற்பிக்கும் - புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருக்கும் இடையே, சினிமா, அரசியல் கருத்து வேறுபாடுகள், பற்பல துறைகளில் முரண்பாடுகள் தோன்றியதுண்டு!

இருவரும் இருவேறு அரசியலரங்கப் பங்காளிகளாயினர்! ஆனால், அவரவர் தொழிலில் அந்தப் பகை வாசனை மூக்கை நீட்டும்போது,பொன்மனச் செம்மல் புலவர் புலமைப்பித்தன், காவியக் கவிஞர் வாலி கவிஞர். நா. காமராசன், கவிஞர் முத்துலிங்கம், ஆர்.கே. சண்முகம், ஓம் சக்தி ஜகதீசன் ஏ.கே. வில்வம் என்ற திரைமாற்றங்களை அமைத்துக் கொண்டவர்!

'புரட்சித் தலைவர் தமிழக முதல்வரானார்! "பகைவனுக்கும் அருள்வாய் நெஞ்சே, வைதாரையும் வாழ வைக்கும் தமிழ்"! என்ற தெய்வத் தமிழ்ப் பண்பாட்டை; சிரம்பழுத்த அவரது சிந்தனையின் சிம்மாசனத்திலே நிறுத்தினார்.

அறம் பழுத்த அவருடைய செயல்கள், அறிஞர் அண்ணாவின், 'வசவாளர்கள் வாழ்க', எங்கிருந்தாலும் வாழ்க! என்ற தத்துவப் பண்பாட்டிற்குச் சான்றாக, திறம் பழுத்த அரசு ஆணைகளால் பிறந்தன! அவற்றுள் ஒன்றுதான் கவியரசு கண்ணதாசன் தமிழக அரசவைக் கவிஞரென முகிழ்த்த உத்திரவு!

தமிழ்ஞான சம்பந்தருக்கு ஞானப்பால் தந்து ஆட்கொண்டதைப் போல, சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு அடிமை ஓலை காட்டி அருளுட்டியைதப் போல, நாவுக்கரசு பெருமானுக்கு சூலை நோயை ஈந்து மருள் நீக்கியதைப் போல, மாணிக்க வாசகனாருக்கு சிவஞான போதம் நூலைக் காட்டி, தெய்வீக அருளிற்குச் சான்றளித்ததைப் போல, கவிஞர் கோமான் கண்ணதாசனைக் கேளாமலே; அவரிடம் ஏதும் முன்கூட்டி அறிவிக்காமலே, 'கவிஞர் கண்ணதாசன் சாகும் வரையிலும், தமிழக அரசவைக் கவிஞர்' என்ற அரசு மரியாதை ஆசனத்தைத் திடீரென அளித்து ஆட்கொண்டார் எம்.ஜி.ஆர்.!

தமிழக அரசின் அரசவைக் கவிஞராக இருந்தபோது கவியரசு கண்ணதாசன் அவர்கள், அமெரிக்கத் தமிழ்ச் சங்கங்களின் அழைப்பை ஏற்றுக் கொண்டு தமிழ் தொண்டாற்றிடவும், உடல் நலம் பேணவும் அமெரிக்கா சென்றார்!

கரந்தைத் தமிழ்க் கல்லூரியின் சிற்பிகளில் ஒருவரான தஞ்சை தண்டமிழர் தமிழவேள் உமா மகேஸ்வரம் பிள்ளை

அவர்கள், தமிழ் வளர்ச்சிக்கு நிதி திரட்டிட சென்றபோது, வட நாட்டில் வாரனாசி எனும் காசி மாநகர் அருகே உள்ள அயோத்திக்கு அடுத்த பைசாபாத் நகரிலே பொங்கிய காய்ச்சலுக்குப் பலியாகி மாண்டார்! அவருடைய பிணம் தமிழ்நாடு திரும்பிவில்லை!

வாடிய பயிருக்கும் வாடிய வள்ளல் பெருமானின் அருட்பாவை, இரண்டாவது அணியாக நின்று வம்படி வாதுக்கழைத்து, மருட்பா போராட்டக் களம் கண்டு தோற்ற, தமிழ்ப் பெருங்கடலொத்த சான்றோன்; தமிழ் அகராதி தொகுத்தோன்; தமிழ்த் தென்றல் திரு.வி.க.வினுடைய ஆசான், பன்னூற் புலவரான பண்டித நா. கதிரைவேற் பிள்ளை அவர்கள், சென்னையிலே இருந்து நீலகிரியிலே உள்ள உதகமண்டலத்திற்கு தமிழ் தொண்டாற்றவும், ஓய்வு பெறவும் சென்றிருந்தபோது, நோய் தாக்கித் திடீரென இறந்தார்! அவர் பிணம் சென்னை இருப்பிடத்திற்கு திரும்பிவில்லை!

தமிழக சட்டமன்ற மேலவைத் தலைவராகப் பதவி வகித்தவர் சி.பி. சிற்றரசு அவர்கள், சிறந்த பேச்சாளர் - சிந்தனை யாளர்! புரட்சித் தலைவரால் மதிக்கப்பட்ட தலைவர்களில் ஒருவர்!

உலக சட்டமன்ற சபாநாயகர்கள் மாநாடு, ஆஸ்திரேலியா கண்டத்திலே உள்ள சிட்னி மாநகரிலே நடைபெற்றது. சி.பி. சிற்றரசும், அதன் அழைப்பை ஏற்றுக் கலந்து கொள்ளச் சென்றார். தமிழ்நாடு திரும்பாமலேயே எதிர்பாராத விதமாக அங்கேயே மாண்டார்! பிணம்தான் விமானத்தில் வந்தது! அதைக் கொண்டு வந்தது எம்.ஜி.ஆர். என்ற மனித நேயம்!

நீதிக் கட்சியின் சிற்பிகளில் ஒருவராகத் திகழ்ந்த சட்டமன்ற உறுப்பினரான அஞ்சாநெஞ்சன் சர்.ஏ.டி., பன்னீர் செல்வம், இங்கிலாந்து நாட்டிலே நடைபெற்ற பிரிட்டிஷ் பேரரசு மாநாட்டிலே கலந்து கொள்ளச் சென்றார். போகும் வழியில் ஓமான் கடல் விமான விபத்தால் இறந்தார்! மறுபடியும் அவர் பிணம்கூட தமிழ்நாடு திரும்பவில்லை!

செங்கோட்டை எஸ். சுப்பிரமணிய பிள்ளை அவர்களை, ரத்தினச் சுருக்கமாக, எஸ்.எஸ். பிள்ளை என்பார்கள்! தமிழாசிரியராகப் பணியாற்றிய பட்டதாரி அவர்! கணிதத் துறையிலும் பட்டம் பெற்ற மேதை! மாநிலக் கல்லூரியின் கணித பேராரசிரியராகவும், பணி புரிந்த பொறுமையளர் - வறுமையாளர்! கணிதமேதை ராமானுஜத்தை விடத் திறமையாளர்!

உலக அறிவியல் மேதை ஐன்ஸ்டினுக்கு முன்னோடியாக இருந்த, பிரான்ஸ் நாட்டு வானியல் வித்தகர் ஒருவருடைய கணக்குச் சூத்திரங்களுக்கு விடை விளக்கம் தரவேண்டும் என்று, அந்நாட்டு அரசு உலகுக்கு ஓர் அறிவிப்பு விடுத்திருந்தது!

கணிதத்துறை வித்தகரான எஸ்.எஸ். பிள்ளை, பிரான்ஸ் நாட்டு அறிவியல் மேதையின் கணக்குச் சூத்திரங்களுக்கான விடை விளக்கங்களை எழுதி, அமெரிக்காவிலே உள்ள பிரின்ஸ் யூனிவர்சிட்டிக்கு அனுப்பினார்!

அந்த கணிதவியல் வழி விளக்கங்களைக் கண்ட அமெரிக்கா பல்கலைக் கழகம், எஸ்.எஸ். பிள்ளையின் கணக்கியில் திறனையும், சூத்திர அறிவின் கூர்மையினையும், ஆழ்ந்த புலமையினையும் பார்த்து, வியந்து, பிரெஞ்சு விஞ்ஞான மேதைக்கு உதவியாளராக இருக்கத் தகுதியுடையவர் பிள்ளை என்ற, நற்சான்றிதழோடும், உடனடியாக அவரை ஃபிரான்சுக்கு அனுப்பிடல் வேண்டும் பரிந்துரைத்தது!

ஏனென்றால், ஃபிரான்ஸ் கணித மேதையின் சூத்திரங்களுக்குரிய விடை விளக்கங்களுக்கு யோசனை கூறிட, ஆய்வு புரிந்திட, அப்போது நமது பிள்ளையைப் போல ஒரு கணித மேதை உலக அரங்கில் தென்படவில்லை. அதனால், அவரை அமெரிக்கப் பல்கலைக் கழகம் பரிந்துரைத்தது!

தமிழ்நாட்டிலே உள்ள ஒவ்வொரு துறை மேதைகளும் கூடி, அவரவர் அன்பளிப்புப் பிரிவாக பணமும் திரட்டிக் கொடுத்து கணித உதவியாளராக பிள்ளையை ஃபிரான்சு நாட்டுக்கு அனுப்பி வைத்தார்கள்.

சர்.ஏ.டி. பன்னீர் செல்வம் போல, நமது கணிதவியல் மேதை, தமிழியல் துறை வித்தகரான பிள்ளையும் கடலிலே விமானம் சென்றுகொண்டிருந்தபோது ஏற்பட்ட விபத்தால், விமானம் எரிந்து விழுந்து செத்தார் - பாவம்! அவர் பிணம் கூட திரும்பவில்லை தமிழ்நாட்டிற்கு!

உலகப் புகழ்பெற்ற ஃபிரான்ஸ் அறிவியல் மேதைக்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த கணக்கியல் மேதை எஸ்.எஸ். பிள்ளை உதவியாளராகச் சென்றாரென்றால், அவருடை திறமை, புலமை, நுட்பம், ஆழ்ந்த நோக்கும், அறிவுக் கூர்மையும் எப்படி இருந்திருக்க வேண்டும்? சிந்திக்கப்பட வேண்டியவர் அல்லவா அவர்?

கணக்கியல் மேதை இராமானுஜத்தைப் பாராட்டும் உலகுதான், பிள்ளையின் திறமையைப் பாராட்டி மகிழ, இப்படி ஒரு தமிழன் இருந்தான் என்ற அவரின் மேதைமையை உலகுக்கு உணர்த்திடத் தவறி விட்டது!

அது போகட்டும், எந்த திராவிடராவது இத்தகைய ஒரு கணக்கியல் மேதை இருந்தார் என்பதை அறிவாரா? அவரைப் பற்றி சிந்தித்தனரா? பேசினரா? எழுதினரா? - பொருளாதார மேதை டாக்டர் ப. நடராஜன் ஒருவரைத் தவிர!

செங்கோட்டை நகராட்சி மட்டும், எஸ்.எஸ். பிள்ளை யின் பெயரை, எஸ்.எஸ். தெரு என்று ஒரு சிறிய சந்துக்கு அவர் பெயரை வைத்திருக்கிறது! ஆனால், கணக்கியல் மேதை இராமானுஜத்திற்கு மட்டும் வானளாவிய பாராட்டு, புகழ், இதுதான் மனித இன உணர்வோ?

இது எவ்வாறுள்ளது என்றால், நெல்லை நகராட்சி உறுப்பினராக நீண்ட நாள் இருந்து, பொது மக்கள் பணியாற்றி யவர் கா. சுப்பிரமணியப் பிள்ளை. நேர்மையான வறுமையாளர்!

தமிழ்நாட்டிலே முதன் முதலாக முதல் மாணவராக மாஸ்டர் ஆஃப் லா (Master of Law) என்ற பட்டம் பெற்றவர்!

அதனால், அவரை அறிவுடையார் எல்லாம் எம்.எல். பிள்ளை என்றே அழைத்துப் பெருமை பட்டார்கள்.

அவருடை தந்தையார் பெயர் காந்திமதிநாத பிள்ளை! அவர் தமிழ்நாட்டிலேயே முதல் மாணவராக முதல் முறையாக பி.ஏ. தேர்வில் வெற்றி பெற்றவர். அதனால் அவரைப் பி.ஏ. பிள்ளை என்று அறிஞர்கள் புகழ்ந்து போற்றினார்கள்.

எம்.எல். பிள்ளைதான் கா.சு. பிள்ளை, காசு பிள்ளை தான் எம்.எல்.பிள்ளை. அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை தலைவராகப் கா.சு. பிள்ளை பணியாற்றிவர்! மாநிலக் கல்லூரியிலும் பேராசிரியராகப் பணி புரிந்தவர்!

நோபல் பரிசு பெற்ற தாகூரின் சாந்திகேதனம் கல்விக் கோட்டத்தில், ஒவ்வொரு துறையிலும் புலமை பெற்ற மேதைகள் எழுதிய புத்தகத்திற்கென வழங்கிட ஆண்டுதோறும் பத்தாயிரம் ரூபாய் பரிசு ஒன்று வைக்கப்பட்டது!

எந்தத் துறையில் எவர் வெற்றி பெறுகின்றனரோ, அவரவர்கட்கு, அந்த பரிசு அளிக்கப்படும் என்ற அறிவிப்பு சாந்திநிகேதனத்தால் வெளியிடப்பட்டது.

எம்.எல். பிள்ளை எழுதிய Principles of Criminology என்ற நூலுக்கு அந்த பரிசு கிடைத்தது! ‘வங்காளிகள் எல்லாம் முட்டாள்களா? தமிழ்நாட்டுக்காரன் அவ்வளவு பெரிய புத்திசாலியா? என்ற காழ்ப்புப் போர் அங்கே நெருப்பானது!

சர்வதேச திரைப்பட விழா கல்கத்தாவிலே 10.01.94 அன்று நடைபெற்றதே... அதில், தமிழ்நாட்டு மார்லன் பிராண்டோவை சிறப்பு விருந்தினராக அழைப்பது என்று முடிவை அறிவித்து, நடிகர் திலகத்திற்கும் தெரிவிக்கப்பட்டது.

அந்த விழாவிற்கு, சிவாஜி கணேசன் அவர்களை வரவேண்டாம் என்று மத்திய அமைச்சகம் கூறிவிட்டது. மீண்டும் வங்காளத்தில் தமிழன் மீது பொறாமைப் போர் தொடுக்கப்பட்டு, தமிழன் சிவாஜி கணேசன் அவமானப் படுத்தப்பட்டிருக்கிறார்!

ஏன், சிவாஜி வரவேண்டாம் என்று போர் தொடுத்தார்கள் என்றால், சிவாஜியை விட மிருணாளினி சென் என்பவர் நன்றாக நடிப்பவராம்! அதனால், வேறு ஒரு நடிகரை அழைக்க வேண்டாம் என்ற அரசியல் அழுக்காறு தோள் தட்டி நின்றது! இறுதியாக வங்க இயக்குநரான தபன் சின்கா என்பவர் விழாவைத் துவக்கி வைக்கிறார்! எப்படி தேசிய ஒருமைப் பாட்டுணர்வு?

அதனைப் போலவே கா.சு. பிள்ளையை எதிர்த்து வங்காளிகள் அப்போது, போர் தொடுத்தார்கள்! எம்.எல். பிள்ளை அங்கே பணியாற்றிய வேலையைத் தூக்கி எறிந்து விட்டு, பலத்த போரட்டங்களுக்கிடையே பரிசைப் பெற்றுத் திரும்பினார்!

பிற மாநில அழுக்காறு அறிவுக்குப் பயந்து சாந்திநிகே தனம் பரிசு, அந்த ஆண்டோடு நிறுத்தப்பட்டு விட்டது! எம்.எல்.பிள்ளை அன்று பரிசு பெற்ற நூல்தான் இன்றுவரை எம்.எல். சட்டப்படிப்பிற்குரிய அரிச்சுவடியாக உள்ளது.

ஏன் இதைக் கூறுகிறேன் என்றால், இவ்வளவு பெரிய அறிவாற்றலாளரான கா.சு. பிள்ளைக்கு, நெல்லை நகர மக்களே தக்க மரியாதை காட்டாமல், நெல்லை சந்திப்புக்கு கீழே உள்ள அண்ணா மேம்பாலத்தினருகே, ஒரு மூலையில், எல்லாரும் அசுத்தம் புரியும் இடத்தில், எவர் கண்ணுக்கும் புலப்படாத ஓர் இடத்தில் மார்பளவுகூட அல்ல, தலையளவு சிலை ஒன்று வைக்கப்பட்டு உள்ளது - என்பதற்காகவேதான்! - இது எவ்வளவு பெரிய அவமானம் பார்த்தீர்களா?

ஒருவர் அறிவாளியாக மட்டும் இருந்தால் போதாது. அடியாட்கள் கூட்டமும் இருந்தால்தான் அவர் சகலகலா அறிஞராக மதிக்கப்படுவார் - சில காலத்திற்கு! இல்லாவிட்டால், அவர் சிலை மீது நாயும் சிறு நீர் கழிக்கும்! மனித இன நாயும் சிலையருகே சிறுநீர் பெய்யும்! மலமும் கழிக்கும்! அவ்வளவு மோசமான இடங்களில் அறிஞர் குல திலகங்களின் நினைவுச் சின்னங்கள் நிறுத்தப்படுகின்றன!

மதுரமொழுகும் தென்னந்தமிழால் ஏறக்குறைய பத்தாயிரம் பாடல்கள் இயற்றிய கவியரசு கண்ணதாசன் அவர்கள், தமிழ்த் தொண்டாற்றிட அமெரிக்கா சென்றபோது காலம் ஆனார்! அவர் தேசிய நீரோட்டத்திற்காக உழைத்தவர்.

ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற உலக சபாநாயகர் மாநாட்டிற்குச் சென்ற தமிழக மேலவைத் தலைவர் சி.பி. சிற்றரசு அவர்கள், புரட்சித் தலைவர் இயக்கத்தைச் சேர்ந்தவர்! அரசியல் தொண்டுக்காக சென்ற இடத்திலேயே இறந்து போனார்!

மூன்றாவதாக நடமாடும் பெரியார் என்று சாகும்வரை போற்றப்பட்டவர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி! அவர் கலைஞர் இயக்கத்தைச் சார்ந்தவர்! 'தனி அரசு' என்ற நாளேட்டின் உரிமையாளர் - ஆசிரியர்! சட்டமன்ற உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்! இலக்கிய, அரசியல் எழுத்தாளர்!

நாடாளுமன்ற உறுப்பினராக அவர் இருந்தபோது, அந்தமான் தீவுகள் தமிழர்களின் அழைப்பை ஏற்று, ஆங்குள தமிழ்ச் சங்கங்களிலே சொற்பொழிவாற்றச் சென்றார்! மாரடைப்பால் எதிர்பாராமல் மாண்டார்!

கவியரசு கண்ணதாசன், சி.பி. சிற்றரசு, ஏ.வி.பி. ஆசைத் தம்பி இவர்கள் மூவரும், தமிழ் - அரசியல் தொண்டு களை ஆற்றிட,கடல் கடந்து சென்று மரணமடைந் தார்கள்! மூவரும் மூன்று கட்சிகளைச் சேர்ந்தவர்கள்! அந்த மூவர் பிணங்களும் கடலுக்கு அப்பாலே கிடந்தன!

முதல்வர் புரட்சித் தலைவருக்கு இவர்கள் இறந்த செய்தி கிடைத்தது - அந்தந்த நாடுகளிடமிருந்து! பதறினார் - பழகிய பாசத்தால்! துடித்தார்!

கட்சிகள் பிணங்காளயிற்றே என்ற பிணக்கேதுமின்றி, விமானங்களிலே அந்தப் பிணங்களைத் தக்கவாறு பாதுகாப் புடன் கொண்டு வந்து, அவரவர் உறவுகளிடம் ஒப்படைத்து,

குணமெனும் குன்றேறி நின்றார் எம்.ஜி.ஆர். என்பதற் காகவே இவ்வளவும் விவரித்தோம்!

புரட்சி நடிகர் ஆட்சிக்கு முன்பு தமிழ்நாட்டைத் தாண்டிச் சென்றவர்களின் பிணங்கள் திரும்பித் தமிழகம் வந்ததது கிடையாது! அதற்கு எடுத்துக்காட்டாக, சர்.ஏ.டி. பன்னீர் செல்வம், எஸ்.எஸ்.பிள்ளை. தமிழவேள் உமாமகேஸ்வரம் பிள்ளை ஆகியோர் சவங்களாகும்!

தமிழகத்தின் எல்லையிலேயே மாண்ட பண்டித ந. கதிரைவேற் பிள்ளை பிணம், உதகமண்டலத்திலேயே அடக்கம் செய்யப்பட்டு விட்டது!

இலண்டனிலிருந்து வந்த அருள்மொழி அரசு, திருமுருக கிருபானந்தவாரியாரின் ஆன்மா, விமானத்தையே மயிலாசன மாகக் கொண்டு, செவ்வேள், திருவடி சேரும் பேறு பெற்றது!

தமிழ் மணம் பூத்த அவருடைய ஆன்மீக உடல், தக்க மரியாதையுடன் தமிழகம் வந்து சேர்ந்து, தமிழ் மண்ணிலே புதைந்து புகழ் பெற்றது!

இராமயண வாலி, மாவீரன்! ஆனால், அவமதிப்பை மரணத்திலும் கொடிதாக மதித்தவன்!

இந்திரனுக்கு இணையான வலிமை இருந்ததோ இல்லையோ? ஆச்சா மரங்கள் ஏழையும் தனது ஒரே அம்பினால் துளைத்திட்ட விற்போர் வித்தகன் என்று மற இலக்கணம் அவனைப் பாராட்டுகின்றது!

வீரம் என்பதற்கு விளக்கம், விரிவு, அழகு, போர்க் கருவிகளை ஏந்துவதிலே மட்டுமில்லை. 'மாற்றார் அன்புக்கும் கட்டுப்படுவது' என்ற இலக்கணத்திற்கு அவன் இலக்கிய மானவன்!

அறமென்ற அங்குசத்திற்கு காகுத்தன் என்ற கரி அடங்க வில்லை என்ற வாதப் போரை, அமர்க்களத்திலே வாலி ஆற்றியபோது, இராமனது அம்பாலடிப்பட்டு, உடற் குருதி

சிலிர்க்க சிலிர்க்க அவன் ஓச்சிய சொற்போர் ஆயுதங்களின் வலிமையை - நாம் காணலாம் - வால்மீகியிலும், கம்பனிடத்திலும்!

அறம் வழுவா அத்தகைய மற வேந்தனின் பெயரைப் புனைப் பெயராகப் பூண்ட கவிஞர் வாலி, இதிகாச வாலியை ஒப்ப, திரை சாம்ராச்சியத்தில் வீர உலா வரும் ஒரு கவிஞானி - தன் மானி!

வஞ்சனைகளற்ற வாஞ்சனையாளர்! துஞ்சும் நேர மெல்லாம் முஞ்சும் தமிழால் கொஞ்சி, ஆன்மாவுக்கு அஞ்சலி செய்பவர்! கிடைக்கும் பிஞ்சு புகழுக்காக நெஞ்சை அடகு வைக்க விரும்பாத பஞ்சு மனம் கொண்டவர்.

அவருடைய அருந்தமிழ் பாடல்களை, இசைத் தமிழ்க் கீதங்களை, செந்தமிழ் தெள்ளமுதமான கவிதைகளை நாம் தமிழியல் துறைகள்தோறும் சுவைத்து வருகின்றோம்!

எழுதுகோலை வாலி ஏந்திவிட்டால், எகிறிக் குதித்து எம்பி வந்து விழும் அவருடைய வாழ்க்கைச் சம்பவ சிந்தனைகள் கோலார் சுரங்கத்திலே கிடைக்கும் கட்டிகளாக மதிக்கப்படுகின்றன.

எழுத்துக்கள், அவரை மீறி இயல்துறையிலே அணிவகுக் கும்போது, இராஜ நடையான அழகும், புகழும் பெற்று உரைநடை என்ற பெயருலாவாக வருகின்றது!

அதே எழுத்துகள், பாடல்களிலே பண்ணோடு இணைந் தால், ஆடற்கலை அழகாகி பரத நாட்டியம் ஆடுகின்றது!

கவி அரங்கங்களிலே களிநடமிடும் அந்த எழுத்துக்கள் அட...டா...வோ, காளமேகனாகின்றது!

சில இடங்களில் கவிதைக்கொரு பொற்றேங்காய் பெற்ற பாண்டவர் பூமி பரணியாகவும் கொம்பூதுகின்றது!

அரிய இத்தகைய ஆற்றலைப் பெற்ற கவிஞர் வாலி என்ற கவி ஒட்டக்கூத்தனைத்தான் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்; அரசு இயல்-இசை-நாடகம் சங்கத்திற்கு தலைவராக்கிப் பெருமைபடுத்தினார்!

அறிஞர் அண்ணா அவர்களால் 'நடிப்பிற்கு இலக்கணம் வகுத்த நடிகை' என்று பாராட்டப்பட்டவர் திருமதி, பி. பானுமதி அவர்கள்!

'வசந்த கோகிலம்' போல அற்புதமாகப் பாடிடும் இசை வாணி பானுமதி, தெனுகு சினிமாத் துறையில் அவர் பாடிய பாவுரமா என்ற பாடல் - ஆந்திர, தமிழக எல்லை சூழ் நிலப் பரப்பு களில் எல்லாம் எதிரொலித்து மக்களை மயங்க வைத்ததும் உண்டு.

திரைத் துறையில் ஆடியும் - பாடியும் - நடித்தும் புகழ் பெற்று வந்த திராவிட முத்தமிழ் கலைஞி பானுமதி! புரட்சி நடிகர் எம்.ஜி.ஆருடன் சில படங்களிலே நடித்த பண்பட்ட நடிகை, எழுத்தாளி, இசைவாணி, கதாசிரியை, இயக்குநி, பரணி ஸ்டுடியோ உரிமையாளி, படத் தயாரிப்பாளி ஆவார்-பானுமதி!

மக்கள் திலகம் தமிழக முதல்வரானவுடன் தமிழக அரசால் நடத்தப்படும் தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிக்கு இயக்குநியாக நியமித்தார் எம்.ஜி.ஆர் - நடிகை பானுமதி அவர்களை!

புரட்சித் தலைவருடன் யார் யார் கலைத் துறையில் ஈடுபட்டார்களோ, அவரை நம்பி வாழ்ந்தார்களோ நட்பாடினார் களோ அவர்களை எல்லாம் மக்கள் திலகம் மறந்தாரில்லை.

அவரவர் திறமைகளுக்கேற்ப வலிய வலிய அரசுப் பதவிகளை அளித்து, ஒவ்வொருவருடைய தனித்தனி ஆற்றல்களுக்குரிய அரசு அங்கீகாரத்தைக் கொடுத்தார்! மதிப்பும் மரியாதையும் தமிழ்நாடு அவர்களுக்கு ஈந்தது!

மக்கள் திலகம், கை, உடுக்கை மட்டுமல்ல; தடக்கை! அதாவது, விசாலமான கை, தாராளமான கை; வள்ளண்மை கை! மனமும் கோடாத மனம்!

தாமரை இலையைத் தாங்கி நிற்க ஆதாரமாக இருப்பது தண்ணீர் - தழைக்கவும் வைக்கின்றது! ஆனால், அந்த இலை மீது ஒட்டுவதில்லை தண்ணீர்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தன்னை நம்பிய எந்த ஒரு தனி மனிதனின் வாழ்வையும், தண்ணீர் போலத் தாங்கி நிற்கும் தத்துவமாகக் காணப்பட்டார்!

தன்னால், வளமோ, பலமோ பெற்றிட்ட மனிதனின் புகழாலோ, செல்வத்தாலோ தாங்கப்பட்டவர் அல்லர் எம்.ஜி.ஆர்.

தாமரையில் பட்ட தண்ணீர் ஒட்டாது; இலையில்! வேண்டுமானால் உருண்டு, புரண்டு, திரண்டு ஒளி ஏற்றிக் காட்டி, பளபளத்துத் தவழும்!

புரட்சித் தலைவரிடம் பயன் பெற்ற பண்பாளர்களிலே பலர், முத்து போன்று தாம் பெற்ற வாழ்வை, அற ஒழுங்கு முறையோடு நடத்துகின்றார்களா என்பதைக் கண்காணிக்கும் சிந்தனைகளாகக் காட்சியளிப்பார் எம்.ஜி.ஆர்.

மறைந்திருந்தாவது அவர்களுடைய வாழ்க்கைச் சம்பவங்களுக்கு மாண்பூட்டி மகிழ்வார்.

திருக்குறள் உலக மக்களின் வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்த உலகப் பேரறத் தமிழ்மறை, நூல்! எந்நாட்டவர்க்கும் எக் காலத்திற்கும் பொது மறையாய் விளங்கும் தகுதி பெற்ற நூல்!

இராமாயணம், திருக்குறளுக்கு இலக்கியமாகத் திகழும் எண்ணற்ற நூற்களிலே ஒன்று! குறிப்பாகக் கூறுவதானால், அதன் ஒவ்வொரு பாத்திரமும் 'அன்புடைமைக்குச் சான்றாக நடமாடுவதைக் காணலாம்! ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாட்டை இராமபிரான் ஓம்பும் நூல்!

கந்த புராணம், திருக்குறளின் 'செய்நன்றி அறிதல்' என்ற அதிகாரத்தின் மீது அடிப்படையாக அமைந்த புராண நூல்!

மகாபாரதம், ஒருத்திக்கு பல கணவர் என்ற அவ்வக்கால நாகரிக வளர்ச்சியை அடையாளம் காட்டினாலும், அதன் ஒவ்வொரு பாத்திரமும் திருக்குறளின் 'அருளுடைமை'யைப் பற்றிப் பேசும் நூல்!

அரசியல் பிழைத்தார்க்கு அறம் கூற்றாவதும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவதும், ஊழ்வினை உருத்து

வந்து ஊட்டும் என்ற நெறியோடு, திருக்குறளின் 'ஊழ்' இயலுக்கு இலக்கியமாய்த் தோற்றமளிப்பது சிலப்பதிகாரம்.

இருப்பினும், அது தமிழர் பண்பாடு. இசை, நாடகம், ஆடற்கலை, நாகரிகம் அனைத்தையும் எதிரொலிக்கும் தமிழக வரலாற்று நூல்!

அரிச்சந்திரா புராணம், திருக்குறளின் 'வாய்மை' என்ற அதிகாரத்திற்குரிய விரிவான இலக்கியம்!

திருக்குறளின் மூன்றாவது பாலான இன்பத்துப் பாலுக்குரிய காப்பியமாக நடமாடுவது ஜீவக சிந்தாமணி!

சேக்கிழாரால் எழுதப்பட்ட திருத்தொண்டர் மாக் கதை என்ற பெரிய புராணம், திருக்குறளின் அறத்துப்பால் அதிகாரங்கள் அனைத்திற்கும் அடிப்படையாக அமைந்த தமிழர் தம் பண்பாட்டு நூல்!

அறுபத்து மூன்று நாயன்மார்களும் மக்களின் வாழ்வியலுக்கும் - தமிழர் தம் தெய்வீகப் பண்புகளுக்கும், அருளுடைமையை அடையாளம் காட்டுகிறார்கள்!

இத்தனை அரும்பெரும் நூற்களுக்கும் மேலாக, அழுது கொண்டே பிறக்கின்ற ஒரு குழந்தை, வளர்ந்து, வாழ்ந்து, வானுறையும், தெய்வமாக விளங்கிட, அது சிரித்துக் கொண்டே சாகும் வரை, உலக மக்களை இயக்கிடும் வாழ்க்கைத் தத்துவமாக இயங்கும் ஓரே ஒரு நூல், உலகில் திருக்குறள் என்ற பொதுமறைதான்!

திருக்குறள் நெறிகளை ஏறக்குறைய அறுபதாண்டுக் காலமாக, தமிழக முழுவதும் குறிப்பாக, டில்லி நாடாளு மன்றத்திலும், ரிஷிகேத்திலும் கடல் கடந்து வாழும் தமிழர் களிடையேயும் அரும்பாடுபட்டு பரப்பி வந்த மேதை திருக்குறளார் வீ. முனுசாமி அவர்கள்.

திருக்குறளாரின் தமிழ் மறைத் தொண்டின் அருமையை அறிந்த முதல்வர் எம்.ஜி.ஆர். டில்லி நாடாளுமன்றத்திலே மீண்டும் திருக்குறாளர் நெறிகள் எதிரொலிக்கட்டும்

என்றெண்ணி, அவரைத் தம் கட்சி வேட்பாளராகத் திண்டிவனம் தொகுதியிலே நிறுத்தினார்!

காலம் செய்த அரசியல் அலங்கோலம், திருக்குறளார் நாடாளுமன்றம் போகும் வாய்ப்பை இழந்ததால், தமிழக முதலமைச்சரான புரட்சித் தலைவர், திருக்குறள்நெறி பரப்பும் மையம் என்ற புதியதோர் பிரிவை, அரசு சார்பாக உருவாக்கி; திருக்குறளார் வீ. முனசாமி அவர்களை இயக்குநராக நியமித்துப் பெருமைபடுத்தினார்!

தமிழக அமைச்சரவை எதுவும், திருக்குறளுக்குச் செய் யாத தொண்டு, அதற்கென ஓர் அமைப்பை நிறுவிய செயல்! அதை மக்கள் திலகம், திருவள்ளுவ பெருமானுக்குரிய தொண் டாகக் கருதி அமைத்தார். குறளாருக்கு மேலும் பெருமையூட்டினார்!

சென்னை, வள்ளுவர் கோட்டத்திலே ஒரு விழா! முதல்வர் எம்.ஜி.ஆர். கலந்து கொள்ளும் விழா! தவத்திரு குன்றக்குடி அடிகளாரும் தமிழமுதை விருந்தாகப் படைத்திட வந்திருந்தார்.

ஆன்மீக உதயவானிலே சைவ தத்துவ நிலவாகப் பவனி வரும் அடிகளார், விழாவிலே சொல்லேருழவம் புரிந்தார்.

“பொய்யா மொழியாய் ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மக்களிடையே பொலிந்து கொண்டு வரும் முப்பால் நூல், இந்திய தேசிய நூலாக்கப்பட வேண்டும்” என்ற, தமிழரின் மான வேட்கையை முதலமைச்சர் முன்பு அவர் முழக்கமிட்டார்.

தமிழர் கருத்துக்களுக்கும், அறநெறிகளுக்கும் கருவூல மாய் நடமாடி வந்த பரங்கிமலை பாரி, அடிகளாரின் ஆசை வேட்கையின் உள்ளுணர்வைப் புரிந்தார்! எழுந்தார் பேசிட!

விழா வரங்கில் ஒரே கையொலி! இடி முழக்கம்! மகிழ்ச்சி ஆரவாரம்! என்ன பேசப் போகிறாரோ எம்.ஜி.ஆர் என்று!

திருக்குறள் உலகப் பொதுமறை: உணருகிறேன் அடிகளாரின் உட்கருத்து உணர்ச்சியை! ஆனால், உலகத்திற் காக வாதாடிடும் சிறப்பும் பொறுப்பும் என்னிடம் இல்லையே!

தமிழ் மறை, தரணிக்கெல்லாம் பொதுமறையாகாமற் போனாலும், இந்திய தேசிய நூலாக வைக்கலாம் - மதிக்கலாம் - மரியாதை கொடுக்கலாம்! அந்த அதிகாரமும் என்னிடம் இல்லையே!

மத்திய அரசிடம் அல்லவா இருக்கிறது? மடி பிச்சை ஏந்தி - நான் மன்றாடினாலும் மாதானுபங்கியின் வைரச் சிந்தனை களை மதிப்பார்களா - மத்திய அரசினர்?

நீங்கள் நினைக்கலாம்; மத்திய அரசு என்னுடன் அரசியலில் கூட்டணியாக இருக்கிறது என்று! இமய சிகரத்தின் முகடைத் தமிழக அரசு என்ற தண்டு கொண்டு தாக்கினாலும் சரிய - வைக்க முடியாது!

மகாத்மா காந்தியடிகளின் சாந்த தத்துவத்தை கடை பிடித்தாலும், நம்மால் சரி கட்டிட இயலாது என்ற இறுதியை, உறுதியாக அறுதியிட்டுக் கூறுகிறேன்! என்னாலோ எனது ஆட்சியினாலோ நடக்காத செயல் இது! என்றுதான் பேசுவார் என்று - விழாக் கூட்டத்தினரும் உரையாற்ற வந்த அறிஞர் களும் கருதினார்கள்! எதிர்பார்த்தார்கள்!

செம்மேனிச் செம்மல் செவ்வேள் போல எழுந்தார்! வேறு எதையும் விளக்காமல் 'திருக்குறள் நூலைத் தமிழ் தேசிய நூலாக்குகிறேன்' என்றார்!

அண்டம் அதிர்ந்ததா - மண்டபம் அதிர்ந்ததா? என்று உணர இயலவில்லை. அந்த இமை கொட்டும் விநாடி களிடையே!

தவத்திரு அடிகளாரும் மக்களோடு மக்களாய், கை கொட்டி மகிழ்ந்தார்! விழா ஒரே களி கோளமாக உருண்டது!

தமிழகத்தின் முதலமைச்சாரக அவர் பன்னிரெண்டாண்டு காலம் இருந்தபோது, உலகமே செய்யாத, நினைத்துகூடப் பார்க்காத சத்துணவுத் திட்டதை ஆரம்பித்தார்.

ஏறக்குறைய 250 கோடி ரூபாய்க்குமேல் செலவு செய்து, 80 லட்சம் பிள்ளைகளுக்குக் கல்விக் கனியமுது வழங்கிடும் திட்டம் தீட்டி செயல்படுத்தினார்! ஏன்?

உணவு இல்லாமல், பள்ளிக் கல்வியை இழக்கும் பாலர்களுக்கு மட்டுமல்ல, பத்து பதினைந்து வயது சிறுவர், சிறுமிகளுக்கும் சேர்த்தே, சத்துணவு போடுமாறு கட்டளையிட்டார்!

சத்துணவு மட்டுமா கொடுத்தார்? உணவை உண்ண தட்டுகள், பள்ளிச் சீருடைகள், இலவசப் புத்தகங்கள், எழுதும் நோட்டுகள், பல் துலக்கிட பற்பொடி, காலுக்குரிய காலணிகள், எல்லாமே கொடுத்து மாணவர்கள் கல்வி பெற மனிதாபிமான உதவிகளைச் செய்தார்!

இப்படி ஒருவர் உலக வரலாற்றில் இருந்தால் உதாரணம் கொடுங்களேன்! அவரைத் தெய்வமாகப் போற்றலாம்!

இலவசக் கல்வி, மதிய உணவு, இலவசப் புத்தகங்கள் போன்றவற்றை கர்ம வீரர் காமராஜர் வழங்கவில்லையா என்று சிலர் கேட்பார்கள்!

இந்தத் திட்டம், நீதிக் கட்சி மெட்ராஸ் ஸ்டேட்டை ஆண்டபோது தீட்டப்பட்டு செயல்பட்ட திட்டமாகும்! அதை அமெரிக்க யுனெஸ்கோ உலக மாமன்றம் பாராட்டுமளவிற்கு விரிவுப்படுத்தியவர் எம்.ஜி.ஆர்.. காமராசர் காலத்தில் தமிழக வருவாய்க்கு ஏற்ப, சில நூறு பிள்ளைகளுக்கு அந்தத் திட்டம் பயன்பட்டது. ஆனால், சத்துணவுக்கு மட்டும் ரூபாய் 250 கோடிக்கு மேல் செலவழித்த அற்புத மனிதன் யார் எம்.ஜி.ஆரைத் தவிர?

'இந்த திட்டம் வெற்றி பெறாது! பள்ளிப் பிள்ளைகளைத் தட்டேந்த வைத்து விட்டானே, பாவி! பெற்றவன் சோறு போட மாட்டானா? சோற்றுப் பிச்சை எடுக்க வைத்து விட்டானே! நடக்குமா? ஆண்டுதோறும் 250 கோடிக்கு மேலே செலவு செய்ய பணம் எங்கே?''

''இந்த ரூபாயை கொண்டு தொழிற்சாலைகளைத் துவங்கலாமே! பணம் பாழாகின்றதே'' என்று ஏகடியம் பேசினார்கள் இரக்கமற்றவர்கள்!

'இந்த திட்டம் வெற்றி பெற, நானும் எனது மனைவி ஜானகியும் துணி ஏந்திப் பிச்சை எடுத்தாவது வெற்றிப் பெறச் செய்வோமே தவிர, நிறுத்த மாட்டோம்'' என்று எதிர்குரல் கொடுத்தபடியே, தான் நினைத்ததைச் செய்து முடித்தவர் மக்கள் திலகம்!

இவை மட்டுமா? இந்தத் திட்டத்தால் சில ஆயிரம் பேருக்கு வேலையும் கிடைத்தன! அவர்களும் தொழிற்சங்கம் கண்டு உரிமைக் குரல் எழுப்பும் நிலையும் உருவாகிவிட்டது! தமிழக வேலையில்லாதத் திண்டாட்டத்தைப் போக்கிட கடுகு அளவாது பயன்பட்டதல்லவா இந்த திட்டம்?

சிறு குழந்தைகளைப் பாதுகாக்கப் பால்வாடி; பெற்றோர் வேலைக்குப் போனால் பிள்ளைகளைப் பேண; சிறு குழூந்தைகள் விடுதி;

ஓய்வூதியம் பெறுபவர்கள், பென்ஷன் அலுவலகம் தேடி, ஓடி, நாய் போலக் காத்திருந்த இழி நிலையை ஒழித்து, அவரவர் வீடு தேடி, தபாலில் பணம் பெறும் மனிதாபிமான உதவியைச் செய்தார்!

விதவைகளுக்கும், வயதான முதியோர்களுக்கும் உணவு, ஊதியம், ஆண்டுக்கு இருமுறை ஆடைகள் வழங்கல், ரேஷனில் இலவச அரிசியைக் கொடுத்தல், படித்தப் பட்ட தாரிகள் வேலையில்லாமலிருந்தால் பண உதவி அளித்தல்!

அரசு ஊழியர்கள் இறந்தபோது வழங்கப்படும் தொகையை உயர்த்துதல்! இவையொத்த எண்ணற்ற உதவிகளைச் செய்தார் எம்.ஜி.ஆர். என்ற மனிதாபிமானி.

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் வளர்ச்சிக்காக இருப தாயிரம் ரூபாயை வழங்கினார்!

பாஸ்கெட் பந்தாட்டக் குழுவினரின் கலையை வளர்க்கப் பத்தாயிரம் ரூபாயைத் தந்தார்!

தீயால் பாதிக்கப்பட்ட சர்க்கஸ் கம்பெனிக்கு ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாயைக் கொடுத்து பேருதவி புரிந்தார்!

வலது கையால் கொடுப்பது இடது கைக்குக்கூடத் தெரியக்கூடாது என்ற இலக்கணத்திற்கேற்ப, அவர் செய்த உதவிகளை நாடு அறிய முடியவில்லை. அவை ஏராளம்! எழுதிடின் பெருகும்!

மழையிலே நனைந்து வண்டி இழுப்பதைப் பார்த்தார் மக்கள் திலகம்; மனம் குமைந்தார்!

அவர்களும் மனிதர்கள்தானே! ஆளை அமர்த்தி ஆள் இழுக்கும் பரிதாப நிலையில், மழையில் நனைந்து உடலைக் கெடுத்துக் கொள்கிறார்களே என்ற மனிதாபிமானத்தால் 'ரிக்ஷாக்காரன்' என்ற படத்திலே நடித்தபோது, ஆறாயிரம் ரிக்ஷா இழுக்கும் தோழர்களுக்கு மழைக்கோட்டுகளை வழங்கினார்; ஏழைகளின் ஏந்தல் எம்.ஜி.ஆர்.

இதற்கு முன்பு, இப்படி ரிக்ஷாக்காரர்கள்மீது அன்பு செலுத்திய; அக்கறை காட்டிய மனிதன் யாராவது வரலாற்றில் உண்டா?

வள்ளல் பாரி வேண்டுமானால், மழையிலே நனைந்து படர முடியாமல் தவித்த முல்லைக் கொடிக்குத் தனது தேரை ஈந்தான் என்று உதாரணம் உரைக்கலாம்! அது இலக்கியம், ரசிக்கலாம்! மனிதநேயமும் கூட!

ஆனால், படித்தவர்களும் - அலுவலகப் பணியாளர் களும் கம்பீரகமாக மழைக்கோட்டு அணிந்து போவதைப் போல, ரிக்ஷாக்காரர்களும் கம்பீரமாக போனார்களே!

இல்லாமையால் தவிக்கின்ற ஏழைகளுக்குக் குறிப்பறிந்து, தன்னாலியன்றதைச் செய்வதுதானே ஈகை?

'விவசாயி' என்ற படத்தில் நடித்த எம்.ஜி.ஆர். ஆட்சி பீடமேறியதும் விவசாயிகளுக்குரிய திட்டங்களையும் தீட்டி, நடைமுறைப்படுத்தினார்! விவசாயிகளைக் கேட்டால் அவை புரியும்!

'மீனவ நண்பன்', 'படகோட்டி' போன்ற படங்களிலே நடித்த எம்.ஜி.ஆர். அவர்கள், மீனவ சமுதாயத்திற்குரிய நல்ல பல உதவிகளையும் ஆற்றினார்! கடலோரப் பணியாளர்களைப் பேட்டி கண்டால் அவை நன்கு தெரியும்!

ஏழைகள் மட்டுமே மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.மீது பற்று காட்டவில்லை! பால் மணம் மாறாத சிறுவர்கள் ஏராளமாக அன்பு கொண்டிருந்தார்கள் ஏன்?

கலை உலகத்திலே புரட்சித் தலைவரை, சிறார்கள் சாதாரண ஒரு நடிகனைப் போல காணவில்லை1

வாளேந்தும் வீரனாக, கோலேந்தும் கலைஞனாக, குத்துச்சண்டை தீரனாக, மாடுபிடு சண்டைபோடும் சங்ககால மறவனாக, புலியோடு பொருதும் கான வேடனாகக் கண்டு களி கொண்டார்கள்!

மேலை நாடுகளிலே எ்ரால்ஃபிளைன், டக்ளஸ் பர்பாங்ஸ் போன்ற நடிகர்கள் வீர விளையாட்டுப் படங்களைத் தவிர, மற்ற படங்களில் நடிப்பதில்லை.

வாட் சண்டையில் ஆங்கிலேயர்கள் தங்களது திறனை எப்படிக் காட்டுவார்கள் என்பதை உலகுக்குக் காட்டும் பொழுதெல்லாம் ஆங்கில நாட்டு மக்கள் அவர்களை வீரத்தின் சின்னங்களாகவே கருதி வந்தார்கள்.

முத்து கடல் மொய்த்த, முத்தமிழ் தொனி முழங்க, நித்தம் இளமையோடு நெடுநாட்கள் இருந்து வரும் தமிழகத்தில் நிலைத்த இரண்டு தத்துவங்கள் உண்டு!

ஒன்று வீரம், மற்றொன்று காதல்! அகம், புறம் என்று அவற்றைக் கூறும் சங்க இலக்கியம்!

அகநானூற்றில் வளையல் ஒலி கேட்கும்! புறநானூற்றில் வாட்கள் ஒலி மோதும்!

புரட்சி நடிகர் அவர்கள், புறத்திலிருந்து வாளை உருவி, தமிழகத்தின் வீரத்திற்குச் சின்னமாகக் கலை உலகில் நடமாடி வந்தவர்!

வறுமையின் அழுத்தம் தாங்க முடியாமல், தமிழர்களின் முதுகுகள் வளைந்து போயிருந்தன!

இந்த இழிநிலையை மாற்றிட, தமிழ் வீரத்தை அந்த பிஞ்சு உள்ளங்களுக்கு எடுத்துக் காட்டியவர் எம்.ஜி.ஆர். என்ற புறநானூற்றுச் செம்மல்!

வாட்போரின் விளக்கத்தை வரலாற்றசிரியரும், சொல் லேருழவரும், நாட்கணக்கில் விளக்கினாலும், தெளிவு பெற முடியாத மக்களுக்கு, சினிமா, நாடகத்தின் ஒரு காட்சி மூலமாக, வீரம் என்பது இதுதான். அதற்குத் தரவேண்டிய விலை உயிர்தான் என்பதை, வீரதீரச்சான்றுகளோடு பார்வைக்குப் பார்வையாக நடித்துக் காட்டியவர் அவர்!

தன்மானம் பறிபோகும்போது, வெகுமானமாக உயிரை சாவுக்கேனும் தந்து, வெற்றியை சன்மானமாகப் பெற்று, சழக்கரைச் சாய்த்திடல் வேண்டும் என்பது, எம்.ஜி.ஆரின் வீரக் காட்சிகளின் கொள்கைகளாகும்!

அதற்கேற்ப அவர் நடிக்கும் திரைக் காட்சிகளிலே எல்லாம், களக்காட்சிகள் கட்டாயமாக இடம் பெற்றன.

கடமை தவறிய கயவனுக்குத் தண்டனையுண்டு என்பதைக் காட்டும் காட்சிகளிலே எல்லாம், அவர் ஆற்றியதும் ஒரு கலைத் தொண்டே!

புரட்சி நடிகரின் வீரப் போர்க் காட்சிகளைக் கண்ட சிறுவர்கள் உள்ளத்திலே பதுங்கியிருந்த துடுக்குத்தனம் பக்குவப்பட்ட வீரமாக மருவியது - எழுச்சிப் பெற்றது!

'புரட்சி நடிகரைப் போல நானும் இருப்பேன்' என்று ஒப்புவமை கூறுகின்ற அளவுக்கு, தெம்பு தொத்திய தோளோடு, வாளேந்திய கரத்தோடு, போர்க் காட்சிகளை அவர்கள் தங்களது வீடுகளிலேயே நடத்த ஆரம்பித்தார்கள்.

எதிர்காலத்தில் அந்தச் சிறார்கள், புறநானூற்றுத் தமிழர்களாக நடமாட, இதுவும் ஒரு போர்ப் பயிற்சியாக மாறி வரும் அல்லவா?

'கோலெடுத்து விளையாடதே தம்பி' என்று பாவேந்தர் பாரதிதாசன் கூறினால், அவரது பேரனோ, ஆடக் கூடாத கோலெடுத்து அவர் கையிலே தந்து, 'வில் கட்டித் தா தாத்தா!' என்றான்.

நெறித்த பார்வையும், நெடுமலைத் தோளும், விரிந்த மார்பும் - விளங்கிய அறிவும், தமிழ் சிரிக்கும் சிந்தனையும் கொண்ட பாவேந்தர் அவர்கள், கோலை வில்லாக்கி - அம்பாக மற்றொன்றையும் கொடுத்துப் 'போருக்குப் போடா பேரா' என்றார்! கவிஞர் வாழ்க்கையில் இது நடந்ததாக அவரே ஓரிடத்தில் கூறினார்.

தமிழகக் கவிஞனுக்கு இந்த உணர்ச்சிதான் தோன்றும். ஆனால், அந்தப் பேரப் பிள்ளையைப் போல எத்தனையோ பிள்ளைகள், எம்.ஜி.ஆர். வாட் புரட்சியால் வீரர்களாக்கப்படும் வீரக் காட்சிகளை, வீட்டுக்கு வீடு ஒவ்வொரு குடும்பமும் பார்த்துப் பார்த்து வியந்தது!

கொள்கை ரீதியாகக் கலை வளர வேண்டும் என்ற தலையாய நோக்குடன், தன்னுடைய வீர வாழ்க்கையை வளப்படுத்திக் கொண்டவர் வீரத்தின் விளை நிலமான எம்.ஜி.ஆர்.

இதைப் புரியாதவர்கள், அவரை 'அட்டைக் கத்தி வீரர்' என்று கேலி பேசினர். பாவம்!

தூய பழக்க வழக்கங்களால் அழகேறிய அவரது திருவுருவம், இளமையுடன் கண்ணாமூச்சி ஆடியது.

அதனால்தான், அமெரிக்க அறுவை சிகிச்சையில் அவரது உடலைப் பிளந்த மருத்துவர்கள், 'இதென்ன இருபத்தைந்து வாலிபனின் உடற்கூறுகளைப் போல இயங்குகின்றதே. அவரது, உடலின் இயந்திரங்கள்' என்று ஆச்சரியப்பட்டனர்! அறிக்கையும் விடுத்தனர்!

"உண்மையான காதல் உள்ளம் கொண்ட ஒருவன், அவனோடு தொடர்புள்ள நாட்டு மக்கள் மத்தியில் வீர உலா

வரும்போது, வயதானவனாகவே காணப்படமாட்டான்'' என்பது இங்கர்சால் என்ற பேரறிஞனின் தத்துவம்!

அதற்கேற்ப புரட்சி நடிகரும் விளங்கினார்! பண்டித நேருவும் காணப்பட்டார்! நேருவாவது, இறுதி நேரத்தில் அரசியல் அதிர்ச்சிகளால் உள்ளம் உடைந்தார் பாவம்!

ஆனால், புரட்சித் தலைவருடைய இளமை கடந்த வயதை வைத்துக் கொண்டு, சிலர் அவர் குணத்தில் கேடிருப்பது போல் கற்பனை செய்து கொண்டு, அவர்களை எப்போதுமே முதுமை விழுங்காது என்ற மயக்கத்தில் அவரை எள்ளலாடினர்!

அவர்களுக்கு ஆண்டவனுடைய வயது என்னவென்று தெரியாது போலும்! இந்த நேரம் வரை இயேசு பிரானுக்கு வயது 2003 ஆகும்!

நிலாவின் வயது என்ன, இளமையானாதா! முதுமை யானதா? அப்படியானால் நேற்று வந்தது திங்கள் அதுவும் தேய்கிறது, வளர்கிறது அல்லவா?

ஔவையின் வயதைப் பார்த்து அறிவைப் பழிக்கும் தமிழ்க் கவிஞனோ, புலவனோ எவனாவது உண்டா?

உண்மையான அன்பு ஒருவர் மீது ஒருவர் வைத்திருந்தால், பழுத்ததால் ஏற்பட்ட பள்ளங்கள் தெரியா! பாசப் பசுஞ்சோலைகள்தான் அவர்கள் பார்வைக்குப் பளிச்சிடும்!

மக்கள் திலகம், பொதுமக்கள் மீது அளவிலாப் பாசம் வைத்திருந்தார்! மக்களும் அவர்மீது எல்லையில்லா கொள்ளை பாசத்தை வைத்திருந்தார்கள். இங்கர்சாலின் தத்துவத்தைப் போல!

இந்தப் பொதுமக்கள் பாசம் என்ற ஒன்றைக் கண்டுதான், முதுமை அவரை நாட அஞ்சியது! சாகும் வரை அவர் இளமை அழகோடுதான் காட்சி தந்தார்!

கோலெடுத்து ஊன்றவில்லை, தண்டுகோடு கூன வில்லை, குறுகவில்லை. தோற் சுருக்கம் எங்கும் சுருண்டு தொங்கவில்லை! நம்ப மறுப்பவர்களுக்கு அமெரிக்க மருத்துவ மேதைகள் விடுத்த அறிக்கையே போதிய சான்றாகும்!

புரட்சித் தலைவர் ஒரு கலைஞர்! கலைஞனுக்குக் கொள்கை அவசியம்தானா? என்ற கேள்வி எழும்போ தெல்லாம் மக்களுக்குக் களிப்பூட்டுதல், கலையின் திறனைக் காட்டுதல், என்பனவற்றையே சிலர் விமர்சனம் செய்கிறார்கள்.

கொள்கை என்ற ஒரு சொல்லை ஆழமாக கவனிக்கும் போது, அதைவிட ஓர் அழுத்தமான பொருள், அதனுள்ளே புதைந்து கிடக்கின்றது என்பது தெளிவாகும்.

களிப்பூட்டுதலும், கலையின் அழகை வெளிக்காட்டு தலும் என்பவை மட்டுமல்லாமல், மக்களில் ஒருவராக இருக்கின்ற கலைஞன், மக்களுக்கு எது தேவை என்பதைப் புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டும் என்பதுமாகும்.

அமைதியான காலத்தில், மக்களுக்குத் தேவையான வறுமையொழிந்த களிப்பு, போர்க் காலத்தில் நாட்டுப் பற்று, இவை போன்ற உருவத்திலே, இன்னபிற ஏற்பட்டாக வேண்டும்.

குடும்பத்தில் உருவாகின்ற வளைவு நெளிவுகள், சமுதாய சீர்கேடுகள், அத்தனையும் போக்கப்பட்டாக வேண்டும் என்று அமைத்துக் காட்டுவதைவிட, அந்த நாட்டின் எதிர்காலத்தை, பொருளாதார வளத்தைப் பாழ்படுத்துகின்ற நிலையில், எதிரிகளின் சூழ்ச்சிகள் அமையுமானால், அந்த சதியை உடைத்தெறிகின்ற வீர காவியத்தை உள்ளடக்கியவன் கலைஞனாக இருக்க வேண்டும்.

உடலுக்கு உயிர் எப்படியோ, அதுபோல - உயிர் வாழ்கின்ற வாழ்க்கை காலத்தில், ஒரு கொள்கையும் கலைஞனுக்கு அவசியமாகின்றது.

புனலற்ற ஆறு, அனலற்ற பகல் - வேர் பாயா மரம் போலாவர் - கொள்கையின் சிறகு விரிக்காமல், கலைவானிலே பறக்க நினைக்கும் கலைஞர்கள் அனைவரும்.

நாடகப் பெரும் புலவரான சேக்ஷ்பியர், வெறும் மனித உணர்ச்சிகளை மட்டும் கதாபாத்திரங்களாக உருவாக்காமல், தேவையான இடங்களில், தான் விரும்பியேற்ற கொள்கை களையும், உணர்ச்சிகளையும் அந்த கதாபத்திரங்கள் வாயிலாக கூறியுள்ளார்; வாதாடியுள்ளார்!

கலைஞன் ஒருவனுக்கே இந்த முறை தேவைப்படும் போது, நடிகர்களுக்கு மட்டும் தேவையில்லை என்று கூறுவானேன்? நடிகனும் கலைஞன்தானே!

வைரம் பாய்ந்த கொள்கையை நாட்டு மக்களிடம் படைத்து, அவர்களது மனப்பூங்காவில் விளையாடும் தென்றலாகக் கலைஞன் மாறுவானேயோனால், நாட்டு மக்கள் ரசிகர்கள் என்ற நிலையில் மட்டும் பின் தொடராமல், கொள்கை விளக்கம் கேட்கும் தொண்டர்களாகவும் அக்கலைஞர்களைப் பொது மக்கள் பின்பற்றுவார்கள்!

தமிழகத்தில் நடந்ததென்ன? புரட்சித் தலைவர் அப்படி நடந்து காட்டியதால்தான் தமிழக மக்களாகிய நாங்கள், அது ஆண்களானாலும் சரி, பெண்களானாலும் சரி, எம்.ஜி.ஆரைப் பின்பற்றிய ஈக்களென மொய்த்தோமே! இந்தக் காட்சிகள் தெரியாதா நாட்டுக்கும் - மற்றவர்களுக்கும்!

புரட்சி நடிகரைக் கட்சியை விட்டு சிலர் தூக்கி எறிந்தபோது, ஏறக்குறைய ஒரு மாத காலம் தமிழகத்தையே ஆடாமல், அசையாமல் பொது மக்களாகிய நாங்கள் ஸ்தம்பிக்க வைத்தோமே - அதை மறந்து விட்டீர்களா?

தமிழக அமைச்சர்கள் எல்லாம் அச்சம் தெளிந்து - வெளியே வந்து, அவரவர் வாயைத் திறக்க எத்தனையோ மாதங்களாயிற்று! மறுக்க முடியுமா இதை?

புரட்சி நடிகரை நாங்கள் புரட்சித் தலைவராக நடமாட விட்டு, எல்லா சக்திகளையும் தவிடு பொடிகளாக்கி, பன்னி

ரெண்டு ஆண்டு காலமாகக் கோட்டைச் சிம்மாசனத்தில் உட்கார வைத்துக் களித்தோமே, எதனால்? மறக்க முடியுமா? தமிழக வரலாற்றால் - இந்த சம்பவங்களை?

தமிழக மக்களின் பெரும்பான்மையோர் மத்தியில் தவழ்ந்து, தழைத்து வருகின்ற அறிஞர் அண்ணாவின் கொள்கை, எங்கள் மனதிலே வேரூன்ற வேண்டும் என்பதற்காக, புரட்சி தலைவர் தன்னுடைய தொழிற் கலையை பயன்படுத்தினார்!

அந்த நிலையில் நாங்கள் எம்.ஜி.ஆரை நோக்கும்போது, அவரது பண்புகள் எல்லாம் அரசியல் சடங்குகளாக அமையாமல் சத்திய சரித்திரச் சம்பவங்களாக நடமாடியதைக் கண்டோம்1

அதனால், தமிழகக் கலை உலக அரசியல், சமுதாய சேவைகளின் தூண்களிலே ஒன்றாக மக்கள் திலகத்தை நாங்கள் மதித்ததால் அவரைப் பின்பற்றினோம்!

ஒப்பனையின் ஒத்துழைப்பால், வெறும் லாபக் கணக்கு போட்ட கலைஞராக மட்டும் எம்.ஜி.ஆர். இருந்திருப்பாரேயானால், அவர் அரசியல் அரங்கில் அடியெடுத்து வைத்தபோதே அவமானப்படுத்தியிருப்போம்! அடிமரம் நெடுமரமாக வீழ்த்தி இருப்போம்! - திருவையாற்று சட்டமன்றத் தொகுதியிலே ஜாமீன் தொகை இழந்த நடிகர் திலகத்தைப் போல!

மனம் விரும்பி ஏற்றுக் கொண்ட அவருடைய கொள்கைக்கு ஒரு துளி இடையூறு எங்களால் நேர்ந்தாலும், தாங்க முடியாதது புரட்சித் தலைவருடைய உள்ளம்.

அதனால்தான், அவர் நடித்த படங்களிலே எல்லாம் மக்களின் வாழ்க்கைக் கொள்கையே முதலிடம் பெற்றது! கலையைத் தனது மனிதநேயக் கொள்கைக்கு ஏவலாளியாகவே எம்.ஜி.ஆர். பயன்படுத்தினார்! -

வெறும் நடிப்பை மட்டும் நம்பி, தனக்கென, ஒரு கொள்கை இல்லாமலேயே எவரும் நல்ல கலைஞனாகத் திகழ

முடியும். ஆனால், அவர்கள் மக்கள் திலகமாக முடியாது. புரட்சித் தலைவராக முடியாது!

அவர்கள் சவத்திற்கு ராணுவம் தலை வணங்காது. இந்திய தேசிய கொடி அவர்கள் உடலைப் போர்த்தாது!

பிண ஊர்வலம் போகும் போது, இலட்சோப இலட்சம் மக்களாகிய நாங்களும் பிரதமரும், பிற முதலமைச்சர்களும், அமைச்சர்களும் பின் தொடர மாட்டோம்!

எனவே, தனக்கென ஓர் இலட்சியத்தை வகுத்துக் கொண்டு : அந்த விஞ்ஞான ரீதியான கொள்கைகட்கு தனது நினைப்பு, நேரம், உழைப்பு, அத்தனையும் கலை உருவில் வழங்குகின்ற எந்த கலைஞனும், மக்கள் திலகமாக முடியும் - இதனை எவரும் மறுக்க முடியாது என்பதற்குரிய சான்றோராக, விளங்கியவர் எம்.ஜி.ஆர். என்றால் மிகையாகா.

சமுதாய சீர்த்திருத்தக் கொள்கைகளை மட்டுமே, திரையுலகில் கூறி வந்த கலைவாணர், நகைச்சுவைக் கோமானாக மறைந்த பிறகு, எத்தனையோ, கலைஞர்கள் திரைவானில் பறந்து பார்த்தார்கள்!

அவர்கள் நடிக்கும்போது மட்டும் மக்களை சிரிக்க வைத்தார்கள். சமுதாயத்தைச் சிந்திக்க வைக்க முடிந்ததா? அதற்கு தனி அறிவு தேவை! சமுதாய உணர்ச்சிப் பிடிப்பும் வேண்டும்.

ஒரு நடிகனுக்கு நிறை புகழைத் தருவது, மக்கள் சேவை ஒன்று மட்டும்தான்! எந்த மக்களிடம் இருந்து அவன் பல இலட்சங்களைப் பணமாகப் பெறுகின்றானோ, அந்த மக்கள் வாழ்க்கை அவதிகட்கு ஆளாகும்போது, வாரி வழங்க வேண்டியது அவனது கடமை! நியாயம்! அறமுமாகும்!

அரசியல்வாதி மட்டும் இதனைச் செய்ய வேண்டும் என்பதல்ல! கலைஞனும்தான் இந்த மனிதாபிமான விதியைச் செய்தாக வேண்டும்!

மக்களிடமிருந்து வசூலானால்தானே கலைஞன் இலட்சோப லட்சங்களைப் பணமாகப் பெற முடியும் - படம் எடுப்பவர்களிடமிருந்து?

இந்த மனம் எந்த கலைஞனுக்கு இல்லையோ, அவனை, தேரைமாந்த காயாக, புழு உள்ள பச்சைக் கல்லாக, உடைந்த சங்காகவே நாங்கள் கருதுவோம்!

புரட்சித் தலைவரிடத்திலே அந்த ஒரு தனி குணம் அமைந்திருந்தது! அதனால்தான், எவரும் பெற முடியாத பிறவிப் பெரும் பேற்றை அவர் பெற்றார்!

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரை மட்டுமா தமிழகத்தின் முதலமைச்சாராக்கினோம்! அவரது அன்பு கலந்த இரு தாய்மார்களையும் அல்லவா, முதலமைச்சர்களாக அமர வைத்தோம்! அழகு பார்த்தோம்! ஏன்?

அந்தத் தாய்மார்கள், மனிதாபிமனம் என்ற எம்.ஜி.ஆரின் வழிகளைப் பின்பற்றிய பரம்பரையிலே தோன்றியவர்கள்! அதனால், அவர்களிலே யாரையாவது ஒருவரை ஆல்போல் எமக்கு நிழல் தர வளர்க்க விரும்புகின்றோம்!

எந்தக் கலைஞரும், நிகழ் கால மக்களைத்தான் கவருவார்கள். புகழெனும் கொழு கொம்புக்கு அலை பாய்ந்து கொண்டிருக்கும் சில கொடிகள், பக்கத்திலே பச்சை மரமாக இருந்தாலும் தழுவும் - பட்டுப் போனதாக இருப்பினும் பற்றும்.

ஆனால், மக்கள் திலகமெனும் மல்லிகைக் கொடியோ, வருங்காலத்தைத் தங்களது வலிமையினால், கல்வி அறிவினால் கைப்பற்றுகின்ற இளைஞர்களையும் கவர்ந்திருக்கின்றது - பற்றியிருக்கின்றது!

எத்தனையோ முல்லைக் கொடிகள், வள்ளல் பாரியின் காலத்தில் படர்ந்தன! எந்தெந்த மரங்களையோ அவை தழுவிக்

கொண்டன! அவற்றையெல்லாமா தமிழகப் புலவர்கள் பாடினார்கள்?

பாரியின் தேர் வருமா? படருவோமா? என்று காலம் பார்த்துக் காத்துக் கொண்டிருந்த அந்த ஒரு முல்லைக் கொடிக்குத்தான், சாகா வரம் பெற்றத் தமிழ்ச் சந்தம் கிடைத்தது!

புரட்சித் தலைவரும் அது போன்ற ஒரு முல்லைச் செடிதான்! அவசரத்துக்காக அவர் எந்த மரத்தையும், தொத்திக் கொண்டதுமில்லை! - தவழ்ந்து கொண்டதும் இல்லை!

நிகழ்காலத்தில் இருப்பவர்கள் - எதிர்காலத்திற்குப் போகாதவர்கள் - இறக்கும் காலத்தை நெருங்குகிறவர்கள்!

சிறுவர்கள் நிகழ்காலத்தின் துவக்கமாகவும, எதிர் காலத்தின் முடிவாகவும் இருப்பவர்கள்!

அத்தகையவர்களைப் புரட்சித் தலைவர் கவர்ந்து விட்டார். காரணம். அவர் இயேசுவின் கொள்கையை இரகசியமாகப் பின்பற்றியவரோ, என்னவோ?

“சிறுவர்களை என்னிடத்தில் வரவிடுங்கள்! ஏனெனில் - அவர்கள் இடது கைக்கு வலது கை வித்தியாசம் தெரியாத வர்கள். அப்படிப்பட்டவர்களுக்கே பரலோக ராச்சியம் உரியதாகும்” என்றுக் கூறிக்கொண்டே. அவரும் புகழ் சொர்க்கத்திற்கு ஏற்றப் பொருளாகி விட்டார்!

புகழ் என்பது, ஒருவரிடமிருந்து ஒருவர் வாங்கிக் கொள்வதோ, தற்காலிகமாக மாற்றிக் கொள்வதோ அல்ல!

‘வெள்ளத் தனைய மலர் நீட்டம்’ என்பது போல, ஒருவனது செயலுக்கேற்பவே அவனுடைய புகழும் அமைகின்றது.

மனித உடலின் சுரத்திற்கேற்ப எவ்வாறு டாக்டருடைய உஷ்ணமானி ஏறுகின்றதோ, அதனைப் போலவே, ஒருவனது பண்புகளுக்கு உகந்தபடி பழக்க வழக்கங்களுக்கு ஏற்றபடி,

ஒழுக்க நடத்தைகளுக்கு முன் மாதிரியாக, பற்றுப் பாசச் செயல்கட்கு ஏற்றவாறு, புகழ் பூக்கின்றது! மக்கள் திலகத்தின் புகழும் அத்தகையதே!

மதவாதப் பிரிவினரைச் சேர்ந்த வைணவர் எப்படி திருநாமத்தை நெற்றியில் போட்டுக் கொள்கின்றனரோ, சைவர் திருநீற்றைப் பூசிக் கொள்கின்றனரோ, கிறித்தவர் சிலுவையைக் கழுத்தில் அணிந்து கொள்கின்றனரோ, இஸ்லாமியர் தலை குல்லாவைத் தரித்துக் கொள்கின்றனரோ, அதுபோல அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவை, எம்.ஜி.ஆர். தனது கட்சிக் கொடியில் பொறித்து, எங்களில் எண்ணற்றோரை அண்ணாவின் வாரிசாக மாற்றி விட்டார்.

தமிழக மக்கள் சந்திக்கப் போகும் பசுமையான எதிர்காலம், மக்கள் திலகம் எம்.ஜி.ஆரைப் போன்ற தனிப்பட்ட நல்ல பண்புள்ள கலைஞர்களாலும், அரசியல் அறிஞர்களாலும் நிர்ணயிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்!

சமுதாய முன்னேற்றத்தின் மொட்டுகள், கிளர்ந்தெழும் தூயவர்களுக்காக மலர்கின்றன. எங்களுடைய நெஞ்சங்களின் எந்த இடங்களிலும் இருண்ட பாகங்கள் இருக்கக் கூடா. எம்.ஜி.ஆர். என்ற ஒளி விளக்கே சுடருதறும்!

பொது மக்களாகிய நாங்கள், தொழ வேண்டிய அன்பு பீடம், எங்களுடைய நெஞ்சங்களாகவே இருக்க வேண்டும். ஆனால், அதற்குள்ளாக எம்.ஜி.ஆர். எதிர்பாராமல் நோய் என்ற காற்றலைகளால் அலைகழிக்கப்பட்டார்! தாக்கப்பட்டார்!

இந்த இக்கட்டான வேளையில் 24.12.1987ஆம் நாளின் எழு ஞாயிறு, வழக்கம் போல வாராமல், கோழி, பூனைகளைப் பிடிக்க வருகின்றவன் பதுங்கிப் பதுங்கி வருவதைப் போல கார்மேக, வெண்மேக மோதல்களுக்கிடையே மாறி மாறி வந்தது!

எங்களுடைய முகத்தோற்றக் காட்சிகள் எல்லாம் தோலுரிந்த ஆடுகளைப் போலவே தொங்க ஆரம்பித்தன!

செத்த கருடனைப் பார்த்து, இனி சாகப் போகும் காக்கைகள் கரைதலைப் போல, கூட்டங்கூட்டமாக எங்களிலே எண்ணற்றோர் கரைந்தோம்! ஓலமிட்டோம்!

எரி நெருப்புக்கு முன்னே குபுகுபு வென்று எம்பி, எம்பிப் படர்ந்து, பரவலாக ஓடும் புகைப் படலம் போல, பொது மக்களாகிய நாங்கள் வீதிவீதியாக, ஊர் ஊராக ஓடி, எம்.ஜி.ஆர். மரண செய்தியைக் கூறி கண்ணீர் உகுத்தோம்!

தமிழக மக்கள் வானத்தை நோக்கி வாய்விட்டுக் கதறினார்கள்! "புரட்சித் தலைவா! பொன்மனச் செம்மலே! 'நீ' போய் விட்டாயா என்று அலறினோம்! அழுது தேம்பினோம்! இருண்ட வானம்தான் தென்பட்டது எங்களுடை விழிகளுக்கு!

நிமிர்ந்த குன்றுகள் போல நெஞ்சுயர்த்தி நடந்த நாங்கள், புரட்சித் தலைவர் இறந்தார் என்ற செய்தி அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்பு, பூகம்பம் கண்ட பூமிபோல நிலை குலைந்தோம்!

புரட்சித் தலைவரே! எம்.ஜி.ஆரே! மக்கள் திலகமே மறைந்து விட்டாயா? என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு ஒப்பாரி வைத்திட்டத் தாய்க் குலத்தின் கண்கள், தடாக நீரூற்றைப் போலக் கண்ணீரைச் சுரந்தன!

"ஏ...! சூரியனே, சந்திரனுக்கு நீ கொடுத்த ஒளியை அபகரித்துக் கொண்டா - கருஞ் சூரியனாக மெல்ல மெல்ல நகர்ந்து வருகின்றாய்?" என்று பரதவித்தோம்!

போர்க் களத்திலே பாய்ந்தோடும் பரிகளைப் போல எம்.ஜி.ஆர். பாசவெறி, சோகவெறி, தெருத் தெருவாக அவரின் மரண முழக்கங்களைக் கரிக்கோடுகளால் வேகவேகமாக கிறுக்கித் தள்ளின!

தமிழகத்தின் பட்டித் தொட்டிகள், நகரங்களின் சந்து முனைகள், வீதிகள், மக்கள் நடமாடும் தார் சாலைகள், அனைத்திலும், மக்கள் திலகம் படங்களை வைத்து, பூ மாலை

சார்த்தி, அவர் உருவாக்கிய கொடிகளை அரைக் கம்பத்தில் தொங்க விட்டு, தலைகுனிந்து, எமது துக்கத்தைத் தூக்கணாங் குருவி கூடுபோல மனம் பதறிப் பதறி ஊசலாடிப் பகிர்ந்து கொண்டோம்!

தமிழர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வீடுகளில் ஏதோ சாவு விழுந்து விட்டதாக எண்ணி, அன்ன ஆகாரங்கள்கூடச் செய்யாமலிருந்த அவலமும் நிகழ்ந்தன!

தமிழ் பண்பாட்டின் தலைமகன் அறிஞர் அண்ணா அவர்கள் இறந்தபோது, அவருடைய தம்பிமார்கள் மட்டுமல்ல, எதிர்கட்சி மக்கள் உட்பட அனைவரும், அண்ணா திருவுருவப் படங்களை, அவரவர் வீடுகளில், வீதிகளில், சாலைகளில், சந்து முனைகளில் எல்லாம் பூமாலைகளால் அலங்காரம் செய்தனர்!

உடைத்த அந்த இரு தேங்காய் மூடிகளை அண்ணா உருவம் முன்பு வைத்து, ஓவெனக் கதறி அழுதனர்! குத்துவிளக்கேற்றி, இரவெல்லாம் அவர்கள் உண்ணாமல் உறங்காமல் வேதனைப்பட்டனர்!

தமிழகத்தில் ஒவ்வொரு சாலைகள், வீதிகள், சந்து முனைகள், மன்றங்கள், படிப்பகங்கள், பொது இடங்கள் அனைத்தும் புரட்சித் தலைவரது திருவுருவத் துயரக் கோலக் காட்சிகளால் தத்தளித்தன!

அவரவர் வீடுகளில், சோகம் விழுந்ததைப் போன்று இரவெல்லாம் கண்மூடாமல், அழுத கண்களோடு, தேம்பியழும் இதயங்களோடு, எங்கள் சிறுவர் சிறுமியரின் ஓலம்! ஓசை!

இதற்கு முன்பு உலக வரலாற்றில் இப்படி ஒரு சாவு நடந்ததா என்றால் அது அறிஞர் அண்ணா ஒருவரைத் தவிர வேறு எவருக்கும் நடந்ததில்லை!

அண்ணா பெரும் பயணத் துயரத்தில் கலந்து கொண்ட அப்போதைய மத்திய அமைச்சர் ஒய்.பி. சவான், திரண்டிருந்த கூட்டத்தைக் கண்டு திக்குமுக்காடி, ''What a huge crowd than Gandhi'' என்று வியந்து பெருமூச்சு வாங்கினார்.

இரண்டாவது தடவையாக, மக்கள் திலகம் சாவு ஒன்றுதான், தமிழக மக்களைத் தட்டி எழுப்பி, மரண ஓலத்தை பந்த - பாசத்தோடு இயக்கியது!

களத்திற்கு அணி வகுக்கப்பட்ட படைகள் போல, நேரமாக ஆக, கண்ணீர் சிந்தும் மக்கள் அணிவகுத்து, நொந்த உள்ளத்தோடு சென்னை மாநகரெங்கும் அலைந்தபடியே சூழ்ந்தார்கள்!

கூடுகின்ற பொதுமக்கள் கூட்டத்தைப் பார்த்து - காவல் துறையும் ராணுவமும் பெருமூச்சு விட்டவாறே ஆங்காங்கே பாதுகாப்பிற்காகத் திரண்டன!

ஒன்றையொன்று நெருங்காமல், தத்தம் பாதைகளிலே ஓடி பூமிக் கோளத்தை இயக்கும் கோள்களைப் போல கண்ணீருடனும், மன வேதனையுடனும் வந்த பொது மக்களும் தொண்டர்களும், தங்கள் தலைவரின் பொன்னார்மேனியைக் காண இரவுப் பகலாகப் பொறுப்போடும், கடமையோடும், அமைதியாக அணிவகுத்துச் சென்றனர் - ராஜாஜி மண்டபம் நோக்கி!

அறிஞர் அண்ணா அவர்கள் திருவருவம் பொறித்தக் கொடிகள் எல்லாம், சென்னை மாநகரமெங்கும் அரைக் கம்பத்திலே தலைகுனிந்து தொங்கி, சோகமே உருவான துயரத்தை எதிரொலித்தப்படியே காட்சி தந்தன!

அறிஞர் அண்ணா அவர்களுக்கு நடந்த அதே சாவு சடங்குச் சம்பவங்கள்; அப்படியே மக்கள் திலகம் மரணத்திலும் தமிழகப் பாச மரபுப்படி நடத்திக் காட்டித் துன்பத்தால் துடி துடித்தோம்! ஒவ்வொரு பட்டி தொட்டிகளிலும், இந்த சோக மயமானக் காட்சிகளே நடந்து கொண்டிருந்தன!

தமது இனத்துள் ஒன்று இறந்துவிட்டால், இறகுகளாலும், சிறகுகளாலும் படபடவென அடித்துக் கொண்டே கூடிடும் வானத்துப் பறவைகளைப் போல, தொண்டர்கள் தலைநகரிலே கூடினர்! குவிந்தனர்!

டில்லி மாநகரிலே புரட்சித் தலைவரின் மரணச் செய்தியைக் கேட்ட இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள், துடிதுடித்துப் பதைத்து சென்னை நோக்கி ஓடி வந்தார்!

''என் தாத்தா பண்டித நேருவின் சிலையை சென்னை அருகே உள்ள ஆலந்தூர் என்ற ஊரிலே இரண்டு நாட்களுக்கு முன்பு நான் திறந்து வைத்தபோது, என்னைப் பாசமொழுகக் கட்டியணைத்து வழியனுப்பி வைத்தாரே,'' என்று கண்ணீர் சொரிய எம்.ஜி.ஆர். திருவுருவ உடலருகே சோகமே உருவாக வந்தமர்ந்தார்!

தேடி வந்தது அசோக சக்கரம் பொறித்த தேசிய கொடி, பொன்மனச் செம்மலின் பொன்னார் மேனியைப் போர்த்திட!

புரட்சித் தலைவரின் இறுதி ஊர்வலம், கர்நாடக நவாப் முகமதலி குளிப்பதற்காகக் கட்டி வைத்த மாபெரும் பங்களாவான ''மரைன்வில்லா'' என்ற பகுதிக்கு, அதாவது, மெரீனா கடற்கரை என்று பெயர் பெற்ற கடற்கரையை நோக்கி புறப்பட்டது.

தலைநகரில் கூடிய தடந்தோள் வீரர்கள் எல்லாம் தன்நிலை மறந்து அழுததைக் கண்ட வானம், பூமழை சொரிந்தது!

தாய்மார்கள், தலைவிரிந்த கோலத்தோடு, அலங்கோல மாகச் சென்ற காட்சியைக் கண்ட பூமாதா, பெய்த பூ மழையால், நலிங்கி, கசங்கி, மிதிபட்டுச் சகதியாக வேதனையுற்றாள்!

முப்படை வீரர்களின் சோக இசை முழக்கம் கேட்டு, காற்றும் சற்று அமைதி காட்டியது. வானத்தோடும், பூ மழையோடும் சேராமல்!

''மனிதனும் தெய்வமாகலாம்'' என்ற மாண்புக்கு புரட்சித் தலைவர் இலக்கணத் திலகமாக வலம் வந்தார்!

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய வானுறையும் தெய்வத்தின் மானிடம், முதலமைச்சராகக் கோட்டைக்குப் போவதற்குப் பதிலாக, முதலமைச்சராகக் கோட்டைக்கு வரும்போது அவர் ஏறி வந்த கார் சங்கநாதம் எழுப்புமே, அதற்கொப்ப, சமாதி நோக்கிச் செல்லுகின்றதோ எம்.ஜி.ஆர். திருவுருவமென்று, மக்கள் கதறியழும் ஓசையோடு மரீனா கடலோசையும் சேர்ந்த காற்று, பெருத்த சோகவோசையை எழுப்பியபடியே இருந்தது!

அறிஞர் அண்ணா அவர்களின் பாதச் சுவடுகள் பிறழாமல் அதன் மேல் நடந்த நன்றியின் நன்மக்கட் திரள்கள் நடுரோடுகளில் வேதனை சூழ, சோக நடை நடந்தபடியே நகர்ந்து வந்தன!

சந்தனப் பெட்டியிலே உறங்கும் நமது சந்ததியின் நாயகனான அறிஞர் அண்ணா சதுக்கத்திற்கு அருகே, மீண்டும் ஒரு சந்தன பெட்டி போகின்றதே என்ற வேக்காட்டு ஒல நெஞ்சங்களோடு, அடிதடி நடக்குமளவிற்கு பாசத் துடிப்பை, சோகப் பதைபதைப்பாக்கி, பிறந்த குழந்தை பீறிட்டழும் முதல் அழுகைக் குரலோசையை மீறிய, மயான அழுகை ஓசையோடு, புரட்சித் தலைவர் புதைகுழியருகே மோதி மோதி நெருங்கி விட்டோம்.

‘‘மலையாளி - மலையாளி’’ என்று எம்.ஜி.ஆரை, வசைபாடிய மாபாவிகளின் புத்திக்கு சொரணை வருமாறு, தமிழ் மக்களுக்காகவே தன் உடல், பொருள், ஆவி மூன்றையும் தந்து, அரசியலில் அழுக்காற்றை எதிர்த்து அதன் இடுப்பை முறித்து, ஆயுள் முழுவதும் போராடி, நல்லாட்சி நடத்திய செந்தமிழ் வேளிர் எம்.ஜி.ஆர். என்ற மூன்றெழுத்து மன்னாடி யார் மரபுப் பிணம், சந்தனப் பெட்டியோடு, தமிழ் பண்பாட்டிற்கேற்ப மண்ணில் அடக்கம் செய்யப்பட்டது!

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். என்ற எழிற்கோவே!

தமிழ்நாட்டு மக்களுக்காக இரவு பகலாய் உழைத்த தண்டமிழ்ப் பாரியே!

பொது மக்களாகிய நாங்கள் மானத்தோடு வாழ வழிகாட்டு என்று. புதைகுழி இறங்கும் அவரின் பூத உடலைப் பார்த்து நாங்கள் வாய்விட்டு கடைசி முறையாகக் கதற ஆரம்பித்தோம்!

கடலலைகளில் புகுந்துவிட்ட காற்றும் சற்று வேகத்தைக் காட்டவே கடலும் தன் பெண்ணலைகளைச் சேர்த்துக் கொண்டு, ஓ, ஓவென ஓசையிட்டு, ஓலமிட்டு, ஒப்பாரி வைத்தது!

"கைம்மாறு கருதாத கார்போல, எம் வாழ்க்கைக்கு கருணை காட்டிய தங்கத் தலைவா! நீ மழை போல வா! உண்ணீர் வழங்கி எம் வறுமைத் தாகத்தைத் தணிக்க வழி செய்!

தென்றலே காற்றாக வீசு! உயிர்க் காற்றாக எம் உடலிலே ஊடுருவு! அரசியல் அரங்கில் இந்த ஈன உடல் 'நாற்றம்' பெற நன்றியுணர்வை நல்கு!

அண்ணா என்ற மூன்றெழுத்தின் வாரிசே! எம்.ஜி.ஆர். என்ற முத்தமிழே!

"தமிழகத்திற்காக, தமிழ்ப் பெருமக்களுக்காக உழைத்த செந்தமிழ் வேளிர் மரபே!

நீ வாழ்ந்தபோது உனக்காக, ஒரு சிறு நினைவுச் சின்னம்கூட அமைத்துக் கொள்ளாத புகழ்த் துறவியே!"

புரட்சித் தலைவர் இறுதி ஊர்வலத்தில், பொது மக்களாகிய எமது நெஞ்சங்கள் மேற்கண்டவாறு புலம்பி ஓய்ந்தன!

இழந்துவிட்ட சாக்ரடீசை மீண்டும் ஏதென்ஸ் நகர மக்கள் தேடுவதை போல்,

சமணத்தைத் தோற்றுவித்த மகாவீரரின் அறநெறிகளை அவனி போற்றுவதுபோல;

பௌத்தத்தின் புனித நெறிகள், பிறந்தகத்தில் புகழ்படா-விட்டாலும், புகுந்த நாடுகளில் புகழ் மண் பூத்துப் புத்தரைத் தேடுவதைப் போல.

அழுது கொண்டே பிறக்கின்ற குழந்தை, சிரித்துக் கொண்டே சாகும் வரை, வாழ்க்கைத் தத்துவ அறநெறிகளைப் போதித்த வள்ளுவர் பெம்மானை நொடிக்கு நொடி சிந்தித்திடும் தமிழ் வையம்போல;

எங்கே எங்கள் இயேசு நாதர், எங்கே எங்கள் இயேசு நாதர் என்று இன்றும் தேடிக் கொண்டிருககும் ஜெருசலேமைப் போல;

கல்லாடித்தக் கரங்களே, கண்டீர்களா மீண்டுமோர் நபிகள் நாயகத்தை என்று, மதினாவும் மக்காவும் இன்றும் தேடிக் கொண்டிருப்பதைப் போல;

இந்திய விடுதலைக்கு வித்திட்ட அமைதியின் நாயகனான காந்தியடிகளை, எங்கே எங்கள் காந்தி என்று ஆண்டாண்டு தோறும் விழா எடுக்கும், ஏக்கக் குரல்களைப் போல;

உடல், பொருள், ஆவி மூன்றையும் தான் பிறந்த நாட்டிற்கு ஈந்து, நல்ல ஜனநாயக வித்தை ஊன்றிட அரும்பாடுபட்ட மனிதருள் மாணிக்கம் பண்டித நேரு பெருமகனாரை, நவம்பர் 14 அன்று தேடிடும் உலகக் குழந்தைகளைப் போல;

அனைத்துலக அரசியல் வரலாற்றில், ‘‘பங்களாதேஷ்’’ என்றதோர் புதிய நாட்டைப் பூகோளப் படத்திற்கே பூதானம் புரிந்த வீராங்கனை, மதச்சார்பற்றக் கொள்கைக்காக தனது இன்னுயிரைத் தந்த எங்கள் இந்திரா காந்தி எங்கே என்று தேடிடும் இந்திய பூபாகத்தைப் போல;

தீவிர வாதத்தைத் தடுத்து நிறுத்திட, தன்னையே மனித வெடி குண்டிற்குப் பலிகொடுத்த ராஜீவ் காந்தியை, எங்கே எங்கள் இளைய தலைமுறை பிரதமர் என்று இந்திய நாடு தேடித்தேடி இன்றும் வருந்துவதைப் போல;

''நீக்கோர இன மக்களும் மனிதர்கள்தாம்! அவர்களுக்குப் பூட்டப்பட்டிருக்கும் அடிமை விலங்குகளை மனித உரிமைச் சம்மட்டியால் அடித்து நொறுக்குவேன்'' நீக்ரோ சமுதாயத்திற்கு விடுதலைப் பெற்று தருவதே எனது நோக்கம்'' என்றதற்காக, நாடகக் கொட்டகையிலே சுடப்பட்டு மாண்ட அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கனை, உலகக் கறுப்பர் இயக்கம், எங்கே எங்கள் லிங்கன் என்று தேடிக் கொண்டிருப்பதைப் போல;

மனித சமுதாயத்தில் கருப்பு - வெள்ளை நிற பேதங்களை உருவாக்கும் மேடு பள்ளங்கள் என்ற உயர்வு - தாழ்வுக் கொடுமைகளை எதிர்த்தொழித்திட, காந்தியடிகளின் அறப் போராட்டச் சுவடுகளைப் பின்பற்றிப் போராடி வந்த மார்ட்டின் லூதர் கிங்கைச் சுட்டுக் கொன்றதற்காகக் கண்ணீர் சிந்தும் நீக்ரோ இனம், எங்கே எங்கள் அமெரிக்க காந்தி மார்ட்டின் லூதர் கிங் என்று கண்ணீர் சொரிவதை போல, ஈழநாடு தேவை என்ற விதையை முதன் முதலாகத் தூவிய இலங்கைத் தமிழர் தந்தை, ஈழத்துக் காந்தி செல்வநாயகம் அவர்களை ஈழத் தமிழர்கள், எங்கே எங்கள் தந்தை செல்வா என்று தேடிக் கொண்டிருப்பதை போல;

தன்மான வாழ்விற்கு சுயமரியாதை ஆடை கட்டி, திராவிடரின் இனமானத்தைக் காப்பதற்காக, தன் வாழ் நாளெல்லாம் போராடி மாண்ட தந்தை பெரியாரை, எங்கே எங்கள் தந்தை பெரியார், என்று திராவிடரினம் தேம்பிக் கொண்டிருப்பதை போல; -

தமிழர் பண்பாடே, அவதாரமெடுத்து, 'நா' மணக்க, நடமாடிய நாவுக்கரசராம் அறிஞர் அண்ணா அவர்கள்,

நாடிருந்தும், அதற்குப் பெயரில்லாமல் தவித்த ஓர் இனத்தின் மானத்தைக் காக்கத், 'தமிழ்நாடு' என்று தான் பிறந்த மண்ணுக்குப் பெயர் சூட்டிய தமிழ்த் தாயின் பண்பாட்டு தலைமகனை, தமிழர் இனம் எங்கே எங்கள் பேரறிஞர் அண்ணா என்று அழுது விம்மி விம்பிக் கொண்டிருப்பதை போல;

பசியெனும் பாவியின் பிணி பீடித்து, ஒரு கோடி மனிதப் பிஞ்சுகளின் கும்பிகள் எரியும் போதெல்லாம், தட்டுகளை ஏந்திக் கொண்டு, தங்கள் வயிறார சத்துணவை உண்டு, கல்வி பெற்றுக் களிப்படையும் நேரங்களில், எங்கே எங்கள் சத்துணவு நாயகன் எம்.ஜி.ஆர். என்றே தேடிக் கொண்டிருக்கும் பள்ளிப் பிள்ளைகளைப் போல;

கொக்கின் தூவி போன்ற பொது மக்களாகிய நாங்கள், மக்கள் திலகம் மறைந்த ஏக்கத்தை, சோகத்தை, துயரத்தை ஆண்டாண்டுதோறும் நினைவு கூர்ந்திட, ஏழ்மையைக் கண்டு வாரி வழங்கிட வேறு யார் இருக்கிறார்கள் எங்களுக்கு என்ற துன்பத்தைப் போக்கி கொள்ள...

எங்கள் தமிழ் ஏந்தலே! நாங்கள் நம்பி நடந்த வாழ்வே!
தொண்டே! அதன் விளக்கமே! தொகையே!
வான் வரவேற்ற வண்மைப் புகழே!
அன்பே! அறமே! பண்பே! முத்தமிழே!
சந்தனப் பெட்டியிலே நீடு துயில் கொள்கின்ற
சந்தன அறிவின் சந்ததியே!

கொடைக் கடனமர்ந்த கோடாத நெஞ்சத்தின் கோயிலாகத் திகழும் பொது மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களின் கல்லறைக் கோயிலைக் காண; ஆறுதல் பெற; நன்றி நவில; எங்கள் நெஞ்சிலே நிலை நிறுத்திட! நாள்தோறும் புனித யாத்திரையாக நாங்கள் எம்.ஜி.ஆர். நினைவாலயத்தை வலம் வருவோம்!


மாய்ந்து மாய்ந்து எழும் மாயை போல, தமிழினத்திற்கு உழைத்து உழைத்து உருகுலைந்த, ''அண்ணாயிசத்தின்'' அருவமே!

மக்கள் நெஞ்சில் எம்.ஜி.ஆர். என்ற சத்தியத்தின் சரித்திரமே! என்றும் தங்கள் சதுக்கத்தில் மக்களாகிய நாங்கள் கூடுவோம்! வாழ்த்துவோம்! வணங்குவேம்! மன ஆறுதல் பெறுவோம் வணக்கம்!


❐ ❐ ❐

குறிப்புகளுக்காக

குறிப்புகளுக்காக



# ஒரு கை விரல்களில் பெருவிரல் போன்றவர்



## உவமைக் கவிஞர் சுரதா

என்னுடைய நண்பர் திரு.என்.வி. கலைமணி அவர்கள், மிகச் சிறந்த எழுத்தாளர், மேடைப் பேச்சாளர் – நல்ல சிந்தனையாளர்.

இலக்கியத் துறைக்கும், மொழிக்கும், நாடகக்கலைக்கும், பத்திரிகைத் துறைக்கும், பாவேந்தர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், புரட்சித்தலைவர் எம்.ஜி.ராமச்சந்திரன் ஆகியவர்களால் பாராட்டப்படும் அளவிற்கு அரும்பணிகள் ஆற்றியவர் அவர்.

நான், சினிமாத் துறைக்கு வருவதற்கு முன்பே, எனக்குப் பழக்கப்பட்ட நண்பர்களிலே அவரும் ஒருவராவார்.

தமிழ்நாட்டில் உள்ள எல்லா அறிஞர் பெருமக்கட்கும் பழக்கமானவர்.

பழக்கமானவர் என்றால், அத்தனை பேரும் மதித்துப் பாராட்டுமளவிற்கு நேர்முகமாகவே பழக்கமான பண்பாளர்.

தமிழ்நாட்டின், அரசியலில் – இலக்கியத்தில், வரலாற்றில் மிகச் சிறந்த வேகமாக, விரைவாக எழுதும் எழுத்தாளர்களை நான் அறிவேன். 'கல்கி', 'தினசரி' ஆசிரியர் டி.எஸ்.சொக்கலிங்கம், 'காண்டீபம்' ஆசிரியர் எஸ்.எஸ். மாரிசாமி ஆகியவர்கள் வரிசையில், நண்பர் புலவர் என்.வி. கலைமணி நான்காவது எழுத்தாளராக என்னால் மதிக்கப்படுவர்.

மனிதனுக்கு ஒரு கையில் ஐந்து விரல்கள் எப்படி இன்றியமையாததோ, அந்த விரல்களில் நண்பர் என்.வி.கலைமணி அவர்கள் பெருவிரலைப் போன்றவர்.

இத்தகைய நண்பர் எழுதிய **மக்கள் நெஞ்சில் எம்.ஜி.ஆர்.** நூலைப் பற்றிக்கூற வேண்டுமோ! நீங்களே படித்து மகிழ வேண்டும் என்பதுதான் எனது அவா.

56அ, இலட்சுமணசாமி சாலை,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை – 600 078.

அன்புடன்

சுரதா